
தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

புரட்டாதி 1994





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மதிப்புக்குரிய எரிமலை ஆசிரியருக்கு,

என் முத்தமிழ் வணக்கத்தையும், பாராட்டு மலர்களையும் சமர்ப்பிக் கிறேன்.

சமீபத்தில் நண்பரின் மூலமாக எரிமலை எனும் அற்புத இதழைக் காணக்கிடைத்தது. தேடிப்போன மூலிகை காலில் பட்டது போன்ற பேரின்பம். ஆம்! ஐயா, நான் பல சஞ்சிகைகள் வாங்கினாலும் தமிழ் ஈழத்தைப் பற்றி போடப்பட்டிருக் கிறதா என்றுதான் ஆராய்வேன். தமிழ்ப் போராளிகள், அவர்கள் திறம்பட நடத்தும் போர்முனைக ளைப் பற்றி வெறும் வார்த்தைகளால் சொன்னால் போதாது. புலி பதுங்கி னால் அது பாய்ச்சலுக்குத்தான் என்று இலங்கை அரசாங்கமே கதிகலங்கிப் போய் நிற்கிறது. இது முற்றிலும் உண்மை.

ஆனால் இங்கு கிடைக்கும் பெரும்பாலான சஞ்சிகைகள் சினிமா வும், அரசியலும்தான். என் போன்ற வாசகர்களுக்கு இது வேதனையைத் தருகிறது.

ஐயா! இந்த எரிமலை எனும் இதழ் போல் நான் எந்த இதழிலும் பார்த்ததில்லை. அதில் உள்ள வேகம், எழுச்சி, வீரம், நம்பிக்கை இவை யாவும் எரிமலையின் தீப்பிழம்புகள். இந்த இதழ் நிச்சயமாக ஒவ்வொரு தமிழன் வீட்டிலும் இருக்கவேண்டிய ஒரு பொக்கிஷம்.

நான் இதுவரை பல பத்திரிகைகள் மூலமாக சேகரிக்கப்பட்ட தமிழ் ஈழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் திருவுருவப் படங்கள், மற்றும் தமிழ் இனத்துக்காக சுயநலம் பாராது தோள்கொடுத்து நிற்கும் தியாக உள்ளங்களான பெண் புலிகள், விடுதலைப் புலி வீரர்கள் அவர்கள் நடத்திய போராட்டம் மிக்க வீரவரலாறுகள் என்பவற்றைச் சேகரித்து வைத்துள்ளேன். இவை யாவையும் ஒருநாள் ஈழத்தின் வெற்றிப் புத்தகமாக வெளியிடத்தான்.

ஒரு வேண்டுகோள்!

தாங்கள் எரிமலை இதழை சிரமம் பாராது எனக்கு அனுப்பி வைக்கு மாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். அவற்றை என் இரு கண்களாக நினைத்துப் பாதுகாப்பேன். 90, 91, 92, 93 ஆண்டுகளில் வெளியிட்டவற்றையும் அனுப்பிவைக்க வும். அவை எனது பொக்கிஷம்.

நன்றி, வணக்கம்.

**அன்புடன்,**
**ஜே. ராஜேந்திரன், மலேசியா**




அன்பின் எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,

தங்களின் ஆனி மாத எரிமலை இதழில் தலையங்கத்தில் 'நீதியான போராட்டமும் அநீதியான அடக்கு முறையும்' பார்த்தேன்.

ஐரோப்பா பாராளுமன்ற தீர்மான முன்னறிவிப்பும் அது தொடர்பான அறிக்கைகளும் உண்மையின் தளத்தில் உருவானவை அல்ல என்றும் தமிழீழப் பகுதிகளுக்கு ஐரோப்பிய பாராளுமன்றக் குழு அனுப்பப்பட்டு மீளாய்வு ஒன்று நடைபெறும் வரை இம்முன்னெடுப்பு இடைநிறுத்தி வைக்கப்படவேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பம் என்றும் தங்கள் இதழில் எழுதியிருந்தீர்கள். எம் தமிழகத்து மக்களின் விருப்பமும் அதுவே.

"துளி கண்ணீர் சிந்து", "ஒடுக்கப் படும் மக்களே ஒடுக்குமுறைக்கெதிராக போராட வேண்டும்" தலைவரின் செய்தி, "இருளை வென்ற பேரொளி", "எம் இதயங்களின் ஆழத்தில் என்றும் வாழ்ந்துவரும் இவர்களின் நினைவு கள்"

எரிமலை கக்கிய நெருப்புக்களில் சிறப்பு நெருப்பல்லவா இச் செய்திகள்.

போராடாமல் வாழ்க்கையில்லை, போராட்டமே வாழ்வின் எல்லை.

யுத்தத்தின் சத்தங்கள் தமிழகத்து தமிழனையும் மாற்றும் நாள் வெகு தொலைவில் இல்லை.

***உரிமைப் போரில் என்றும்***
***பி. சாந்தக்குமார்***
***தமிழ்நாடு.***

அன்பின் ஆசிரியர் குழுவுக்கு,

தங்கள் 'ஆடி' மலரில் 'நானுன்னை இனி எங்கு தேடுவேன்' என்ற எனது கவிதை பிரசுரிக்கப்பட்டிருந்தமை கண்டு மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் மனதினுள் தகித்துக்கொண்டி ருக்கும் நெருப்பு நதியை, சிறிதளவே னும் வெளியேற்ற சிறுவாய்க்கால் அமைத்துத்தந்த 'எரிமலை'க்கு என்னா லான படைப்புக்களை நிச்சயம் அனுப்பிவைப்பேன்.

என் கவிதை உட்பட வேறும் சில ஆக்கங்களில் ஏற்பட்டிருக்கும் அச்சுப்பிழைகள், கருத்துமாற்றத்தை ஏற்படுத்தாத வண்ணம் அமைய முழுமுயற்சி எடுத்தீர்களானால் 'எரிமலை' வானளாவும்! என் வாழ்த்துக்கள்.

நன்றி

***சந்திரா***
***லண்டன்.***

அன்பின் எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,

தங்களது மாத இதழை தவறாமல் படித்துவரும் வாசகர்களில் நானும் ஒருவன். ஈழத்தில் எமது மக்கள் சிங்கள இராணுவத்தால் படும் துயரங்களையும் களத்தில் எமது போராளிகளின் தியாகங்களையும் இவ் எரிமலை இதழ் மூலம் அறியப் பெற்றேன். மேலும் ஆனிமாத இதழில் 'கரும்புலிகள் நினைவுநாளை'யும் நினைவூட்டியதற்காக நன்றி.

உங்களின் இப்பணி தொடர வாழ்த்துக்கள்.

***சுதாகரன்***
***சுவிஸ்.***

அன்பின் எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,

மாதந்தோறும் எரிமலையைத் தவறாமல் படிக்கும் வாசகர்களில் நானும் ஒருவன். ஈழத்தைவிட்டு ஐரோப்பாவில் இருந்தாலும் தமிழை மறந்தவர்களுக்கும் வீண்பழி சுமத்துப வர்களுக்கும் எரிமலை ஒரு நல்ல பாடமாக அமையும். தொடரட்டும் உங்கள் சேவை.

***சிவாக்குட்டி***
***பாரிஸ்***

**அன்புமிக்க வாசகர்களுக்கு,**

மாவீரர் நாளை முன்னிட்டு எரிமலை வாசகர்களிடமிருந்து கதை, கவிதை, கட்டுரை, சிறுகதை என்பன வரவேற்கப்படுகின்றன. 'மாவீரர் நாள்' எனக் கடித உறையின் மேல் குறிப்பிட்டு ஐப்பசி 10ம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்குமாறு அனுப்பிவைக்கவும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பதின்மூன்றாம் ஆண்டு
புரட்டாதி 1994

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42


# பழைய கள்ளு; புதிய மொந்தை

ஸ்ரீலங்கா பாராளுமன்றத்திற்கான தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. கொலைகள், மிரட்டல்கள், வாக்குறுதிகள், கேலிக்கூத்துக்கள், மோசடிகள் - இவை தாராளமாக இடம்பெற்றுள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான, பொதுஜன ஐக்கிய முன்னணி இத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ள போதிலும், அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை. எவ்வளவு தூரம் ஆட்சி மாற்றம் நிகழ்ந்துள்ளது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. காரணம், சர்வவல்லமை படைத்த, நிர்வாக அதிகாரம் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதியே தொடர்ந்து பதவி வகிக்கிறார். அவரிடமே தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சு உள்ளது. பாராளுமன்றத்தைக் கலைக்கவும், பிரதம மந்திரி உட்பட சகல அமைச்சர்களையும் மாற்றவும் அதிகாரம் உடையவராக உள்ளார். ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சித் தன்மையைத் தொடர்ந்து பேணுவதற்காக கொண்டுவரப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவ முறை சிங்கள இனவாதிகள் விரும்பாத, சிறுபான்மை இனக் கட்சிகளிடம் அரசாங்கம் தங்கியிருக்கும் நிலைமையை இத்தேர்தல் கூடுதலாக உருவாக்கியுள்ளது. தொங்கு பாராளுமன்றமாக இருப்பதால், ஜனாதிபதி, இவ்வருட இறுதிக்குள் நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், சிறு கட்சிகளை தம்பக்கம் இழுப்பதன் மூலமோ, தேசிய அரசொன்றை உருவாக்குவதன் மூலமோ தமது கட்சியின் செல்வாக்கை உயர்த்தவும், தனது கட்சியை ஆட்சியில் அமர்த்தவும், தானே மீண்டும் ஜனாதிபதியாக வரவும் முயற்சிப்பார் என்று கூறப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தலுடன், மக்களால் தெரியப்படாத டி. பி. விஜயதுங்காவின் காலம் முடிந்துவிடும் என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பதவியில் அமர்வார் என்றும் நம்பப்படுகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி பெற்றதும், சந்திரிகா குமாரணத்துங்கா பிரதமரானதுமான மாற்றம் நிகழ்ந்தவுடன் தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்குச் சமாதானமாகத் தீர்வு காணலாம் என நம்புபவர்கள் பலர். எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலைப் புலிகளுடன் பேசப் போவதாக தேர்தலின் முன்னரும், பின்னரும் கூட அறிவித்திருந்தார். வெளிப்படையான நேரடிப் பேச்சுவார்த்தையை விடுதலைப்புலிகளுடன் ஆரம்பிப்பது என்ற விடயத்தையாவது முதலில் செய்வாரா என்பதைப் பார்க்கவேண்டும். அப்படிப் பேசுவதற்கு உகந்ததாக, பொருளாதாரத் தடை நீக்கம், யுத்த நிறுத்தம் ஆகியவற்றை இவரால் செய்யமுடியுமா என்பதை ஆராயவேண்டும். மேலும், மாகாண எல்லைகளை மாற்றியமைக்கப் போவதாகக் கூறியுள்ளாரே தவிர, வடக்கு, கிழக்கை இணைப்பதையோ, தமிழர் தாயகத்தை அங்கீகரிப்பதையோ அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் நோக்கவேண்டும். மேலும், ஒற்றையாட்சிக்குட்பட்ட அதிகாரப் பரவலாக்கம் பற்றிக் குறிப்பிட்டுள்ளாரே தவிர, தமிழ் மக்கள் மாற்றீடாகப் பரிசீலிக்கக்கூடிய சமஷ்டித் திட்டத்தைக் கொண்டுவரக் கூடிய அரசியல் சூழ்நிலையோ, அரசியல் யாப்பு அனுசரணையோ இல்லை என்பதையும் நோக்கவேண்டும். பலவீனமான அரசாங்கத்தின் உள்ளும், வெளியிலும் உள்ள சிங்கள இனவாத சக்திகள் சமாதானத் தீர்வுக்கு இடம் கொடுக்குமா? அல்லது பழைய பல்லவிதானா?

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




## எங்கள் முற்றத்தில்
# விடுதலைச் சிட்டேன...

அகிம்சை என்னும் உயரிய ஒழுக்கத்தின்பால் இயங்குவதாக காட்டிக்கொண்டிருந்த இந்தியா தனது கோர முகத்தைக் காட்டியது. நல்லூரில் 15.9.87, அன்று ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தான். ஒரு துளி நீர் கூட அருந்தாது பன்னிரண்டு நாட்கள் அந்த தியாக வேள்வியில் மெழுகாய் உருகினான். அவன் நேசித்த மக்கள் அலையலையாய் அவன் முன் திரண்டார்கள். அவன் மெல்ல மெல்ல உருகி அணைந்து கொண்டு போவதைக் கண்டு துடித்தார்கள். அந்த மக்களின் துடிப்பைக் கண்டு அவனால் பேச முடியாத நிலையிலும் பேசவேண்டும் என்கிற துடிப்போடு அவன் பேசுகையில் "நான் இறந்ததும் விண்ணிலிருந்து அங்கே உள்ள என் நண்பர்களுடன் சேர்ந்து தமிழீழம் மலரப்போகும் அந்த நாளை எதிர் பார்த்துக்கொண்டேயிருப்பேன்." என்று கூறினான். அத்தகைய நம்பிக்கையோடு பயணித்துவிட்ட அந்த வீரர்களின் நம்பிக்கை ஒருபொழுதும் தோற்றுவிடாது. பரிபூரண சுதந்திரத்தை எமது மக்கள் அடைந்தே தீருவார்கள். திலீபன் போன்றவர்கள் மிக அருமையானவர்களே.

"ஒரு புனித இலட்சியம் நிறைவேறவேணும் எண்டதற்காகத் தான் எங்களை நாங்கள் வருத்திக் கொண்டு உண்ணாவிரதம் இருக்கிறம்." எனத் திலீபன் நல்லூரில் உண்ணாவிரத மேடையில், அவனோடு கூட இருந்த கவிஞர் வாஞ்சிநாதன் நீர் அருந்தக் கேட்ட போது அவரிடம் இவ்வாறு கூறினான்.

எமது விடுதலைப் பயணம் அப்படிப்பட்டதுதான். எம்மை மிகக் கடுமையாக வருத்தித்தான் அந்த உயரிய விடுதலையை வென்றெடுக்க முடியும். அதுவே பெறுமதி மிக்கதாயிருக்கும் என்பதை அவனது வாழ்க்கை எமக்கு உணர்த்துகிறது.

எந்த நேரமும் இயங்கிக்கொண்டிருக்கும் அவனது இயல்பு பாரதியார் கண்ட சிட்டுக்குருவியை எண்ணவைக்கும். அத்துணை துடிப்பு, வேகத்துடன் விசையுறத் திரிந்தான். இந்த வேகமும் துடிப்பும் எம் ஒவ்வொருவரிலும் ஆளவேண்டும். அத்தகைய வீரனின் நினைவில் நனைவோம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# தியாகி திலீபனின் வாசகங்கள்

★★ நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற அனைவரும் எமது உரிமையை மீட்பதற்கான பெரும் புரட்சிக்குத் தயாராக வேண்டும்

★★ தமிழ் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும். இல்லையெனில் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகிவிடும்.

★★ விடுதலைப் புலிகள் வாழ வேண்டும் என்றோ, ஆளவேண்டும் என்றோ ஆசைகொள்ளவில்லை. எமது மக்களுக்கு நிரந்தரமான, சுபீட்சமான எதிர்காலம் கிடைக்குமானால் நாம் அனைவரும் மரணிக்கவும் தயாராக உள்ளோம்.

★★ மக்கள் அனைவரும் எழுச்சியடைவார்களாயின் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்கமுடியாது.

★★ எமது உரிமைகளை நாமே வென்றெடுக்கவேண்டும். இதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்கக்கூடாது.

★★ நான் என்னுயிரினும் மேலாக நேசிக்கும் மக்களே! உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிளர்ந்தெழவேண்டும். இங்கு ஒரு மாபெரும் புரட்சி வெடிக்கட்டும்.

★★ எம் எதிர்கால் சந்ததி வாழ நிச்சயமாக எமக்கோர் நாடு அவசியம். இல்லாவிட்டால் எங்களைப்போல்தான் நாளை எமது எதிர்கால சந்ததியும் துன்பப்படும், கருதப்படும்.

★★ நான் ஆத்மரீதியாக உணர்கிறேன். இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் எனது மக்கள் நிச்சயமாக விடுதலையடைவார்கள்.

★★ ஒரு மாபெரும் சதிவலைக்குள் சிக்கி வரும் எம் மக்களை எப்படியாவது விடுவிக்கவேண்டும்.

★★ என் போராட்ட வரலாற்றுச் சாதனைகளையிட்டு நான் மாபெரும் மகிழ்ச்சியும் பூரண திருப்தியும் அடைகிறேன்.

★★ எமது போராட்டத்தை அமைதி தழுவியதாகவோ அல்லது இரத்தம் தோய்ந்ததாகவோ அமையவேண்டுமெனத் தீர்மானிக்கவேண்டியவர்கள் இங்குள்ள முதலாளித்துவ ஆட்சியாளர்களே.

★★ சுதந்திரத்திற்கு விலையாக எங்கள் உயிரையே கொடுக்கத் தயாராக உள்ளோம்.

★★ மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும். அது நிச்சயமாகத் தமிழீழத்தை எனது இறப்பின் மூலம் பெற்றுத்தரும். இதனை வானத்திலிருந்து இறந்த ஏனைய போராளிகளுடன் நானும் பார்த்து மகிழ்வேன்.

★★ மரணம் ஒரு தடவைதான் வரும். அதற்காக மானத்தை விற்றுச் சீவிக்கமுடியுமா? இறப்புக்குப் பயந்து இனத்தை அழியவிட முடியுமா?

★★ இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை இனவாதப் பூதம் விழுங்கும் போது, இந்தியா எமது நிலைப்பாட்டை ஆதரிக்கவேண்டி ஏற்படும்.

★★ எமது மண்ணின் விடுதலைக்காக யார் போராடுகிறார்களோ அவர்களே இந்த மண்ணின் மைந்தர்கள்.

★★ எமது மண்ணின் விடுதலையை நேசிக்காத எவரும் இம் மண்ணை ஆள அருகதையற்றவர்கள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழீழத்தில் திணிக்கப்பட்ட தேவையற்ற தேர்தல்

சிறீலங்காவின் பத்தாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் ஆவணி பதினாறாம் திகதி நடந்து முடிவடைந்துள்ளது. இத் தேர்தல் முடிவின் மூலம் பதினேழு வருட நீண்ட ஆட்சியை ஐக்கிய தேசியக் கட்சி இழந்துள்ளது. சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி, தனது கடும் முயற்சியால் குறைந்த ஆசன வேறுபாட்டில், ஆட்சி அமைக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளுக்குள் அகப்பட்டுக்கொண்ட தமிழ் மக்களைப் பொறுத்தவரை, வழமையான அச்சுறுத்தலையும் நிர்ப்பந்தத்தையும் இத்தேர்தலிலும் எதிர்நோக்கினர். கூட்டுச் சேர்ந்தும் தனித்தும் சொந்தப் பெயரிலும், சுயேட்சைக் குழுவாகவும் போட்டியிட்ட தமிழ்க் குழுக்கள், தமிழ் மக்களினால் சரியாகவே படிப்பிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே திட்டமிட்டுள்ளபடி, சில குழுக்கள் சில ஆசனங்களை படையினரின் ஆதரவுடன் தமக்காக உருவாக்கிக்கொண்டன. வடக்கு கிழக்கில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடத்தப்பட்ட வேடிக்கையான ஜனநாயக(?) தேர்தல் அதில் போட்டியிட்டவர்களாலேயே குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் தமிழ்க் குழுக்கள் மற்றைய குழுக்களை, தமது "கட்டுப்பாட்டுப்" பகுதிக்குள் சுயாதீனமாக இயங்கத் தடையாக இருந்தன என்று முறையிடப்பட்டுள்ளது. சில தமிழ்க் குழுக்கள், இராணுவத்தின் முழுக்கட்டுப்பாட்டுக்குள் யாழ். குடாநாடுவராதவரை அங்கு தேர்தல் நடத்துவது ஏற்புடையதல்ல என்று வழக்குத் தொடுத்ததுடன், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விருப்புடன் தேர்தலில் பங்குபற்றின.

நடந்து முடிந்த இந்தத் தேர்தல், வடக்கு, கிழக்கு மக்களைப் பொறுத்தவரை எந்தவிதமான எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தவில்லை என்பதுடன், தேர்தலுக்கான எந்தவித சலசலப்பையும் அவர்களிடத்து காணமுடியவில்லை. மாறிமாறி ஆட்சிக்கு வரும் சிங்களக் கட்சிகளால் தங்களுக்கு மீட்சியில்லை என்ற அரசியல் தெளிவு தமிழ் மக்களிடம் ஏற்பட்டிருப்பதே இந்தத் தேர்தல் மாயத்தில் அவர்கள் மயங்காமல் இருக்கக் காரணம் என்று கூறலாம்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் நூற்றி ஐம்பது பாராளுமன்ற உறுப்பினர்களை வெற்றிபெறச் செய்தால், இரண்டு வாரத்தில் புலிகளை அடக்குவோம் என்ற விஜயதுங்காவின், கிறுக்குத்தனமான கர்ச்சனைக்கும், தேர்தலில் வெற்றிபெற்றதும் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு இனப் பிரச்சினையைத் தீர்த்துவைப்போம் என்ற சந்திரிகாவின் மூடுமந்திரப் பிரச்சாரத்திற்கும் மத்தியில் இத் தேர்தல் நடந்து முடிந்துள்ளது. அதேவேளை, இரு பிரதான கட்சிகளும் இனப்பிரச்சினை தொடர்பாக இதுவரை எவ்வித தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இனப்பிரச்சினை குறித்த வீராவேசப் பேச்சும், மூடுமந்திரப் பிரச்சாரமும் தமிழ் மக்களை ஆத்திரமுறவோ, அன்றி நம்பிக்கை கொள்ளவோ செய்யவில்லை என்பதுடன் சிங்கள மக்கள் மத்தியிலும் இவ்விரு பிரச்சாரக் கருத்துக்களும் பெரும்பாலும் எடுபடவில்லை என்றே கருதப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருட ஆட்சியில் சலிப்புற்ற சிங்கள மக்களின் ஆட்சிமாற்ற அவாவே இத் தேர்தல் முடிவு என அவதானிகள் கருதுகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்க்கதரிசனமற்ற யுத்தக்கொள்கையும், ஊழல் முறைகேடும், ஜே. வி. பி. ஒழிப்பு என்ற போர்வையில் சிங்கள இளைஞர், யுவதிகள் மேல் மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான கொலை நடவடிக்கைகளும் ஐக்கியதேசியக் கட்சியின் பதினேழு வருடகால ஆட்சியின் வீழ்ச்சிக்கு ஒருவகையில் காரணமாக அமைகின்றன.

தொகுதிவாரியாக நூற்றித் தொண்ணூற்றி ஆறு உறுப்பினர்களும், வாக்கு விகிதாசார அடிப்படையில் தேசியப்பட்டியல் வாரியாக தெரிவுசெய்யப்படும் இருபத்தி ஒன்பது உறுப்பினர்களுமாக இருநூற்றி இருபத்தைந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக இத் தேர்தல் நடாத்தப்பட்டுள்ளது. இதில் பொதுசன ஐக்கிய முன்னணி நூற்றிஐந்து ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி தொண்ணூற்று நான்கு ஆசனங்களையும் கைப்பற்றிக்கொண்டன. சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சி ஏழு ஆசனங்களையும், தமிழர் விடுதலைக் கூட்டணி ஐந்து ஆசனங்களையும் பெற்றுக்கொண்டன. சிறீலங்கா முற்போக்கு முன்னணி ஒரு ஆசனத்தைப் பெற்றுக்கொண்டது. வன்னியில் புளொட் தலைமையிலான ஈரோஸ் (சங்கர்) ரெலோ கூட்டுக்குழு மூன்று ஆசனங்களை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


யும், யாழ். மாவட்டத்தில் ஈ.பி.டி.பி யின் சுயேட்சைக் குழு ஒன்பது ஆசனங்களையும் பெற்றுக்கொண்டது. வன்னி மற்றும் யாழ். மாவட்டத் தேர்தலைக் சர்ச்சைக் குரியதாக கணிக்கப்படுகின்றது. 1981ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் பிரகாரம் ஐந்து லட்சத்து தொண்ணூற்றி ஆறாயிரம் மக்களைக்கொண்ட யாழ் மாவட்டத்தில் பதின்மூவாயிரத்து எண்ணூறு வாக்காளர்களே வாக்களித்துள்ளனர். தீவுப் பகுதிகளிலும், மாதகல், தெல்லிப்பளை, காங்கேசன் துறை போன்ற இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும், யாழ். மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து பிறபகுதிகளில் வாழும் மக்கள் மத்தியில் யாழ். மாவட்டத்திற்கான தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. இதில் பத்தாயிரத்து எழுநூறு வாக்குகளைப் பெற்று ஈ. பி. டி. பி. யின் சுயேட்சைக்குழு ஒன்பது ஆசனங்களைப் பெற்றுள்ளது. சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் யாழ். மாவட்டத்தில் இரண்டாயிரம் வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளான தீவுப் பகுதிகளிலும், மாதகல், தெல்லிப்பளை, காங்கேசன்துறைப் பகுதிகளில் ஆறாயிரத்து ஐந்நூறு பேரே வாழ்கின்றனர். ஆறாயிரம் அளவிலானோர் ஈ.பி.டி.பி. யின் மிரட்டலினால் வாக்குகளைப் போட்டுள்ளார்கள் என்பதை நிரூபிக்க எதுவித ஆதாரமுமில்லை. காரணம், அங்கு தேர்தல் கண்காணிப்பாளர் மட்டுமல்ல ஏனைய போட்டியாளர் எவருமே அனுமதிக்கப்படவில்லை. எனவே குடாநாட்டிலுள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள வாக்கிடத் தகுதியானவர்களின் வாக்குகளை மட்டுமல்ல, வன்னி, கொழும்பு ஆகிய பகுதிகளுக்குக் குடிபெயர்ந்த மக்களின் கணிசமான வாக்குகளையும் ஈ.பி.டி.பி. போட்டிருந்தால்தான் அது பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தொகையான வாக்குகளைப் பெற்றிருக்கமுடியும் என்பது ஆய்வாளர்களின் கணிப்பு. இக்குழறுபடி தொடர்பாக, குடாநாட்டுத் தேர்தலை ரத்துச்செய்யவேண்டும் எனவும், சில குழுக்கள் வழக்கு வைக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளன. அப்படி ரத்துச் செய்வதானால் முழுத் தேர்தலையும் ரத்துச் செய்யவேண்டும் என்ற அரசியல் யாப்பு பிரச்சினையையும் சட்ட அறிஞர்கள் தூக்கியுள்ளனர்.

அறுதிப் பெரும்பான்மை பெறாத, தள்ளாடும் அரசு ஆட்சிபீடம் ஏறியுள்ளது. தமிழ்க் குழுக்கள் அல்லது முஸ்லீம் கட்சியின் ஆதரவுடன் பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சி அமைந்துள்ளது. அதன் தேர்தல் வாக்குறுதிகளான போர் நிறுத்தம், பொருளாதாரத்தடை நீக்கம், பேச்சுவார்த்தை என்பன வெறும் தேர்தல் விஞ்ஞாபனம் மாத்திரமா என்பது போகப் போகத்தான் தெரியும். சகல அதிகாரங்களையும் கையில் வைத்துள்ள ஜனாதிபதி விஜயதுங்கா ஒருபுறம், வலுவில்லாத அரசு ஒருபுறமுமாக பெரும் இழுபறி நிலைக்கான சாத்தியக்கூறுகளே அதிகம். இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் காலம் வரை இந்நிலை தொடரவே செய்யும். அதேவேளை, தமிழ் மக்களின் உரிமைகள் விடயத்தில், புதிய அரசு எவ்வளவு தூரம் திறந்த மனதுடன் முன்னேறும் என்பதும் கேள்விக் குறியே.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாஷைகள் நிறைவேற்றப் படாதவரை, சுதந்திரமான வாழ்வு உறுதிசெய்யப்படாதவரை, தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்படாதவரை இத்தகைய தேர்தல்களை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பதே விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பெரும் பகுதியில், சிறீலங்காவிற்கான பாராளுமன்றத் தேர்தல் விடுதலைப் புலிகள் அறிவித்தது போல் நடத்தப்படவில்லை. எனினும், அங்கிருந்தெல்லாம் உறுப்பினர்கள் தெரியப்பட்டுள்ளமை ஜனநாயக விசித்திரமே.

**- ஜெயா -**

## உலக சாதனை

**யாழ். குடாநாட்டில் தேர்தலில் வாக்காளர் தொகை 596,366. அதில், அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ளோர் 6500 பேர். அப்படி இருக்கும் போது, அரசாங்கத்தின் அடாவடிக் குழுவாக இயங்கிய EPDP 10744 வாக்குகளைப் பெற்று 9 ஆசனங்களைசு வீகரித்துக்கெண்டது. இது ஒரு சாதனை.**

**குடாநாட்டில் பங்குபற்ற விண்ணப்பித்த ஏனைய குழுக்கள், அப்பகுதிகளுக்குச் செல்லாமல் அரசாங்க இராணுவத்தாலும் EPDP யாலும் தடுக்கப்பட்டன. இராணுவத்தாலும், இக் குழுவினாலும் மிரட்டி ஆயுத முனையில் அப்பகுதிகளில் இருந்தோர் வாக்களிக்கப்பட்டனர். அப்பகுதிகளில் இல்லாதோரின் வாக்குகள் எப்படி விழுந்தன?**

**அதில் 9 பேர் யாழ். குடாநாட்டுக்கான பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரியப்பட்டனர். ஒருவர் 8 வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளார். இது ஓர் உலக சாதனை.**

**அடுத்து, இக்குழு தேர்தல் முடிந்தபின் சும்மா இருக்கவில்லை. உடனே குத்துக்கரணம் அடித்தது. வென்று ஆட்சியமைத்த எதிர்க்கட்சியுடன் கூட்டுச்சேர விருப்பம் தெரிவித்துள்ளது. இதன் முந்தைய எஜமான் தலையில் கைவைத்துள்ளார். ஆனால் தொடர்ந்து இவ் ஆயுதம் தாங்கிய வானரக் குழுவால் கஷ்டப்படப்போவது தமிழ் மக்களே.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கரும்புலி மேஜர் நிலவன் (கெனடி)



கரும்புலி மேஜர் ஜெயம்



கரும்புலி மேஜர் திலகன்



மேஜர் சேரன் (அசோக்)

# பலாலியில் வீரகாவியம் படைத்த கரும்புலிகள்



கரும்புலி கப்டன் திரு



கரும்புலி கப்டன் நவரெட்ணம்



கரும்புலி லெப். ரங்கன்



கப்டன் ஈழவன் (ராஜேஸ்)

பலாலியில் உள்ள விமானப் படைத்தளத்துக்குள் கரும்புலிகளின் அணி ஊடுருவிச் சென்றது. அதிகாலை இரண்டு நாற்பத்தைந்தளவில் உள் நுழைந்த கரும்புலி அணி தன் தாக்குதலைக் தொடங்கியது. "பெல்" ரக ஹெலிகொப்ரர் வெடித்துச் சிதறி தீப்பற்றி எரிந்து நாசமாகியது. எமது மக்களின் வாழ்விடங்களின் மீது குண்டுகளைச் சொரியும் கொடியவர்களின் இதயங்களில் இடிவிழுந்தது. குஞ்சு குருமன் என்று பாராது கொட்டுகிற குண்டுக்குள் எத்துணை காலம் எமது மக்கள் இடர்படுவர். பலத்த பாதுகாப்பு அரண்களைக்கொண்ட பலாலிப் படைத்தளம் ஒருகணம் குலுங்கியது. "பவல்" கவசவாகனம் ஒன்றும் முற்றாக அழிக்கப்பட்டது. விமானங்கள் சீற்றம் தணிந்து கீழிறங்கும் தரிப்பிடத்திற்கே கரும்புலிகள் அணி சென்றது. சிறீலங்கா இராணுவத்தினர் ஒவ்வொருவரிலும் இது மீள முடியாத அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஊட்டியது. மிகக் கடுமையான ஒரு சோர்வு நிலைக்கு கொணர்ந்து அவர்களை முடமாக்க முனையும் இத்தாக்குதல் குறித்து சர்வதேச வானொலிகள் தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தன. அவை "சிறீலங்கா ஆயுதப் படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் கேள்விக்குரியதாக்கப்பட்டுவிட்டது." "இத்துணை பாதுகாப்பை மீறி எவ்வாறு விடுதலைப் புலிகள் மையப் பகுதிக்குள் ஊடுருவினர்?", ''விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் அமைந்துள்ள இராணுவ முகாம்களைப் பாதுகாக்கமுடியுமா?".

அங்கிருந்த ஜெற் போர்விமானங்கள் சண்டை இடம்பெறும்போது எழுந்து பறந்துவிட்டதாகவும், விமானத் தளத்தின் கட்டுப்பாட்டு நிலையம் புலிகளின் கையில் விழவில்லை என்றும் அரசாங்கம் மார்தட்டிக்கொண்டது. விமான ஓடுபாதையை நாசம் செய்துவிட்டு, விமானங்களின் தரையிறக்கத்தை நீண்ட நாட்களுக்கு தடைசெய்ததும் பெரிய விடயம்தான். ஆனால், அதிஉயர் பாதுகாப்புக்கொண்ட பலாலியின் எதிர்காலப் பாதுகாப்புக் குறித்தே இராணுவ அதிகாரிகள் கலக்கம் கொண்டுள்ளனர்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# பலாலி படைத்தளத்தை அதிர வைத்த கரும்புலிகளின் சாதனை

பலாலிப் பெருந்தளத்தின் நெஞ்சுக்கூட்டுக்குள் மீண்டுமொரு முறை ஊடுருவிப் புகுந்த கரும்புலிகள் எதிரியின் உயிர்நாடியை உலுக்கியெடுத்து விட்டனர்.

பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட சிங்களப்படையினர் குடியிருக்கும் அப்பெருந்தளம் அன்றைய தினம் - வாந்திபேதி கண்ட கிராமத்தைப் போல அல்லோலகல்லோலப்பட்டது. அதி உச்ச பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த விமான ஓடு பாதையில் வெற்றிகரமாகக் கால் பதித்த கரும்புலிகள் அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உலங்கு வானூர்தி ஒன்றையும், அதை காவல் காத்து நின்ற 'பவள்' கவசவாகனம் ஒன்றையும் தாக்கி அழித்தனர்.

அத்துடன் 'டைனோசர்' போன்ற பலத்தையும் உருக்குக் கோட்டை போன்ற பாதுகாப்பையும் கொண்டமைந்த பெருந்தளமாகவே பலாலி கூட்டுத்தளம் செயற்படுகிறது என்ற சிங்களத் தளபதிகளின் கற்பனையையும் இக் கரும்புலித் தாக்குதல் தகர்த்தெறிந்து விட்டது.

சிங்களப்படைத்துறையை திகைக்கச் செய்துவிட்ட இப்பெருந் தாக்குதலின் போது ஆறு கரும்புலிகளும் இரண்டு வேவுப் புலிகளும் வீரச்சாவடைந்துள்ளனர்.

சிங்கள அரசின் படைபலத்தைப் பொறுத்தளவில் அதன் முதுகெலும்பாக இருப்பது வான்படைதான். இக்கரும்புலித் தாக்குதலின் இலக்கும் வான்படையின் விமானங்களாகவே இருந்தது.

சண்டைகளின் போதும் சரி, குடிமனைகள் மீது குண்டுகள் போடும் வேளைகளிலும் சரி 'அவிழ்த்துவிட்ட எருமைகள்' போல வான்பரப்பில் ஆதிக்கம் செலுத்தும் குண்டுவீச்சு விமானங்கள் தாம் நினைத்த மாதிரி நிலம்மீது போர் தொடுத்து சண்டைகளின் போக்குகளை திசைதிருப்பி விடுவதுடன் மக்களுக்கும் பேரழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

இந்த 'வான் எருமைகள்' ஆகாயத்தில் மேய்ச்சலில் ஈடுபட்டிருக்கும் வேளைகளில் அவற்றை அச்சொட்டாக அடித்து வீழ்த்தும் வசதிகள் புலிகள் இயக்கத்திடம் இல்லாதிருக்கின்றது.

எனவே அந்த வான் எருமைகள் கட்டில் இருக்கும் போதே அவற்றைக் கொன்றுவிடவேண்டும் அல்லது அவற்றின் கால்களை அடித்து நொருக்கி முடமாக்கி விடவேண்டும் என்றதொரு திட்டத்தை வரைந்த தலைவர் அவர்கள் அதை செயற்படுத்துவதற்குரிய தந்திரோபாயங்களையும், பயிற்சிகளையும் வகுத்துக் கொடுத்ததுடன் இத்தாக்குதலை இறுதிவரை நெறிப்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

2-8-94 அதிகாலை 2.45 மணிக்கு கரும்புலிகள் அணி ஒன்று அதை நிறைவேற்றி முடித்தது.

வான்தளம் மீது நடாத்தப்பட்ட தாக்குதலின் இராணுவ பரிமாணத்தை சரியாக விளங்கிக்கொள்ள வேண்டுமாயின் அதை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொன்றையும் தனித் தனியாக ஆராய்ந்து, பின்னர் ஒன்றிணைக்கும் போதே அப் பெருந் தாக்குதலின் இராணுவப் பரிமாணத்தை முழுமையாகக் கண்டுணர முடியும்.

1. வெற்றிகரமான ஊடுருவல்
2. வான்தளம் மீதான கரும்புலித் தாக்குதல்
3. இந்த ஊடுருவலுக்கும் தாக்குதலுக்குமான வேவுப் பணி

இந்த மூன்று பகுதிகளும் இத்தாக்குதல் திட்டத்தின் முக்கிய அங்கங்களாக இருக்கின்றன.

வெற்றிகரமான ஊடுருவல்

பலாலிப் பெருந்தளம் 30 ச.மைல் பரப்பளவுக்கும் கூடுதலான நிலப்பரப்பில் அமைந்திருக்கின்றது. இப் பெருந்தளத்தைச் சூழ பிரமாண்டமானதொரு தற்காப்பு ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

தளத்தைச் சுற்றிவர 30-40 மீற்றர் தூரங்களுக்கிடையில் ஒரு காவலரணும், ஒவ்வொரு காவலரணிலும் தேவையான நேரம் பயன்படுத்தக்கூடியவாறு வெளிச்சம் பாய்ச்சிகளும் இருக்கின்றன. இது தவிர காவலரண்களுக்கு முன்னாலும் இடையிலும் ஏராளமான மிதிவெடிகளும், காவலரண்களுக்கு முன்புறமாக மூன்று அல்லது நான்கு கம்பி வேலிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதேவேளை, தளத்தின் உள்ளே என்ன நடைபெறுகின்றது என்பது வெளியில் இருந்து அவதானிக்க முடியாதபடி 'புல்டோசர்கள்' அமைத்த மண் அணைகளும் பலாலித் தளத்தின் வெளிப்பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றன.

இந்தத் தடைகளையெல்லாம் தாண்டித்தான் ஊடுருவல் செய்யும் ஒரு போராளி உள்ளே செல்ல வேண்டும். அதுவும் சண்டையிடாது இரகசியமாகக் கடக்கவேண்டும் என்பது முக்கியமாகக் கவனிக்கப் படவேண்டிய ஒரு அம்சம்.

பலாலியைச் சூழவுள்ள எந்தவொரு வெளிக் காவலரணிலிருந்தும் மத்தியில் இருக்கும் வான் தளமா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



**பலாலியில் வீரசாதனை படைத்த கரும்புலிகளுடன் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்**

னது பல கிலோ மீற்றர் உள்ளேயே உள்ளது. சில இடங்களில் இந்த இடைத்தூரம் பத்து கி. மீற்றரை விட அதிகமாக இருக்கும்.

வெளிக்காவலரண் பகுதிகளூடாக தளத்தின் உள்ளே புகுந்துவிட்டாலும் கூட உட்பகுதியில் சிதறிக் கிடக்கும் எந்தவொரு சிப்பாய்களது கண்களிலும் படாது, உள்ளே அமைந்திருக்கும் மினி முகாம்கள் மற்றும் ரோந்து அணிகளின் முகத்தில் எத்துப்படாது, அதிகூடிய பாதுகாப்பில் உள்ள வான் தளத்தை அடையவேண்டும்.

இது வெறும் நடைப்பயணம் அல்ல.

இதுவும் ஓர் போர்ச் செயற்பாடாகும்.

இந்த ஊடுவருவற் போர் நடவடிக்கையின் போது- தளத்தின் உள்ளே உள்ள தச்சன்தோப்பு என்ற பகுதியில் அதாவது வான் தளத்திலிருந்து சுமார் பத்துகிலோ மீற்றர் தூரத்தில் வைத்து இந்தக் கரும்புலிகள் அணியை சிங்களச் சிப்பாய்கள் சிலர் கண்டுவிட ஒரு திடீர் சண்டை மூண்டுவிட்டது.

1ம் திகதி மாலை 6.30 மணியளவில் தளத்தின் உள்ளே நடந்த இத் திடீர் துப்பாக்கிச் சண்டையால் முழுத்தளமுமே உசார்படுத்தப்பட்டது. இந்தச் சண்டையை சமாளித்துவிட்டு தொடர்ந்தும் வான்தளத்தை நோக்கி அந்த அணி நகரத்தொடங்கியது. அன்றிரவே நடுச்சாமம் கழித்து 2.45 மணியளவில் வான்தளத்தைச் சென்றடைந்துவிட்ட கரும்புலிகளணி அங்கிருந்த பாதுகாப்பு வியூகங்களையும் உடைத்தெறிந்துவிட்டு கட்டிக்கிடந்த வான் எருமைகளைத் தேடும் பணியைத் தொடங்கியது. சண்டை ஆரம்பமாகிவிட்டது.

## வான்தளம் மீதான கரும்புலித் தாக்குதல்

இந்த தேடுதல்வேட்டை இலகுவானதாக இருக்கவில்லை. சுமார் இரண்டு கிலோ மீற்றர் நீளமும் 500 மீற்றர் அகலமும் கொண்ட விமான ஓடுபாதையுடன் கூடிய தளப்பகுதியில், நடுநிசி இருளில் நாற்புறமு[ம்] இருந்துவரும் துப்பாக்கி ரவை மழைக்குள் எங்கே விமானங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதை தேடிக்கண்டுபிடிப்பது சாதாரண விடயமல்ல. இருட்டறைக்குள் வெறுங் கண்ணால் ஊசியைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு ஒப்பா[ன]து. அது வெறும் தேடலல்ல சண்டையிட்டபடி தேடவேண்டும் கண்ணில் பட்டதும் இருளுக்குள் குறிவைத்துத் தாக்கி அழிக்க வேண்டும்.

ஒரு உலங்குவானூர்தியையும் அதற்குப் பாதுகாப்பாக நின்ற 'பவள்' கவச வாகனத்தையும் நொருக்கித் தள்ளிய கரும்புலிகள் அந்த 2. கி.மீ நீள- 500 மீற்றர் அகல விமானத்தளத்தில் குண்டுவீச்சு விமானங்களைத் தேடி வேட்டையில் இறங்கிய போதே தளத்தின் ஒரு மூலையில் இருளில் பதுங்கிக் கிடந்த இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் வெளிச்சங்களின் உதவியின்றியே ஓடுதரையில் ஓடி

www.tamileelamarchive.com

மேலெழுந்து தப்பிச்சென்றுவிட்டன.

முன்னர் கூறியபடியே விமானத் தளத்தை அண்மிக்க முன்னரே நடந்த திடீர் சண்டையால் தளப் பகுதி முழுவதுமே உசார் நிலையில் வைக்கப்பட்டது. இதன் காரணமாக விமானங்களின் அருகிலேயே தயாராக கண்விழித்து இருந்த விமானிகள் ஓடுதரையின் ஒரு மூலையில் வைத்து உலங்குவானூர்தி தாக்கப்பட்டதுமே விமானங்களைக் கிளப்பிக்கொண்டு தப்பிச் சென்றுவிட்டனர்.

இவ்வளவும் நடைபெறும் போது வந்த அணி திரும்பிச் செல்வது பற்றி கற்பனையே செய்துபார்க்க முடியாது. அதனால்தான் கரும்புலிகள் அணி தாக்குதலுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## தாக்குதலுக்கான வேவுப்பணி

தளத்துக்குள் ஊடுருவிச் செல்வது முதல் விமானத்தளத்தை பாதுகாப்பாக அடைவது வரை, போகும் பாதையைக் கண்டறிந்து, தேவையான தகவல்களைப் பெற்றுக் கொடுத்து, தாக்குதல் அணியாகிய கரும்புலிகள் அணியை வெற்றிகரமாக உள்ளே கூட்டிச்சென்ற வேவு வீரர்களது பணி இத் தாக்குதல் திட்டத்தின் முதுகெலும்பாக இருந்தது. வேவுவீரர்கள் அப்பணியை திறம்படச்செய்தனர். மேஜர் சேரன் (அசோக்), கப்டன் ஈழவன் (ராஜேஸ்) ஆகிய இரு புலிகளும் இந்தத் தாக்குதலில் வீரச்சாவடைந்தனர்.

## கரும்புலி வீரர்களது நெஞ்சுரமும் ஈகமும் பாசமும்

எந்த இடத்திலும், எந்த வேளையிலும், எந்த வடிவத்திலும் தாய் மண்ணிற்காக சாவைச் சந்திக்கத் தயாராக இருப்பவர்கள்தான் எங்களது கரும்புலிகள். கரும்புலிகள் அணியில் இணைந்து கொண்ட பின்னரும் 'என்னை முதலில் விடு' என்று அடம் பிடிக்கும் தீரநெஞ்சம் கொண்டவர்கள் அவர்கள்.

கரும்புலியாகச் செல்லும் அந்த இறுதிக் கணத்திலும் எந்தவித சலனமோ, பதற்றமோ இல்லாது

**"இந்தக் கரும்புலித் தாக்குதலுக்கும் கனபேர் போக விரும்புறதால 'லொத்தர்' போட்டுத்தான் ஆட்களைத் தேர்ந்தெடுக்கப் போவதாக தளபதி சொல்லுகிறார். இது சரிவராது. எனக்கு சிலவேளை 'லொத்தர்' விழாமலும் விட்டிடும். எனவே லொத்தர் போடாமலே என்னைத் தேர்ந்தெடுக்கச் சொல்லி தளபதியிட்ட கேக்கப்போறன்"**

சலனப்பட்டு - வேதனைப்பட்டு நிற்கும் சக தோழர்களைத் தேற்றி, 'பம்பல்' அடித்துச் செல்லும் அந்தக் காட்சிகள் சாதாரண மனிதர்களுக்கு நம்பவே கடினமாக இருக்கும்.

சண்டைக்குத் தேவையான பொருட்களை ஒரு பயணப் பொதிக்குள் வைத்து தாக்குதலுக்குச் செல்லத் தயாராக இருந்த கரும்புலிகளைப் பார்த்து 'என்ன பயணம் புறப்பட்டாச்சோ?' என்று தளபதி கேட்க ஒரு கரும்புலி வீரன் சொன்னானாம்:

"ஓம் பயணம் புறப்பட்டிட்டம்

நீண்ட பயணம்

கிட்டண்ணையிட்டைப் போறம்."

தளத்தினுள் ஊடுருவிச் சென்று கொண்டிருந்த கரும்புலிவீரர்களை எதிரியின் நிலைக்குச் சமீபமாக ஒரு குறிப்பிட்ட தூரம்வரை சென்று அவர்களை இறுதியாக வழியனுப்பி விட்டுத் திரும்பிய இன்னொரு தளபதியிடம் ஒரு கரும்புலி வீரன் சொன்னானாம்:

"அண்ணை கவனமாகப் போங்கோ"

இதேவேளை தான் நேசித்த தன்னை நேசித்த தன் அன்புக்குரியவளுக்கு ஒரு இறுதிக் கடிதத்தை கொடுத்துவிட்டுச் சென்றான் இன்னொரு கரும்புலி.

இக் கரும்புலித் தாக்குதலுக்கு தலைமை ஏற்றுச் சென்ற மேஜர் கெனடியினது மன உணர்வு பற்றி அவருடன் கூட இருந்த போராளி சிலவற்றை நினைவுகூர்ந்தார்.

வான்தளம் மீதான கரும்புலித் தாக்குதலுக்கான ஆரம்ப வேலைகள் நடந்துகொண்டிருந்த போது ஒரு நாள் கெனடி சொன்னானாம்:

"இந்தக் கரும்புலித் தாக்குதலுக்கும் கனபேர் போக விரும்புறதால 'லொத்தர்' போட்டுத்தான் ஆட்களைத் தேர்ந்தெடுக்கப் போவதாக தளபதி சொல்லுகிறார். இது சரிவராது. எனக்கு சிலவேளை 'லொத்தர்' விழாமலும் விட்டிடும். எனவே லொத்தர் போடாமலே என்னைத் தேர்ந்தெடுக்கச் சொல்லி தளபதியிட்ட கேக்கப்போறன்" என்றாராம்.

விரும்பியவாறே கெனடிக்கு அந்த சந்தர்ப்பமும் கிடைத்தது. தனது சக கரும்புலித் தோழர்களை ஒருங்கிணைத்தவாறு வான்தளத்தினுள் தாக்குதல் தொடங்கிய விதத்தையும் எப்படி கள நிலமை உள்ளது என்ற விபரத்தையும் 'வோக்கி' மூலம் அறிவித்துக்கொண்டிருந்த போது கெனடியின் குரலில் இருந்த உறுதியும், நிதானமும், தெளிவும் கேட்டோரை மெய்சிலிர்க்கச் செய்தது.

தாக்குதலின் இறுதிக்கட்டத்தில் குண்டடிபட்டு நகர இயலாத நிலையில் தன்னைத்தானே தகர்க்கப் போகும் அந்த இறுதி வேளையில் வோக்கியூடாக கெனடி இறுதியாகக் கதைத்தான்.

**"எனக்கு இரண்டு காலும் இல்லை. புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**

இந்த வார்த்தையுடன் தளத்துக்குள் சென்ற கரும்புலிகளின் குரல் பின்னர் வான் அலையூடு வரவேயில்லை.

**ஈழநாதம் (6-8-94)**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




## புது வீச்சும் - தனி அழகும் - தனித்துவமும் வாய்ந்த

# கலைஞர் தேனிசை செல்லப்பா

**தமிழ் உணர்வுமிக்க தமிழகக் கலைஞர்களில் முதன்மையானவராகத் திகழும் எழுச்சிப் பாடகரான அண்ணன் தேனிசை செல்லப்பா அவர்கள் ஐரோப்பாவில் அகதிகளாய் அல்லலுறும் தமிழீழ மக்களின் அவல வாழ்வினை நேரடியாகக் கண்டுகொண்டார். தன் உணர்ச்சியாலும், உள்ளத்தாலும் தன் இனிய இசையாலும் அந்த மக்களின் உணர்வுகளில் கலந்தார்.**

**நீண்டகாலமாக எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் அவர் குறிப்பிடத்தக்க அளவு பங்குகொண்டிருக்கிறார் என்று கூறினால் மிகையாகாது.**

**''சாகின்றாய் தமிழா உன்னைச் சாகச் செய்பவனை சாகச் செய்யாமல் சாகின்றாய் தமிழா'' என ஆதங்கப்படுகின்ற அந்தக் கலைஞரோடு எரிமலை வாசகர்களிற்காக உரையாடியபோது.....**



*நீங்கள் ஐரோப்பாவிற்கு வந்துள்ளீர்கள். குடும்பத்தை விட்டு பிரிந்து வந்ததும், இந்தப் பயணமும் உங்களுக்குக் கடினமாக இருக்கவில்லையா?*

நான் என்னுடைய மகன், மகள் ஆகியோர் வந்திருக்கிறோம். துணைவியார் மாத்திரம் அங்கு தனியாக உள்ளார். துணைக்கு யாரும் இல்லைத்தான். இருந்தாலும் அவங்களே எங்களுக்கு தைரியம் சொல்லி அனுப்பிச்சாங்க. "இயக்கத்தில் இருந்து நமக்கு உத்தரவு வந்திருக்கு, அதனால நீங்க இன்னும் ஆவேசமாப் பாடணும். வெளிநாட்டில இருக்கிற நம்ம மக்களுக்கு நீங்க இந்தக் கருத்துக்களை எல்லாம் பரப்பணும். இந்தப் பாட்டெல்லாம் தமிழ்நாட்டில 3 வருஷமா உங்களால பாடமுடியாமப் போச்சுது. அங்கேயாச்சும் நீங்க எங்கட மக்களுக்கு எடுத்துச் சொல்லி நல்ல பேரும் புகழோடும் வரணும்." அப்பிடின்னு எங்களுக்குத் தைரியம் சொல்லி அனுப்பிச்சாங்க. அவங்க தான் தனிமையா இருக்கிறாங்க எண்டதை நினைச்சுக்கூட ஒண்ணும் பயப்படல்ல.

*1990ம் ஆண்டில் தமிழீழத்திற்கு அண்ணன் தேனிசை செல்லப்பா அவர்கள் சென்றிருந்தார். அங்கும் பல இசை நிகழ்ச்சிகளை நடாத்தியிருந்தார். அந்த பயண இசை நிகழ்ச்சியின் அனுபவத்தை எம்மோடு பகிர்ந்து கொண்டபோது,*

நான் விடுதலைக்காக, தமிழீழ விடுதலைக்காக நான்கு சுவர்களுக்கு மத்தியிலே பாடிக்கொண்டு இருந்தேன். இதனுடைய உணர்வு என்ன? மக்கள் இதற்கு எப்படி செவிசாய்க்கிறார்கள்? இதன் தாக்கம் எப்படி அவர்களுக்கு இருக்கிறது? என்று நான் அறிந்துகொள்ள முடியாத நிலையில் இருந்தேன். அந்த 90ம் ஆண்டில் எனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி நேரடியாகத் தமிழீழத்திற்குச் சென்று 8 மாவட்டங்களிலும் லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் நான் அந்தப் பாடல்களைப் பாடுகின்ற போது அவர்கள் செய்த அந்தக் கரகோஷமும், வரவேற்பும், உணர்வும் எவ்வளவு தூரம் நம்முடைய பாடல்கள் நம்முடைய இன மக்களுக்கு உணர்வை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதை நேரடியாகக் கண்டுகொண்டேன். அதிலிருந்து ஆவேசமாகப் பாடவேண்டும் என்ற உணர்வை நான் தமிழீழத்திலிருந்து பெற்றேன்.

*கடந்த காலங்களில் எழுச்சிப் பாடல்களை பாடிக் கொண்டிருந்த சூழ்நிலைக்கும் தற்போதைய நெருக்கடி நிறைந்த சூழலுக்குமிடையே ஏதாவது தாக்கம் உண்டா எனக் கேட்டபோது,*

www.tamileelamarchive.com



கடந்த காலத்தில் எந்த வேகம், துடிப்போட பாடிக்கொண்டு வந்தேனோ அதே வேகம், அதே துடிப்போடதான் இன்றைக்கும் பாடிக்கொண்டு வருகின்றேன்.

**தமிழ் மக்கள் மத்தியில் விடுதலைப் பாடல்களும் இசையும் ஏற்படுத்தி வருகிற தாக்கம் குறித்தும், பாரதிதாசனுடைய பாடல்கள் குறித்தும் தனது கருத்தை எம்மிடம் தெரிவிக்கையில்,**

நம்ம புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய கருத்துக்களும் உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தனுடைய பாடல்களும் தமிழ்நாட்டு இளைஞர்கள் மத்தியிலே மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறன. அதுவும் என்னுடைய இசைநாடா என்று வந்தால் அதை அவர்கள் ஒவ்வொருவரும் வாங்கிக்கேட்டுப் பயன்பெறுகிறார்கள்.

எனக்குப் பல கடிதங்கள் வருகின்றன.

உதாரணத்துக்கு நம்முடைய புலிப்படை இயக்கத்திற்கு தமிழ்நாட்டில் தடைபோட்டு விட்டார்கள். அந்த நேரத்திலே இந்தப் பாடல்களை எனக்குப் பாடமுடியாத நிலை ஏற்பட்டபோது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய பாடல்களை எடுத்து நான் நாடா செய்தேன். அது தமிழ்நாட்டு அரசாங்கத்தால் நாட்டுடமை ஆக்கப்பட்டுள்ளது. அந்தப் பாடல்களை அவர்கள் தடைசெய்யமுடியாது. தடைசெய்தால் மிகப்பெரிய கிளர்ச்சி தோன்றும். ஆகவே இந்தப் பாடல்களை நான் எடுத்துப் பாடினேன். 58 லிருந்து 60, 61 காலகட்டங்களில் எழுதப்பட்ட பாடல்கள் அவை. அந்தப் பாடலிலே புரட்சிக் கவிஞர் சொல்லுகிறார்.

*"தமிழ்நாட்டில் அயலவர்க்கினி என்ன வேலை,*
*தாவும் புலிக்கொரு நாய் எந்த மூலை" என்று.*

இன்னொரு பாடலிலே

*"பாக்கியம் பெற்றவன் நீதான்*
*புலி நீதான், சிங்கம் நீதான்*
*இந்தப் பாராண்ட மறத்தி உன்தாய் தான்.*
*தமிழ்ப் பண்பாட்டை மிதிப்பவன்*
*பழிவாங்கப்படவேண்டும்*
*சும்மா இருந்தால் நீ ஒரு நாய்தான்"*

என்கிறார்.

இன்னொரு பாடலிலே

*"நற்றமிழ் என்பது டில்லிக்கு ஆகாது*
*நம் அமைச்சருக்கும் காது கேளாது*
*புற்றிலே மோதினால் பாம்பு சாகாது*
*புறப்படட்டும் புலிகள் இப்போது..."*

என்று சொல்கிறார்.

அடுத்து,

*"தமிழுக்கு நீ செய்யும் தொண்டு*
*நின் பகைமீது பாய்ச்சிய குண்டு*
*தமிழனை எதிர்க்கும் பீரங்கிக்குண்டு*
*சமையலறையின் முள்ளங்கித் தண்டு"*

என்கிறார்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


அடுத்து,

*"சாகின்றாய் தமிழா உன்னைச்*
*சாகச் செய்பவனை சாகச் செய்யாமல்*
*சாகின்றாய் தமிழா" என்று சொல்கிறார்*

அடுத்து

*"தமிழன் என்றால்*
*தமிழ் நாட்டுடன் நில்லு - இல்லை*
*தாய் உன்னை யாருக்குப் பெற்றாள்*
*உண்மையைச் சொல்லு*
*ஒண்ட வந்த கூட்டம் உன்னைப் பழித்தால்*
*கை ஓங்கி அறையடா*
*மண்ணில் உதிரட்டும் பல்லு"*

என்று சொல்லுகிறார்.

இப்படிப்பட்ட இன எழுச்சிப் பாடல்களை நாடாக்கள் செய்து மேடையில் பாடிவருகிறேன். அதேபோல் உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தன் அவர்களது வீர ஆவேசமான வரிகள் தமிழ் மக்கள் மத்தியிலே வேகமாகத் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.



**பாரதிதாசன் போன்ற கவிஞர் வரிசையில் இன்றைய தமிழ்க் கவிஞர்களில் யார் யாரை குறிப்பிட்டுச் சொல்வீர்கள் என்று கேட்டபோது,**

நிச்சயமாக அது உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்தான். இது என்னுடைய கருத்தல்ல, தமிழ்நாட்டு மக்களுடைய கருத்து. அதாவது எப்படி புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய பாடல்கள் வந்து ஒரு மிகப்பெரிய எழுச்சியை உண்டுபண்ணியதோ அதேபோல் கவிஞர் காசிஆனந்தனுடைய பாடல்கள் உண்டுபண்ணிக்கொண்டிருக்கிறன. அதற்கு உதாரணத் துக்கு ஒன்று சொல்லணும். 1938 லிருந்து இந்தி ஒழிக! தமிழ் வாழ்க! என்று சொல்லிட்டு வர்றாங்க. இந்தியும் ஒழியல்ல, தமிழும் வாழல்ல. ஆனால் இந்தியினால் 25% தமிழ் அழிக்கப்படுகிறதென்றால், ஆங்கிலத்தினால் 50% தமிழ் அழிக்கப்படுகிறதென்ப தில் எந்தவித கருத்துவேறுபாடும் இருக்கமுடியாது. அதை உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தன் எப்படிச் சாடுகின்றார் என்று இந்தப் பாடலின் மூலம் நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

*"தமிழா நீ பேசுவது தமிழா..*
*அன்னையை தமிழ் வாயால்*
*மம்மி என்று அழைத்தாய்*
*அழகுக் குழந்தையை பேபி என்று அழைத்தாய்"*

என்று பாடலை முழுவதுமாகப் படித்துக் காட்டிவிட்டு இப்படிப்பட்ட பாடலைக் கேட்டால் நிச்சயம் உணர்ந்து திருந்துவார்கள். இந்தப் பாடல் எல்லாம் சட்டம் போட்டு வீட்டு முகப்பில் மாட்டவேண்டும் என நான் எல்லாத் தமிழ் மக்களையும் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

அவரது வார்த்தைகளை நாம் எடுத்துக்கொண்டால், அவரது வேகமும் துடிப்பும் ஒரு விடுதலைக் கவிஞர் என்கின்ற முத்திரையை அவருக்கு இன்று குத்துகின்றது. அவருடைய பாடல்களில் இன்னும் நாம் சொல்லவேண்டுமென்றால்_

*"மானமெனும் ஒரு பானையில் வாழ்வெனும்*
*தீனி சமைத்தவனே! தமிழ் போனதடா*
*திரை போனதடா! அடா பொங்கி*
*எழுந்திடடா! காட்டு தமிழ் மறம்*
*ஓட்டு வரும் பகை*
*பூட்டு நொறுக்கிடுவாய்*
*நிலைநாட்டு குலப்புகழ்*
*தீட்டு புதுக் கவி ஏற்று தமிழ் கொடியே"*

என்கிறார்_

*"நாறு பிணக் களம் நூறு படித்த*
*நம் வீறு மிகுந்த குலம் - பெரும்*
*ஊறு துடைத்திடு.*
*மாறு புறப்படு ஏறு நிகர்த்தவனே"*

என்கிறார்.

இதுபோன்ற ஒரு விடுதலைக் கவிஞர் இன்றைக்கு கிடைத்திருக்கிறாரென்றால் அதுவே மிக்க மகிழ்ச்சி.

அதுபோல நம்முடைய கவிஞர் புதுவை இரத்தினதுரை மிகவும் சிறந்த பாடல்களைத் தந்துள் ளார். அதாவது களத்திலேயே, நிகழ்வு நடக்கக்கூடிய இடத்திலேயே இன்று இருந்து கொண்டு கருத்துக் களை சொல்வதனால் அவை உயிர்த்துடிப்புள்ள பாடல்களாகத்தானிருக்கும். உதாரணத்துக்கு, நம்முடைய மக்கள் என்ன எண்ணுவார்கள் என்று ஒரு போராளி கருதுவதாக வரும் ஒரு பாடலிலே இங்கு சொல்கிறார்.

*"வானுயர்ந்த காட்டிடையே*
*நானிருந்து பாடுகின்றேன்*
*வயல்வெளிகள் மீது கேட்குமா அது*
*வல்லை வெளி தாண்டிப் போகுமா..."*

இப் பாடலை நான் பாடும்போது கண்ணீர் மல்கத்தான் பாடினேன். அந்தத் தாக்கம் என்னையே பாதித்தது. அப்படியாயின் மக்கள் எந்த அளவுக்கு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


அந்தப் பாடலிலே ஐக்கியமாகி இருப்பார்கள் என்பதை நிச்சயமாக நான் தமிழீழத்திலே பார்த்தேன். ஆகவே நம்முடைய இயக்கத்தினுடைய கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் ஒரு சிறந்த கவிஞர்.

**தமிழ்நாட்டுக் கிராமியக் கலைகள் பற்றிய உரையாடலின் போது,**

தமிழ்நாட்டுக் கிராமியக் கலையில் தாலாட்டுப் பாட்டு, நடுவர் பாட்டு, கும்மிப்பாட்டு, ஏர்ப்பாட்டு, வழிநடைப் பாடல்கள்.. இப்படிப் பல பிரிவுகள் உண்டு. இவற்றை யார் எழுதியது? எந்தக் காலத்தில் எழுதியவை? என்று என்னால் கண்டுபிடிக்க முடியாமல் உள்ளது. உதாரணத்துக்கு ஒரு தாலாட்டுப் பாடல் சொல்கிறேன்.

ஒரு தாய் தன்னுடைய குழந்தையைத் தாலாட்டும் போது தாய்மாமன் என்னென்ன சீர்கள் உனக்குக் கொண்டு வருவான் என்று சொல்லித் தாலாட்டுப் பாடுகின்றாள்.

*"கற்பகத்தைத் தேடி*
*கனிந்து வரும் பொழுது*
*உன்னரிய அம்மான்மார்*
*என்ன கொண்டு வந்தார்கள்...*


*கொத்துவிடா நெத்தும்*
*கோதுவிடா மாங்கனியும்*
*கோடைப் பலாச்சுளையும்*
*குலைசேர்ந்த மாங்கனியும்*
*பருவப் பலாச்சுளையும்*
*பக்குவத்து மாங்கனியும்*
*அக்கரையில் சக்கரையும்*
*அதிமதுரத் தென்னவட்டும்*
*காய்ச்சிய பாலும் கற்கண்டும்*
*செந் தேனும் ஏலம், கராம்பும்*
*இளங் கொடிக்கால் வெற்றிலையும்*
*ஜாதிக் கழிப் பாக்கும்*
*சங்கு வெள்ளைச் சுண்ணாம்பும்*
*அத்தனையும் கொண்டு உன்னை அறிய*
*வந்தார் அம்மான்மார்."*

இப்படி நமது தமிழினத்தில் நமது முன்னோர்கள் எப்படி அருமையாகப் பாடியுள்ளார்கள்.

இன்னொரு பாடலில்...

இரு பெண்கள் வாழாக் குடியாக தாய்வீட்டுக்குப் போகிறார்கள். அப்போ வழியிலே ஒரு வாலிபன் வழிமடக்கி அவர்களைக் கேள்வி கேட்கிறான்...

*"சந்திர ஜோதி கிளம்பிய மாதிரி*
*சந்தணச் சோலையிலே*
*நட்ட நடு சாமத்து வேளையிலே*
*திருடர்கள் தங்கும் ஜாகையிலே*
*இப்போ தன்னந் தனியாக*
*தைரியமா வந்த சங்கதி என்ன பிள்ளை*
*இரண்டுபேரும் வந்த சங்கதி என்ன பிள்ளை"*




**சுவிஸ், ஜேர்மனி, இங்கிலாந்து, நோர்வே, ஒல்லாந்து, இத்தாலி, டென்மார்க், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் தேனிசை செல்லப்பாவும் அவரது குழுவினரும் விடுதலை இசைப் பயணத்தை மேற்கொண்டனர். அவ்விசைப் பயணத்தின் போது தேனிசை செல்லப்பாவினாலும் அவரது மகள் சாந்தியினாலும் பாடப்பட்ட பாடல்களை தாங்கிய வீடியோ ஒளி நாடாவை 'தரிசனம்' வெளியிட்டு வைத்திருக்கிறது. இவ் நாடாவில் புதுவை இரத்தினதுரை, கவிஞர் காசிஆனந்தன், புதுமைப் பித்தன், பாரதிதாசன், கவிஞர் இன்குலாப் ஆகியோர் எழுதிய பாடல்களை தேனிசை செல்லப்பா பாடியிருக்கிறார்.**

இப்படிக் கேட்கிறார்.

உடனே அவர்கள் பதில் பாடுகிறார்கள்.

*"வரலாறு கேளய்யா நாங்க பிறந்தது*
*வடக்கு வெகுதூரம் மதுரையில*
*வாழ்க்கைப்பட்ட நேரம்*
*புருஷன் கூட வம்பு விவகாரம்*
*இப்போ வாழாக் குடியாக*
*தாயார் வீட்டுக்கு வருத்தத்திலை போறம்*
*இரண்டுபேரும் வருத்தத்திலை போறம்"*

இந்தப் பாடல்கள் எல்லாம் நம்ம இன மக்களுக்கு புதையல் மாதிரி.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தமிழ்நாட்டுக் கலைஞர்களுக்கும் தமிழீழக் கலைஞர்களுக்கும் நன்கு அறிமுகமான அண்ணன் தேனிசை செல்லப்பா அவர்கள் இரு கலைஞர்களுக்கு மிடையிலான ஒற்றுமை வேற்றுமை பற்றிப் பேசிய போது,

தமிழ் நாட்டு இசைக் கலைஞர்களில் பலர் திரைப்படப் பாடல்களைத்தான் பாடுகின்றார்கள். அதற்கு காரணம் என்ன என்று அறியும்போது உணர்வு அவர்களிற்கு இருந்தால்கூட வியாபார ரீதியில்தான் இதைச் செய்கிறோம் எனக் கூறுகிறார்கள். ஆனால் தமிழீழத்தில் இருக்கின்ற கலைஞர்கள் அப்படியில்லை. ஏனென்றால் அந்த மண்ணின் விடுதலைக்காக அங்கு நடக்கக்கூடிய நிகழ்வுகளை நேரடியாகப் பார்ப்பதினால், இந்த நாட்டு விடுதலைக்கு நம்ம பங்களிப்பு என்ன என்று பார்க்கிறாங்க. இன்னைக்கு நான் எந்தளவுக்கு உணர்வுபெற்று ஒரு எழுச்சியை, ஒரு அபாய இசையை கொடுக்கிறேனோ அந்தளவுக்கு இன்றைக்கு அவர்கள் ஒரு உணர்வோடு பாடிக்கொண்டிருக் கிறார்கள் என்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உலகத்திலே சிறந்த கலைஞர்கள் என்னும் அளவிற்கு தமிழீழத்திலிருந்து இன்று பாடல்கள் வந்துகொண்டிருக் கின்றன.

***தமிழ்நாட்டின் கடந்தகாலத் திராவிட எழுச்சிக்கும் தற்காலத் தமிழ்த் தேசிய எழுச்சிக்கும் இடையே ஏதாவது தொடர்புகள் இருக்கின்றதா?***

திராவிட எழுச்சி என்பது இன்று மங்கி மறைந்துகொண்டு வருகின்றது. இன்றைக்கு ஒரு மொழி, ஒரு இனம், ஒரு நாடு என்கிற அடிப்படையில் உணர்வுகள் வளர்ந்துகொண்டிருக்கின்றன. அதுதான் உலகம் பூராக இருக்கிறது. ஒரு மொழி பேசுகிறவ னுக்கு, அவனுடைய மொழிதான் நீதிமன்றத்திலே, நிர்வாகத்திலே இருக்கவேண்டும். வீட்டுமொழியும் நாட்டுமொழியும் ஒன்றுதான் என்ற அடிப்படையிலே இன்று உலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே திராவிட இனம், திராவிட மொழி என்ற மாயை இன்று விலகிக்கொண்டிருக்கிறது. உதாரணத்துக்கு சொல்ல வேண்டுமென்றால்:

இந்தியன் என்று சொல்லச் சொல்கிறார்கள்,
திராவிடன் என்று சொல்லச் சொல்கிறார்கள்,
இந்து என்று சொல்லச் சொல்கிறார்கள்.

இந்து, இந்தியன், திராவிடன் என்ற உணர்வு வளர்ந்திருந்தால் கன்னடக்காரன் நிச்சயமாக தமிழ்நாட்டுக்காரனுக்கு, தமிழர்களிற்கு தண்ணீர் தர மறுக்கமாட்டான். அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வில்லை. ஆந்திரக்காரர்களோ, கன்னடத்துக்காரரோ, மலையாளத்துக்காரரோ திராவிடன் என்ற உணர்வை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தியன் என்ற உணர்வை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால் தமிழன் என்ற உணர்வுதான் மேலோங்கி நிற்கிறது. அதுதான் நடைமுறைக்குச் சாத்தியமானது என்பதை இளைஞர்கள் புரிந்துகொண்டு இந்த அணிக்கு வலுச்சேர்த்துக் கொண்டிருக் கின்றார்கள் என்பதுதான் உண்மை.

> ‘நாட்டின் விடுதலைப் போராட்டத்தி லிருந்து எழுத்தாளன் விலகியிருக்கக்கூடாது! தனது எழுத்தினால், மக்களின் விடுதலை ஆர்வத்தை அதிகரிக்கவும் போராட்டத்தில் அவர்களின் கடமையை வலியுறுத்தவும் எழுத்தாளன் முன்னின்று உழைக்கவேண்டும்.
>
> - சரத் சந்திரர் -

***தமிழீழப் போராட்டம் பற்றியும் தமிழ்நாட்டு மக்களின் தற்போதைய உணர்வுகள் பற்றியும் கூறிய போது,***

இளைஞர்கள் மத்தியிலே அந்தத் தாக்கம் மிகவும் மேலெழுந்து நிற்கிறது. அரசியல்வாதிகள் இளைஞர் களை ஏமாற்றி திசை திருப்பிக்கொண்டிருந்தார்கள். இது இன்றைக்கு எடுபடவில்லை. இளைஞர்களை, போஸ்டர் ஒட்டுவது, கொடி தூக்குவது, மேடை போடுவது போன்ற எடுபிடி வேலைகளைச் செய்வதற்கு பயன்படுத்திக்கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது 18 மைல்களுக்கப்பால் கடல் கடந்து எமது இளைஞர்களும் யுவதிகளும், சின்னக் குழந்தைகளும் சொல்லற்கரிய காரியங்களைச் செய்துகொண்டிருப்பது தமிழ் நாட்டு இளைஞர்கள் மீது ஒரு தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

***தமிழீழப் போராட்டம் பற்றிய அவரது நம்பிக்கையை எமக்குச் சொல்லுகையில்,***

நிச்சயமாக முக்கால் கிணறு தாண்டிவிட்டோம். கூடிய விரைவிலே நமக்கு விடிவுகாலம் பிறக்க இருக்கிறது. இதைத் தமிழ்நாட்டு மக்கள், இளைஞர்கள் நன்றாக உணர்ந்துள்ளார்கள். இவற்றிற்கு எடுத்துக் காட்டாகப் பூநகரித் தாக்குதல் இருக்கிறது. ஆகக்கூடிய விரைவிலே தமிழனுக்கென்றொரு புலிக்கொடி உலகநாடுகள் சபையில் பறக்க இருக்கிறது.

இன்று நான் இரவு தூங்கி காலை எழும்போது புலிக்கொடி பறக்கிறது என்று கேள்விப்பட்டால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்தளவிற்கு இன்று வேகமும் துடிப்பும் அங்கே இருக்கிறது.

எமது நேர்காணலை முடித்துக்கொள்வதற்கு முன் அவர் தனக்கு மிகவும் பிடித்தமான சில பாடல்களை எமக்கு பாடிக்காட்டினார்.

ஒவ்வொரு இசை நிகழ்ச்சிகளின் போதும், எமது தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் வேண்டுகோளின்படி ***“நம்புங்கள் தமிழீழம் நாளை கிடைக்கும், நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்”*** என்ற பாடலைத் தான் பாடுவதாகக் கூறினார். அவரோடு உரையாடி அவரது உள்ளத்து உணர்வுகளை எண்ணி வியந்தபடி அவரிடமிருந்து விடைபெற்றோம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# வாணவேடிக்கை

யூலை 14. பிரான்சின் சுதந்திர நாள். பஸ்ரில் என்ற சிறை உடைக்கப்பட்ட அந்நிகழ்வுதான் புரட்சியின் ஆரம்பக் குறியீடாக அமைந்தது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற விடுதலை முழக்கங்கள் வேரூன்றியதோடு, மக்கள் குடியரசிற்கான தளமும் அப்போதுதான் இடப்பட்டது.

இம்முறை, இத்தினம், இன்னும் விசேடமாகக் கொண்டாடப்பட்டது. 2ம் உலக யுத்த காலத்தில், நட்பு நாட்டுப் படைகள், நோமன்டி என்ற பிரஞ்சுக் கடற்கரையில் ஆங்கிலக் கால்வாயினூடாகத் தரையிறங்கி, பிரான்சை- நாசி கிட்லரின் பிடியிலிருந்து மீட்ட நிகழ்வின் 50வது வருடம் நினைவு கூரப்பட்டது. ஜேர்மனியின் தலைநகராக இருந்த பேர்லின் மீதான படை எடுப்புக்கும், 2ம் உலகப் போரின் முடிவுக்கும் வழிவகுத்தது.

இம்முறை, ஜேர்மன் உட்பட பல ஐரோப்பிய நாட்டுப் படையணிகள், காலை நடைபெறும், பெரும் படை அணிவகுப்பில் கலந்துகொண்டன.

அன்று இரவு, வாணவேடிக்கை நடைபெறும் இடத்திற்குப் போயிருந்தோம். அழகழகான வண்ணஒளி வடிவங்களால், வானம் ஜகத் பிரகாசமாய் காட்சியளித்தது. பல்வேறு வகையான, நிறங்களிலும், வடிவங்களிலும் விண்ணில் வாணங்கள் பூச்சொரிந்தன. மக்கள் கூட்டம், ஆகா என்று ஆச்சரிய ஆரவாரிப்பும், மகிழ்ச்சிக் கொந்தளிப்புமாய் அக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு களித்திருந்தன.

என் நினைவு, கடந்த காலத்தை நோக்கி ஓடியது. யாழ்ப்பாணத்திலும், இதே போன்று வாண வேடிக்கைகள் ஆரவாரமாய் நடந்த அக்காலம். முக்கிய விழாக்கள், போட்டிகளின் போது, வாணவேடிக்கையும் முக்கிய கடைசி நிகழ்ச்சியாக இருக்கும். அவற்றை மெய் மறந்து பார்த்து மகிழ்ந்த வண்ணமே, கூட்டம் மைதானத்தை விட்டு நகரும். சீறுவாணம், குடை வாணம், புஸ்வாணம், பூவாணம் என்று பல்வேறு வர்ண ஜாலங்களாய், எமது வானம் கணநேர மலர்வனமாய் காட்சி தரும். இன்று பாரிஸில் பார்த்த வண்ணஒளிக் கோலத்திற்கும் அதற்கும் பெரிய வேறுபாடு இல்லை.

பெரியவர், சிறியவர், பணக்காரர், ஏழைகள், படித்தவர், படிக்காதவர் என்று எந்த வித்தியாசமுமில்லாமல் மக்கள் அனைவராலும்- அங்கும், இங்கும் பாராட்டப்படுகின்ற இந்த வாண வேடிக்கைகளை செய்கின்ற கலைஞர்களின் நுண்திறனும், அழகுணர்வும், கலைச் சிறப்பும் மேன்மையானதுதான்.

ஆனால், எம் நாட்டில் அக் கலைஞர்களுக்கு எத்தகு மதிப்பிருந்தது. எனது வீட்டின் பின்பக்கத்தில் தான் அவர்களது வீடுகள் இருந்தன. தம்பன் பட்டாசு, பொன்னன் பட்டாசு - அவர்களது வாண வேடிக்கைகள் என்றால் மதிப்பும் மரியாதையும்தான். தம்பன் பட்டாசின் அதிர்வெடியின் முன்னால் கொழும்புப் பட்டாசுகள் எந்த மூலை என்பது பொதுவான அபிப்பிராயம். ஆனால், அந்தக் கலைஞர்களுக்கு என்ன மரியாதையை சமூகம் கொடுத்தது? நாயினும் கேடான வாழ்க்கையே அவர்கள் வாழ்ந்தது. கீழ் சாதி என்று சாதியத்தின் பேரால் ஒதுக்கியது ஒரு கொடுமை. வறுமையில் வாடவிட்டு சமூகத் தளத்தின் அடியில் வைத்து வேடிக்கை பார்த்தது இன்னொரு கொடுமை. சிறிய ஓலைக் குடில்கள், சமைப்பதற்கு ஒன்று இரண்டு பாத்திரங்கள், பட்டாசுகள், வாணங்கள் செய்வதற்கான குடுவைகள், அம்மிகள், குழவிகள், பாத்திரங்கள், மூலையில் வெடிமருந்துப் பை. இவை தவிர வேறொன்றும் வீட்டில் கிடையாது.

ஒரு நகரின் வானத்தையே சில கணநேரம் தேவதைகளின் சொர்க்க லோகமாக்கி சொர்ண ஒளிபடைக்கும் அக் கலைஞர்களின் வீடுகள், இருளடைந்து கிடந்தன. வறுமையின் கோரதாண்டவம். அடிவளவின் பின்னால் இருந்த அவ் வீடுகளுக்கு முன்னால் இருந்த பெரிய மனிதர்கள் எவரும் செல்லமாட்டார்கள். சென்றாலும் அங்கு குந்தியிருக்க மாட்டார்கள். குந்தியிருந்தாலும் ஒரு துளி தண்ணீர் வாங்கிக் குடிக்கமாட்டார்கள்.

ஒரு நாள். அக் கொடிய விபத்து அங்கு நடந்தது. மாடு ஒன்று திறந்த வீட்டினூடு சென்று நடந்த குழறுபடியில், வெடிமருந்து வெடித்துவிட்டது. மாடு சிதறுண்டு போனது. தம்பனுக்கும் பலத்த காயம். ஓலைக் குடிசை எரிந்து சாம்பலாகியது. அப்போதும் கூட அவ்வீட்டிற்கு அயலில் இருந்தோர் எவரும் செல்லவில்லை. உறவினர்களே தம்பனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள். தம்பன் பட்டாசுதான் வேணும். தம்பன் வேணாம். என்ன விசித்திரமான உலகம்.

நாங்கள் சிறுவர்களாய் விளையாடும் போது, தினமும் காணுகின்ற அக்குடிசைகள், பல்வேறு அற்புதங்களைப் படைக்கும் அக் கலைஞர்களின் குடிசைகள் இன்னும் அப்படித்தான் இருக்குமா?

**வளவன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# வட்டங்களுக்குள்ளிருந்து வெளியே வருவோம்

இனரீதியான ஒடுக்கு முறைக்குட்பட்டு அதற்கெதிராக போராடிக் கொண்டிருக்கும் மக்கள் நாம். எமது மண்ணில் கௌரவமான, பூரண சுதந்திரத்துடன் வாழத்துடிப்பவர்கள். இதற்காக நாம் நாள்தோறும் எதிர்கொள்ளும் துன்பங்கள் சாதாரணமானவை அல்ல.

சமூக விடுதலையுடன் கூடிய தேசவிடுதலையே பூரணமானதும் உண்மையானதுமாகும்.

உலகின் பல பகுதிகளில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பெண்களுக்குப் பாதுகாப்பு தள்ளப்பட்டுள்ளனர். இச்சிறை உடைபடவேண்டும்.

சமூகத்தினுள்ளிருக்கும் இன்னொரு முக்கிய பிரச்சினை சாதி ஒடுக்குமுறை. ஒரு காலத்தில், தாழ்த்தப்பட்டவர்கள் எனக் கருதப்பட்ட மக்கள் உயர்சாதியினர் எனச் சொல்லப்பட்டோரால் கடுமையாக ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்பட்டு வந்தனர். இன்று அந்தநிலை தளர்ந்துள்ளது. ஆனால் முற்றுமுழுவதுமாக நீங்கிவிடவில்லை. அனுகுமுறைகளில் இது தளர்ந்திருந்த போதும் மனவுலகில் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. பல எண்ணவோ, அவ்வாறு கருதி ஒதுக்க எவருக்கும் உரிமையில்லை. ஏனையோருக்கும் ஏதோ விதங்களில், தனித்துவமான சிறப்பம்சங்கள் காணப்படலாம். அவற்றினை இனங்கண்டு பரஸ்பரம் மதித்துக்கொள்ளப் பழகவேண்டும்.

தற்போதுள்ள போர்ச்சூழலில் புதியதோர் பிரிவினரும் தாழ்வானவர்களாகக் கருதப்படத் தொடங்கியுள்ளனர். இராணுவத் தாக்குதல்கள், ஆக்கிரமிப்புக்கள் காரணமாக தங்களது ஊர்கள், பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்வோரே இப் பிரிவினர். இவர்கள் 'அகதிகள்'

இல்லை. எமது மண்ணின் தேசத்தின் பாதுகாப்பினையே பெண்கள் பொறுப்பேற்றுப் போராடிக்கொண்டிருக் கின்றனர். இது ஓர் மகிழ்வு தரும் முன்னேற்றம். புரட்சிகரமாற்றம்.

ஆனாலும், இங்கு பெண்விடுதலை முற்றுமுழுதாக ஏற்பட்டுவிட்டதா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும். பிற்போக்கான சமூகக் கட்டுப்பாடுகளும், ஆணாதிக்கமும் இன்னும் ஆட்சி செலுத்திக்கொண்டு தானிருக்கின்றன. இதனால் பெண்கள் சிறைக்குள்தான்

கிராமப்புறங்களில் இன்னும்கூட சாதி ஒடுக்குமுறைகள் தொடர்ந்து கொண்டுதானுள்ளன.

மற்றையது பிரதேச, ஊர் பாகுபாடுகள். ஒவ்வொரு பிரதேசத்திற்கும், ஊருக்கும் ஒவ்வொரு விதத்தில் தனித்துவங்கள் காணப்படலாம். அதன் காரணமாக அப்பிரதேசத்தவர்- அவ்வூரவர் தம்மை உயர்வாக எண்ணிக்கொள்ளலாம். ஆனால், இன்னொரு பிரதேசத்தை- ஊரைச் சேர்ந்தோரை குறைவானவர்களாக

என சமூகத்தில் சற்றுக் குறைவாக மதிக்கப்படுவதை இன்று காணமுடிகின்றது. மூன்றாம் உலக நாடுகளில் 'அகதி' என்கிற புதியதோர் சாதியமைப்பு தோன்றினாலும் தோன்றலாம் என ஆய்வாளர் கருதுகின்றனர்.

சின்னச்சின்ன வட்டங்களுக்குள்ளிருந்து வெளியே வருவோம். நாம் தமிழர்கள், மனிதர்கள் என்கிற பெருவெளிக்குள் இணைந்துகொள்வோம். பூரணமான சுதந்திர மக்களாக வாழ்வோம்.

***

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## கல்முனை தொட்டு அரசபுரம் வரையிலான

# புராதன தமிழ்க் குடியிருப்புக்கள்

ப. புஸ்பரட்ணம்
வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

இலங்கையிலே தமிழ்க் குடிகளின் பெருக்கம் 10ஆம் 11ஆம் நூற்றாண்டுகளில் அதிகரித்தமைக்குச் சோழரது 77 ஆண்டு கால ஆட்சியை ஒரு முக்கிய காரணமாக வரலாற்று ஆசிரியர்கள் முதன்மைப்படுத்திக் கூறியுள்ளனர். ஆனால் இவர்கள் ஆட்சிக்கு முன்னரே தமிழர்கள் செறிவாக வாழ்ந்ததற்கும், தமிழ் மன்னர்கள் பலர் நீண்டகாலம் ஆட்சி செய்ததற்கும், தமிழ் மக்கள் ஆட்சியாளரைத் தெரிவு செய்வதிலும் அரசைப் பாதுகாப்பதிலும் முக்கிய பங்கு வகித்துள்ளனர் என்பதற்கும் பல ஆதாரங்கள் உள. கி.பி. 7ம் நூற்றாண்டிலே தென்னிலங்கையில் இருந்த காசியப்பன் அநுராதபுரத்திலே தமிழ் மக்களின் ஆட்சியதிகாரத்தைக் கட்டுப்படுத்த தன் தந்தையாகிய தப்புலவனை அரசனாக்கினான். ஆனால் இவன் அரசனாக இருப்பதை விரும்பாத தமிழ் மக்கள் தலைநகரைக் கைப்பற்றி தமிழ்நாட்டில் 'அரசியல் அடைக்கலம் பெற்றிருந்த ஹத்த தாட்டனை அரசனாக்கினர் எனச் சூளவம்சம் கூறுகிறது. கி. மு. 2ம் நூற்றாண்டிலே துட்டகாமினிக்கும் எல்லாளனுக்கும் இடையே நடந்த போராட்டத்தை இனப் போராட்டமாகக் கூறும் மகாவம்சம் 44 ஆண்டுகள் அநுராதபுரத்தில் ஆட்சி செய்த எல்லாளன் என்ற தமிழ் மன்னனைத் துட்டகாமினி வெல்வதற்கு முன்னால் அநுராதபுரத்திற்குத் தெற்கேயிருந்த 32 தமிழ்ச் சிற்றரசர்களை வெற்றிகொள்ள நேரிட்டதாகக் கூறுகிறது. இக்கூற்றானது தென்னிலங்கையில் செறிவான தமிழர் குடியேற்றம் இக்காலப் பகுதியிலிருந்ததற்கு ஒரு சான்றாகும். கி. மு. 1ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட அநுராதபுரக் கால அரசியல் வரலாற்றை ஆராய்ந்தால் இக்காலப் பகுதியில் ஆட்சி புரிந்த 22 மன்னர்களுள் பத்து தமிழ் மன்னர்கள் 82 வருடங்களுக்கு மேல் ஆட்சி புரிந்ததினைக் கண்டுகொள்ளலாம். இது சோழருக்கு முன்னரே நீண்டகாலம் தமிழ் மன்னர்கள் இலங்கையில் ஆட்சி செய்துள்ளனர் என்பதற்குச் சான்றாகும். ஆயினும் சோழரது ஆட்சிக்காலம் இலங்கைத் தமிழ் மக்களது வரலாற்றிலே முக்கிய மாற்றங்கள் ஏற்படக் காரணம் என்பது மறுப்பதற்கில்லை. இவர்களது நீண்டகால ஆட்சியிலே தமிழ் குடிகளது பெருக்கம் ஏற்பட்டதென்பதற்கு மேலாக இனம், மொழி, பண்பாடு என்பவற்றால் வேறுபட்டு வாழ்ந்த தமிழ் மக்கள் தமது தனித்துவம், பண்பாடு, தாயகம் என்பவற்றை மேலும் பாதுகாக்க இவர்கள் ஆட்சிக்காலம் வாய்ப்பாக இருந்ததெனக் கூறலாம்.

ஆயினும் சோழர் ஆட்சி ஏற்பட முன்னரே செறிவான தமிழர் குடியேற்றம் இருந்ததை அண்மைக்கால ஆய்வுகள் கோடு காட்டுகின்றன. இதற்கு கல்முனை தொட்டு அரசபுரம் வரையிலான பூநகரிப் பிராந்தியத்தில் கிடைத்த தொல்லியற் சின்னங்கள் சிறந்த சான்றாகும்.

### பூநகரியும் ஆதிக்குடியிருப்புக்களும்

பூநகரியிலே சோழர்காலக் குடியேற்றங்கள் ஏற்படுவதற்கு முன்னால் நீண்டகால வரலாற்றைக் கொண்ட தமிழ் மக்கள் இங்கு வாழ்ந்ததற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. இலங்கையில் இதுவரை அறியப்பட்டுள்ள தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் இங்கு வாழ்ந்த, காலத்தால் முந்திய மக்கள் இடைக்கற்காலப் பண்பாட்டிற்கு (Mesolithic Culture) உரியவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கையில் இப்பண்பாட்டின் தோற்றக்கால்ம் கி. மு. 28000 வருடங்கள் எனவும், தமிழ் நாட்டிலே கி. மு. 30000 வருடங்கள் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை யாழ்ப்பாணக் குடாநாடு தவிர்ந்த அநுராதபுரம், பலாங்



கொடை, மாங்குளம், மாந்தை போன்ற இடங்களில் இப்பண்பாடு நிலவியதற்கான தடயங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பூநகரியிலும் எமது ஆய்வின் போது இப்பண் பாட்டு மக்கள் பயன்படுத்திய குவாட்ஸ் கல்லாயுதங்கள் சிலவும் குவாட்ஸ் கற்கள் பலவும் மண்ணித் தலை கல்முனை வெட்டுக்காடு ஆகிய இடங்களிலே கிடைத்துள் ளன. இதனால் பூநகரியின் ஆதிக் குடிகள் இடைக்கற்காலப் பண்பாட் டிற்குரிய மக்கள் எனக் கூறலாம். இலங்கையில் நிலவிய இப் பண் பாட்டிற்கும் தமிழ்நாடு திருநெல்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



வேலி மாவட்ட இடைக்கற்காலப் பண்பாட்டிற்குமிடையே அதிக ஒற்றுமை காணப்படுவதால் அங்கிருந்தே இப்பண்பாட்டு மக்கள் இலங்கையில் குடியேறியிருக்கவேண்டும் என அறிஞர் கருதுகின்றனர். இதிலே பூநகரியின் அமைவிடம் தமிழ்நாட்டிற்கு மிக அருகே அமைந்திருப்பதினால் முதலில் இங்கு குடியேற்றங்கள் ஏற்பட்ட பின்னர் இங்கிருந்தும் இலங்கையின் பிற பாகங்களுக்கு சென்றிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

இடைக்கற்காலப் பண்பாட்டு மக்களைத் தொடர்ந்து பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய திராவிட மக்கள் பூநகரியில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் பல்வேறு இடங்களிற் கிடைத்துள்ளன. பெருங்கற்காலப் பண்பாடு (Megalithic Culture). என்பது திராவிட மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்வதிற் பின்பற்றிய ஒரு பண்பாட்டு அம்சத்தைக் குறிப்பதாகும். இவ்வடக்க முறைகள் நாட்டின் பௌதிகத் தன்மைக்கு ஏற்பப் பெரிய கற்களைப் பயன்படுத்தியும் தாழிகளைப் பயன்படுத்தியும் பல வடிவங்களில் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய அடக்கமுறையில் இறந்தவர்கள் வாழ்ந்த காலத்திற் பயன்படுத்திய பல பொருட்களையும் சேர்த்து அடக்கம் செய்வதனால் இவை பற்றிய ஆய்வானது அக்கால மக்களது பண்பாடு பற்றிய ஆய்வாக அமைகிறது. இப்பண்பாட்டுடன் தான் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் கி. மு. 1000இலிருந்து அரசு தோற்றம், நீர்பாசன விவசாயம், கறுப்பு சிவப்பு நிற மண்பாண்ட உபயோகம், இரும்பின் பயன்பாடு என்பன தோன்றின. சங்ககால நாகரிகம் இப்பண்பாட்டுடன் தோன்றியதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. இலங்கையில் அநுராதபுரம், பொம்பரிப்பு, வவுனியா, கதிரவெளி, மாந்தை ஆகிய இடங்களில் இப்பண்பாட்டு மக்கள் செறிவாக வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இதனால் இலங்கையின் ஆதிக்குடிகள் வட இந்தியாவிலிருந்து வந்த ஆரியரின் வழித்தோன்றல்கள் என்ற பாரம்பரிய கருத்துக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் நிலவிய இப்பண்பாடு தென்னிந்தியாவுடன் சிறப்பாக தமிழ்நாட்டுடன் நெருங்கிய ஒற்றுமை கொண்டு காணப்படுவதனால் இடைக்கற்காலப் பண்பாட்டைப் போல் இதுவும் தமிழ் நாட்டிலிருந்து பரவியதாக அறிஞர் கருதுகின்றனர். குடாநாட்டில் இப்பண்பாடு நிலவியதை கந்தரோடை, ஆனைக்கோட்டை, காரைநகர், வல்லிபுரம் ஆகிய இடங்களில் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் இவ்விடங்களில் இதற்கு முந்திய இடைக்கற்காலப் பண்பாடு நிலவியதற்கான தடயங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. இதற்குச் சுண்ணாம்புக்கற் பிராந்தியத்தில் இம் மக்கள் பயன்படுத்திய குவாட்ஸ் கல்லின வகைகள் இல்லாதிருந்ததே காரணம் என்று கூறப்படுகிறது. பூநகரியைப் பொறுத்தவரை இடைக்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக பெருங்கற்காலப் பண்பாடு காணப்படுவது தமிழ்ப் பிராந்திய வரலாற்றாய்வில் முக்கிய நிகழ்வாகக் கருதத்தக்கது.

இப்பிராந்தியத்திலுள்ள மண்ணித்தலை, வெட்டுக்காடு, பரமன் கிராய், பன்றிக்குடா, பல்லவராயன் ஈழஊர், பாலாவி, வீரபாண்டியன் முனை ஆகிய இடங்களில் இருந்து தான் பெருங்கற்காலப் பண்பாட்டுக்கேயுரிய கறுப்பு சிவப்பு நிற மட்பாண்டம், சிவப்பு நரை நிற மட்பாண்டங்கள், தாழிகளின் உடைந்த பாகங்கள், இரும்பாயுதங்கள், கருவிகள், மணிகள், எலும்பினால் செய்யப்பட்ட அலங்காரப் பொருட்கள், காற்சலங்கைகள், அகல் விளக்குகள், சுடுமண் பாவைகள், ஓவியந் தீட்டப்பட்ட மட்பாண்டம், தாழியிலே புதைக்கப்பட்ட எலும்புகள் ஆகியவை கிடைத்துள்ளன. இச்சான்றுகள் 2300 வருடங்களுக்கு முன்னர் செறிவான திராவிடர் குடியேற்றம் இங்கிருந்ததைச் சான்று பகர்கின்றன. இதற்கு இப்பிராந்தியத்தின் இயற்கையமைப்பு, வரண்ட காலநிலை, மழைகாலத்தில் பெருகிவரும் வெள்ளவாய்க்கால்கள், இரும்பாயுதங்களினால் இலகுவாக அழிக்கப்படக்கூடிய பற்றைக்காடுகள், மந்தை மேய்ப்பதற்குரிய தரவைகள், கடலுணவை ஆபத்தின்றிப் பெறக்கூடிய பரவைக் கடல், சிறு குளங்களை இலகுவாக அமைக்கக்கூடிய நிலங்கள் ஆகியவை காரணமாக இருந்ததெனக் கூறலாம்.

பெருங்கற்காலப் பண்பாட்டின் பின்னணியில் சங்ககால நாகரிகம் தோன்றியதெனக் கூறும் அறிஞர் இப்பண்பாட்டின் முதிர்ச்சி நிலையிலே ஆதித்திராவிட அடிப்படையிலிருந்து தமிழ்மொழி செம்மைப் படுத்தப்பட்டு வளர்ச்சியடைந்ததெனக் கூறுவர். இக்கூற்று பூநகரிக்கும் பொருந்தும் என்பதைப் பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் காணப்பட்ட ஒருசில இடங்களில் இருந்து கிடைத்த தமிழ்ப்பிராமிச் சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக மண்ணித்தலை, வெட்டுக்

# 'புலம்பெயர்ந்த தமிழர் வாழ்வு' விவாத மேடை

**எரிமலை வாசகர்களே!**

**புலம்பெயர்ந்த தமிழர் வாழ்வினைப் பற்றிய விவாத மேடையில் கலந்துகொண்டு விவாதியுங்கள். விவாத மேடையில் கலந்துகொள்ளும் அனைவருக்குமான வேண்டுகோள் பின்வருமாறு: இவ்விவாத மேடையை நீங்கள் ஆரோக்கியமான முறையில் பயன்படுத்த வேண்டும். எழுதி அனுப்பும் பொழுது எழுத்துக்கள் தெளிவாக இருத்தல் வேண்டும். எரிமலையின் இரு பக்கங்களுக்குக் கூடாமல் எழுதி அனுப்பப்படல் வேண்டும். கடித மேலுறையில் 'விவாத மேடை' எனக் குறிப்பிடவும். அனுப்பப்படவேண்டிய முகவரி இதழின் 3ம் பக்கத்தில் உள்ளது. கிடைக்கப்பெறும் ஆக்கங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.**

**- ஆசிரியர் குழு -**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


காடு, பரமன்கிராய் போன்ற இடங்களிலிருந்து கி.மு. 3ஆம் 2ம் நூற்றாண்டுக்குரிய ஒரு சில சாசனங்களும் ஓரிரு வரிவடிவங்கள் கொண்ட பல மட்பாண்டச் சாசனங்களின் உடைந்த பாகங்களும் கிடைத்துள்ளன. இவ்வளவு பெருந்தொகையான மட்பாண்ட வரிவடிவங்கள் இதுவரை இலங்கையில் அதுவும் தொல்லியல் மேலாய்வின் போது கிடைத்ததாகத் தெரியவில்லை. இவை தமிழ்நாட்டில் அரிக்கமேடு என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டச் சாசனங்களை நினைவுபடுத்துபவையாக உள்ளன. இச்சாசனங்களில் இலங்கையில் இன்றுவரை கண்டுபிடிக்கப்படாத தமிழுக்கே உரிய தனி வரிவடிவங்கள் காணப்படுவதுடன் சாசனங்கள் தமிழ் மொழியில் அமைந்துள்ளன. இக்கருத்தை தமிழ்நாட்டு சாசனவியலாளரான பேராசிரியர் ஐராவதம் மகாதேவனும் ஒத்துள்ளார். சாதாரண மக்களின் அன்றாடப் பாவனைப் பொருட்களான மட்பாண்டங்களில் இத்தகைய வரிவடிவங்கள் காணப்படுவது எழுத்து வாசனையுடைய மக்கள் ஆதியில் இங்கு வாழ்ந்ததையே எடுத்துக்காட்டுகிறது. இதன் சுமார் 2300 வருடங்களுக்கு முன்னர் தொன்மையான தமிழர் நாகரிகம் இப்பிராந்தியத்தில் இருந்ததற்கு உறுதியான எடுத்துக்காட்டாகும்.

பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் பூநகரியில் நகரமயமாக்கம் தோன்றியதை அயல் நாடுகளுடன் இப்பிராந்திய மக்கள் ஏற்படுத்திக்கொண்ட வர்த்தக, கலாச்சாரத் தொடர்புகள் எடுத்துக்காட்டுகின்றன. இங்கு கிடைத்த புராணாங் (கி: மு. 5ம் நூற்றாண்டு), லஷ்மி (கி. மு. 1 - கி. பி. 5), உரோம (கி. பி. 1 - கி. பி. 5), நாணயங்கள் கிரேக்க உரோம அரேபிய (கி. பி. 5) சீன (கி. பி. 8ம்) மட்பாண்டங்கள் கண்ணாடிப் பொருட்கள் என்பன ஆதியிலே தென்னிந்திய, உரோம, கிரேக்க, அரேபிய, சீன நாடுகளுடன் இப்பிராந்திய மக்கள் தொடர்பு கொண்டிருந்ததை எடுத்துக்காட்டுகின்றன. இதனாலே குடித்தொகைப் பெருக்கம் ஏற்பட்டதுடன் கலாச் சாரப் பரிவர்த்தனையும் இங்கு இடம்பெற்றதெனக் கூறலாம்.

கி. பி. 6ம் நூற்றாண்டின் பின்னர் தமிழ் நாட்டில் பல்லவ, பாண்டிய மன்னர் ஆட்சியில் ஏற்பட்ட பக்தியியக்கம் இலங்கை வரலாற்றிலே பல மாறுதல்கள் ஏற்படக் காரணமாகியது. பேராசிரியர் கே. எம். டி. சில்வா அவர்கள், இப்பக்தியியக்கமே இலங்கையில் பௌத்த, இந்து என்ற சமய வேறுபாட்டை ஏற்படுத்தி இனம், பண்பாடு என்ற வேறுபாடு தமிழ் சிங்கள மக்களிடையே வளரக் காரணம் என்றார். பக்தியியக்கத்தின் செல்வாக்கே தமிழ்நாட்டைப் போல் இலங்கையிலும் தமிழ் மக்கள் செறிவாக வாழ்ந்த அநுராதபுரம், தெவிநுவரை, நாளந்தா, மாதோட்டம், திருகோணமலை ஆகிய இடங்களில் திராவிடக் கலை மரபில் இந்துக் கோயில்கள் கட்டப்படக் காரணமாயின. ஆயினும் தமிழ்நாட்டில் பக்தியியக்கத்தை தலைமையேற்று நடத்திய நாயன்மார்கள் இலங்கையிலுள்ள திருக்கோணேஸ்வரத்தையும், திருக்கேதீஸ்வரத்தையும் போற்றிப் பாடுமளவிற்கு இவ்வாலயங்கள் அக்காலத்தில் சிறப்புப் பெற்றிருந்தன. இதற்கு இந்துப் பண்பாட்டைப் பேணிப் பாதுகாக்குமளவிற்கு தமிழ் மக்கள் இப்பிராந்தியங்களிற் செறிவாக வாழ்ந்தமையும் ஒரு காரணமாக இருக்கலாம். திருக்கேதீஸ்வரத்திற்கு வடக்கேயமைந்த பூநகரியிலே கி. பி. 6ம் நூற்றாண்டிற்கு முன் செறிவான தமிழர் குடியேற்றம் இருந்திருப்பினும் பல்லவ, பாண்டிய அரசுகள் இப்பிராந்தியத்துடன் ஏற்படுத்திய அரசியல் வர்த்தகத் தொடர்புகளும், பக்தியியக்கத்தின் செல்வாக்கும் தமிழர் குடியேற்றத்திலும் பண்பாட்டிலும் அபிவிருத்திகளை ஏற்படுத்தியிருக்கும் எனக் கருத இடமுண்டு. இங்கு பல்லவரை நினைவுபடுத்தும் பல்லாய், காஞ்சிப்புலவு, காஞ்சி மீனாட்சி போன்ற இடப்பெயர்களும் பாண்டிய மன்னர் கால நாணயங்களும் மேற்குறித்த கருத்திற்குச் சார்பாக அமைகின்றன. வெட்டுக்காட்டிலே கிடைத்த பல்லவ கிரந்த எழுத்துக்களுடன் கூடிய தெய்வச் சிலையின் உடைந்த பாகமும் தமிழ்நாட்டில் ஏற்பட்ட பக்தியியக்கம் இங்கு பாதித்துள்ளதென்பதற்கு ஆதாரமாக அமைகிறது. பல்லவர், பாண்டியர் ஆட்சியைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சோழர் காலம் இலங்கையில் தமிழ் குடிகளின் பெருக்கத்திற்கும் இந்துப் பண்பாட்டு வளர்ச்சிக்கும் மேலும் காரணமாக அமைந்தது. வர்த்தக மேலாதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கையை இவர்கள் தமது ஆதிக்கத்திற்கு உட்படுத்தியதனால் முக்கிய நகரங்கள், துறைமுகங்கள், வர்த்தக மையங்கள் என்பனவற்றில் தமிழ்க்குடிகள் செறிந்து வாழ்ந்தனர். இதற்குச் சோழ வர்த்தகர்கள் அதிகாரிகள், படைவீரர்கள் எனப் பல பிரிவினர் தமிழ்நாட்டிலிருந்து வந்து குடியேறியதும் ஒரு காரணமாகும். அவ்வாறு குடியேறிய இடங்களில் புதிய நகரங்களை, வணிக பட்டினங்களை சோழர் தமது நாட்டுக்குரிய பெயர்களைக் கொண்டு அழைத்தனர். இதில் பதவியா ஐயம்பொழில் பட்டினம் எனவும், வால்கட நானாதேசிய வீரபட்டினம் எனவும் மாதோட்டம் ராஜராஜபுரம் எனவும் சோழர் காலத்தில் அழைக்கப்பட்டதை இங்கு கிடைத்த கல்வெட்டுகள் உறுதிசெய்கின்றன. அத்துடன் தமிழ்நாட்டு ஆலயங்களை அண்டிப் பிராமணக் குடும்பங்களைச் சோழர் ஏற்படுத்தியதைப் போல் இலங்கையிலும் ஏற்படுத்தினர் என்பதைக் கந்தளாயிற் கிடைத்த சாசனம் உறுதிப்படுத்துகின்றது. இச்சாசனம் ராஜராஜ சதுர்வேதி மங்கலம் என்ற பெயரில் பிராமணர் குடியேற்றம் இங்கு இருந்ததற்குச் சான்றாகும். இதேபோலப் பூநகரியிற் கிடைத்து வரும் சான்றுகள் சோழருக்கு முன்னரே செறிவான தமிழர் குடியேற்றம் இருந்ததென்பதை எடுத்துக்காட்டினாலும் சோழர் காலத்திலிருந்து மேலும் அதிகரித்திருக்கலாம் என்பதை சோழர் ஆட்சி, சோழர் நிர்வாகம், சோழர் காலப் பண்பாடு என்பன தொடர்பாக பூநகரியிற் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

***

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## தரிசு நிலமென....

மண்ணின் விடுதலையை
இமைகளென எண்ணி
துப்பாக்கியை தோளினில் தாங்கி
களத்தில் இளமையை மறந்த
இளைஞர்கள் யுவதிகள் பலர்.

சொந்த சுகங்களுக்காய்
சதிகாரனின் வலையில் வீழ்ந்தவரும்
காட்டிக் கொடுக்கும் கயவரும்
பாதை மாறிடப் போனவரும்
எமக்கெதிராய் எல்லையில்லா
தொல்லைகள் தருபவர் அவரே.

குடும்பத்துக்காய் குளிர்நாட்டில்
குடியேறி
விடியுமுன் அடிக்கும் அலாரத்தை
அணைத்து
விளக்கை ஏற்றி விரைவாக
வெளிக்கிட்டு
கொதிக்கும் தேனீரை வாயில்
கொட்டி
அரக்கப்பரக்க அன்னியனிடம்
சென்று
அடிமையாய் உழைத்து
விளக்கு வைத்த பின்னே
வீடுவந்து
பழையன உண்டு
படுக்கையில் விழுந்து
மீண்டும் அலறும் அலாரத்தை
அணைத்து ஓடும் இளைஞர்கள் சிலர்.

நாட்டிற்கும்
வீட்டிற்கும் இன்றி
காதில் கடுக்கனும்
கட்டுக் குடுமியும்
கையில் போத்திலுமாய்
சில நாட்கள்
வெள்ளைப் பெண்களுடன்
வீண்பொழுது கழிப்போர் சிலர்.

எந்த இலக்குமின்றிய
இந்தப் பயணம்
எந்தப் பாதை போய்ச் சேரும்?

லதிகா
பாரிஸ்

## புலம்பெயர்ந்தோ

## தொழுகின்ற வாழ்க்கை தொலையட்டும் எம்மைவிட்டு

நீயோ விரைந்து
விடுதலைக்காய் பயணித்தபடி
வீழ்ந்திடினும் நீ
நாளை பெறுகின்ற விடுதலையின்
வீரமகனாய் வாழ்வாய்
இழப்புக்கள் உனக்கு
முடிவுகள் அல்ல.
ஓர் விடுதலை வீரனின் சாவு
அவனது இரண்டாவது
பிறப்பின் கருவிடம்
நண்பா நானும் உன்பின்
என்றும்...
உன்னை நேசிக்கிறேன்
உன் உணர்வுகளை யாசிக்கிறேன்
தொழுகின்ற வாழ்க்கை
தொலையட்டும் எமைவிட்டு
விழுகின்ற குண்டில்
அழிகின்ற நிலமை
வெற்றியும் தோல்வியும்
விடுதலைவீரனின் வாழ்க்கையில்
சுழல்கின்ற ஒன்று
நண்பா நீ விழுகின்ற
மண்ணிலிருந்து நான்
எழுவேன் ஒரு புலர்பொழுதில்
எழுகின்ற பட்சியைப் போல்

ஆ. சாந்தி
டென்மார்க்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# கவிதைகள்

## களத்தினில் வேங்கை

களத்தினில் வேங்கையே நீ கானகத்தில்
இசைபாடும் குயிலல்லவா
சுற்றம் உறவு உன் உறங்காத
விழிகளுக்கு எட்டப் பார்வையே
கடமை கண்ணியம் கட்டுப்பாடு
உன் தளராத மனவுறுதியின் ஆணிவேரல்லவா
தினம் தினம் சாகும் மானிடர்க்கு உன்
வீரச்சாவு உயிர்ப்புணர்வு அல்லவா
காலம் காலமாகக் கட்டுண்ட சமுதாயம்
உன் வரவினால் பறந்தோடினவே
பச்சைப் பாலரெல்லாம் உன் புகழ்
கூற சாதனை படைக்கின்றாய்
வேவு ஓடிப் பார்க்கின்ற உன்
பாதங்களுக்கு வேகுகின்ற வெயில் என்ன?
கூதல் என்ன குளிரென்ன
வீரங்கொண்ட மைந்தனுக்கு?
தினம் தினம் எதிரியின் பாசறைக்கு நீ
விரைந்து செல்லும் போது கண்டு
கொள்கின்றோம்.
ஆசை துறந்தாய் பாசம் துறந்தாய்
களத்தினில் உன் உடல் மறைந்தாலும்
கல்லறை கூட உன் புகழ் சுமந்திருக்கும்.
உன் மறைவு ஈழத்தின் மலர்விற்கே
களத்தினில் வேங்கையே காத்திருக்கின்றேன்.

தவநாதன்- வளர்மதி
பிரான்ஸ்.

## தியாகம்

நாடெல்லாம் அகதிகளாய் அல்லலுறும்
எம்மினமே!
தாயகத்தை ஒருகணம் சிந்திப்பாயா?
எம் தாயகத்தை
ஒருகணம் சிந்திப்பாயா?
புதுப்படம் எங்கு போடுவார்கள்?
அத்துடன் இல்லாத பிறந்தநாள்
கொண்டாட்டம்
குடி, கூத்து கும்மாளம் போதை ஏற
ஈழத்தியாகம் பற்றிவரும் பேச்சு
அங்கு சாவது எங்கள் சகோதரர் அல்லவா!
பற்றி எரிவது நாம் நடந்து திரிந்த
பூமியல்லவா!

சிவக்குட்டி
பாரிஸ்

## மகாத்மாக்கள்

அவர்கள்....
நாம் சுதந்திரமாக
சிறகடித்துப் பறப்பதற்காக
தங்கள் சிறகொடித்து
தீக்குள் இருக்கிறார்கள்.

நாம் ஆனந்தமாக
ராஜபாட்டையில் தேரோட்டுவதற்காக
தங்களையே கற்களாக்கி
பாதை இடுகிறார்கள்

நாம் சிறப்பாக
பெருவிழா நடாத்துவதற்காக
தங்களையே வாணமாக்கி
சிரித்துக் கொண்டே
வெடித்துச் சிதறுகிறார்கள்.

அகிம்சையினால் மட்டும்
மகாத்மாக்கள் தோன்றுவதில்லை.
மாவீரர் வடிவிலும்
தோன்றுகிறார்கள்

இராஜ் சிவலிங்கம்
ஜேர்மனி.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தமிழில் புதிய நூல்கள்






சி. மே. மாட்டீன்

உதைபந்தாட்டப் பிரச்சினைகள் பற்றிய ஒரு நூல் தமிழில் வெளிவந்தமை குறித்து மகிழ்ச்சியே. உதைபந்தாட்டக் களங்கள், வீரர்கள் மோதுகின்ற களமாக இருந்த நிலைமாறி அடிபாட்டுக் களங்களாக மாறியது குறித்து யாரும் வேதனைப் படாது இருந்திருக்க மாட்டார்கள். "என்ன இவர்கள்" என அலுத்துக்கொள்வதோடும் அல்லது பார்வையாளர்களாகச் செல்வதை நிறுத்திக்கொள்வதோடும் பலர் இருந்திருப்பார்கள். விளையாட்டு என்பதை விளையாட்டாகக் கொள்ளாது மோதிக்கொள்கிறபோது என்ன நன்மை பயக்கும்? இது எந்த வகையில் சமூக ஆரோக்கியமானதாக விளங்கும்? உதைபந்தாட்டப் பிரச்சினைகளை சரியாக விளங்கிக் கொள்ளவும், சரியான நடைமுறையைக் கைக்கொள்ளவும் இந்நூல் ஓரளவான பயன்பயக்கும்.

உதைபந்தாட்டப் பிரச்சினைகள் பற்றி இந்நூல் எழுதப்படுவதற்கு மேற்கூறிய காரணங்களே தனக்கு உந்துதலாக இருந்தது என்று இந்நூலின் ஆசிரியர் சி. மே. மாட்டின் அவர்கள் கூறுகிறார்கள்.

சமூக நலனில் அக்கறைகொண்ட இந்தச் செயலுக்குரியவரை எப்படிப் பாராட்டினாலும் தகும்.

இந்நூல் ஆய்வு ரீதியாக பிரச்சினைகளை அணுக முயன்றிருக்கிறது.

இந்நூல் உதைபந்தாட்டத்தில் ஈடுபடுகின்ற வீரர்கள், பார்வையாளர்கள், நடுவர்கள் அனைவருக்கும் நன்மை பயக்கும். அந்த நன்மையை அவர்கள் அடைவார்களாயின், உதைபந்தாட்டக் களங்கள் புத்துயிர் பெறும். அதுவே இந்நூலின் வெற்றியாக அமையும்.

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த சி. மே. மாட்டீன் (16-6-1925), பயிற்றப்பட்ட ஒரு தமிழாசிரியர்; தற்போது ஓய்வுபெற்றுள்ளார்.

கிரிக்கட், ஹொக்கி, கரப்பந்தாட்டம், பிலியர்ட்ஸ் ஆட்டங்களிலும் தனது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ள போதிலும், உதைபந்தாட்டத்துறையிலே மிகுந்த முக்கியத்துவத்தைப் பெற்றவராயுள்ளார்.

1940இல் 'யூபிலி கழகத்'திற்காக உதைபந்தாட்டத்தை ஆடத் தொடங்கியதிலிருந்து 1992 வரை, யாழ்நகரிலும் கம்பளையிலும் நுவரெலியாவிலுமிருந்த முன்னணி கழகங்கள் பலவற்றிற்காக ஆடியுள்ளார். 1947 - 57 வரை நுவரெலியா மாவட்டக் கோஷ்டியிலும், 1954 - 55 வரை நுவரெலியா மாவட்டக் கோஷ்டித் தலைவராகவும் இருந்ததோடு, 1957 இல் இலங்கை வந்த ரஷ்யக் கோஷ்டியுடன் விளையாடிய 'வெளிமாவட்டக் கோஷ்டி' யிலும் 1957 - 59 வரை யாழ். மாவட்டக் கோஷ்டியிலும் இடம்பெற்றுள்ளார்.

பயிற்சியாளராக 45 ஆண்டுகளும், நடுவராக 40 ஆண்டுகளும் சேவைபுரிந்துள்ள இவர், 1957 இல் 'இலங்கை நடுவர் சங்கம்' (C.R.A) நடாத்திய நடுவர் தேர்வில் 81 புள்ளிகள் பெற்று, அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றவர்.

ஓவியம், கர்நாடக இசை ஆகியவற்றிலும் ஈடுபாடுகொண்டவர். இவரது மரச்சிற்பங்கள் சில கண்காட்சிகளில் வைக்கப்பட்டபோது, கலை ஆர்வலரது கவனத்தை ஈர்த்தமையும் குறிப்பிடத்தக்கது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






சந்திரா தனபாலசிங்கம் அவர்களுடைய 'சில மனிதர்கள்' எனும் சிறுகதைத் தொகுதி ஒன்று வெளிவந்திருக்கிறது.

அப் பதினொரு சிறுகதைகள் பற்றி து. வைத்தியலிங்கம் (தலைவர், யாழ். இலக்கிய வட்டம்) அவர்கள்,

'ஆரம்ப நிலையில் உள்ள வளரும் எழுத்தாளர் சந்திரா தனபாலசிங்கம். இவரது எழுத்தில் ஆரம்ப எழுத்தாளருக்குரிய கூச்சம் இல்லை என்பது ஒரு முக்கிய விடயமாகும். முழு நம்பிக்கையோடு இவர் பேனா வெகு இலாவகமாக ஓடுகிறது. விடயங்களை எழுதும் போது நகைச்சுவை உணர்வு, மிகுதியாக இவரது எழுத்துக்களில் பரவி நிற்கின்றது. கதை முழுவதையும் நகைச்சுவை உணர்வு ஆக்கிரமிக்கின்றது. ஆனால் இவர் தனது எழுத்து மூலம் சொல்லவந்த செய்திகளை, இதுதான் விடயம் இதுதான் தீர்வு என "புட்டு" வைக்கவில்லை. முடிவுகளை வாசகரின் ஊகத்துக்கு-சிந்தனைக்கு விட்டுவிடுகிறார்.' என்று குறிப்பிடுகிறார்.

16.5.1953 இல் பிறந்த சந்திரா தனபாலசிங்கம், கல்வளை- சண்டிலிப்பாயைச் சொந்த இடமாகக் கொண்டவர்.

எழுத்தாளர்களின் படைப்புக்கள் "வரலாற்றுப் பதிவுகளாக- நிஜங்களின் தரிசனங்களாக- அமைந்திட வேண்டும்." என்ற சந்திராவின் நம்பிக்கையுடன் முரண்படாதவையாகவே அவரின் படைப்புக்கள் பலவும் அமைந்துள்ளன. தனது வாழ்வுக்கால சமூக - அரசியல்- யதார்த்தக் கோலங்கள் பலவற்றை, நேரடியான வெளிப்பாட்டு முறையில்- எள்ளல் ததும்பும் மொழிநடையில் பதிவுசெய்துள்ளார்.

ஆரம்பநிலையைத் தாண்டிய அவரது வளர்ச்சியை 'மனங்கொத்தி மனிதர்கள்', 'சில மனிதர்கள்', 'இயன்றால் நகுக' ஆகிய கதைகள் வெளிக்காட்டி நிற்கின்றன என அ. யேசுராசா அவர்கள் இவரது அறிமுகம் பற்றிய குறிப்பில் எழுதியுள்ளார்.

'சில மனிதர்கள்' எனும் இந்நூலில் வரும் கதைகளைப் படிக்கின்ற போது சீற்றம் வருகிறது. இந்தச் சீற்றமே செயலுக்கு உரியவர்களாக ஆக்கிவிடத் துணிகிறது. அந்தத் துணிவை வரவழைக்கிற அந்தக் கதைகள் அடங்கிய இந்நூலை 'சாயி வெளியீடு, கணேசகிரி, கல்வளை, சண்டிலிப்பாய்' வெளியிட்டிருக்கிறது.




பல நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து - யுத்தம் நடந்துகொண்டிருக்கின்ற தாயக பூமியில் இருந்து மிக அற்புதமாக 'வெளிச்சம்' சிறப்பிதழ் வெளிவந்திருக்கிறது. தாயக பூமியின் யதார்த்த வாழ்வியலை உயிர்த்துடிப்போடு படம்பிடிக்கின்ற இலக்கியப் படைப்புக்களிலிருந்து 'மின்னல் குடியிருக்கும் கண்களைத் திறந்து கைகளை வீசு' - மாலிகா, 'கும்பிட்டு வாழமாட்டோம்' - சோ. பத்மநாதன், "சுவைத்தலும் மதிப்பிடுதலும்" - கலாநிதி நா. சுப்பிரமணியன், "அசோகவனம் அல்லது வேலிகளின் கதை"- சாந்தன், "சமகால தமிழ் புனை கதை" - கார்த்திகேசு சிவத்தம்பி, "கல்முனை தொட்டு அரசபுரம் வரையிலான புராதன தமிழ்க் குடியிருப்புக்கள்" - ம. புஸ்பரட்ணம் ஆகியோரது ஆக்கங்கள் இவ் இதழை ஒளியேற்றுகின்றன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# அசோகவனம் அல்லது வேலிகளின் கதை

சாந்தன்

“சலோ!....”- சொன்னவன், இரண்டு எட்டு முன்னால் வைத்துத் திரும்பிப் பார்த்தான்.

சிங்கர் கிருஸ்ணனைப் பார்த்தார். கிருஸ்ணன் சிங்கரைப் பார்த்தான். முன்னே போங்கள் என்பது போல ஆளுக்காள் தலையாட்டினார்கள். அது பயத்தாலல்ல, மரியாதைக்காக என்பது இருவருக்குமே தெரியும். ஒரு கணத்தயக்கத்துக்குப் பிறகு- வயதுக்கு கிருஸ்ணன் கொடுக்கிற மரியாதையை ஒப்புக் கொண்டவராக- சிங்கர் முன்னால் வந்து அந்தச் சிப்பாய்க்கருகில் போய் நின்றார். அவருக்குப் பின்னால் கிருஸ்ணன் போய்ச் சேர்ந்து கொண்டான்.

“சலோ....”- சிப்பாய் திரும்பவும் சொன்னபடி தெருவிலிறங்கினான். சிங்கரும் அவரைத் தொடர்ந்து கிருஸ்ணனும் இறங்கினார்கள். படலைக்கு வெளியே நின்ற நாலு ஆட்கள் இரண்டிரண்டு பேராய் முன்னும் பின்னும் சேர்ந்துகொள்ள ஒரு வரிசை உருவானது.

இந்த வீட்டிற்கு முன் வீட்டில் சிப்பாய்கள் நிறையப்பேர் நின்றார்கள். அநேகமாக எல்லோருமே மதிலின் மேலால் இங்கு எட்டிப் பார்த்தபடி. முன்னாலிருந்த காவற் கூட்டுக்குள் நின்றவன் ஏதோ உரத்துச் சொல்லிவிட்டுச் சிரித்தான்.

அடியெடுப்புக்கும்- அந்த கறுத்தத் தோல் செருப்புக்கள் டக் டக் என்று சீரான ஒலி கிளப்பிக் கொண்டிருக்கின்றன. சிங்கர் வழமையான கோலத்தில்தான் இருக்கிறார். வெள்ளை வேட்டி, நஷனல், வெள்ளைச் சால்வை- அது கழுத்தைச் சுற்றிப் போடப்பட்டிருந்தது. நரை மயிரடர்ந்த தலை. வழமையாகத் திருநீறும் சந்தணமும் துலங்குகின்ற நெற்றியில் இன்று திருநீற்றை மட்டும் பார்த்த ஞாபகம். எப்படியோ ஆள் தொண்ணூறு வீதமாவது வழமையான கோலத்தில்!

கிருஸ்ணன் தன்னைப் பார்த்தான். மண்ணிற பிஜாமா சாரம்.




திரும்பிப் பார்த்தார்கள். அந்தப் பெரிய விறாந்தை முழுவதும் சனமாய் நின்றது. அம்மா, வேணி அக்கா, பிள்ளைகள்- எல்லோருக்கும் முன்னால். கிருஸ்ணனையே பார்த்தபடி நின்றார்கள். உனக்கேன் இந்த இருக்கேலாத வேலை? சாப்பாடெதுக்கு? இங்கே இருக்கிற- மற்றவர்களைப் போல, நீயும் நிண்டிருக்கேலாதா?- என்று அவர்கள் நினைப்பது அவனுக்குக் கேட்டது. “போய் மினைக்கெடாமல் பத்திரமாய் வந்துவிடு” என்று அந்தப் பார்வைகள் சொல்லின. கிருஸ்ணன் “இதுக்கென்ன பயம்?” என்பதாக- அவர்களை உற்சாகப்படுத்துவது போல- ஒரு மெல்லிய முறுவலுடன் தலையசைத்தான்.

நெய்யும் கடலையெண்ணையும் கலந்த வாடை மூக்கிலடித்தது. அவர்களைப் பார்க்காமல் தாண்டிப் போனார்கள்.

மெல்லத்தான் நடக்கவேண்டியிருந்தது. முன்னால் போகிறவன் ஆறுதலாய் போகிறான் போலும். திரும்பி, தாங்களிருந்த வீட்டின் விறாந்தையில் நிற்பவர்களைத் தெரிகிறதா என்று பார்க்க நினைத்தான் கிருஸ்ணன். வேண்டாம் இவங்கள் ஏதாவது நினைக்கக்கூடும். அதோடு, இங்கிருந்து பார்த்தால்- மதிலுக்கு மேலால் நிற்கிற மரங்கள் மறைக்கும்.

சிங்கரின் நெடிய உருவம், முன்னால் கையெட்டும் தூரத்தில் போய்க்கொண்டிருக்கிறது. வேட்டியின் கீழ்- அவரது ஒவ்வொரு

ரப்பர்ச் செருப்பு. வெளியே விட்ட வெள்ளை அரக்கைச் சட்டை. வீட்டிலிருக்கிற கோலம். நேற்று மத்தியானம் குளித்துவிட்டுப் போட்ட உடுப்பு.

பரவாயில்லை, போய் இந்தச் சாப்பாட்டு விஷயத்தை ஒழுங்கு பண்ணிவிட்டு வந்து மத்தியானம் குளித்து மாற்றிவிட்டால் சரி. ஆனால் முகாமிலிருக்கிற சனத்தைப் பார்த்தால் மத்தியானமாவது குளிக்கமுடியுமோ தெரியவில்லை. வந்து பார்க்கலாம். எப்படியும் இவ்வளவு பேருக்கும் இந்த மூன்று நாலு நாளைக்கும் சாப்பாட்டை ஒழுங்கு பண்ணிக் கொள்ளத்தான் வேணும்... எத்தனை பேர், எத்தனை குஞ்சு குருமன்.... நாங்கள் போய்க் கதையாமல் சரிவராதாம்.

தெருக்கரையில் அங்கங்கே

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தேங்கி நிற்கிற வெள்ளத்தை விலக்கி நடக்கவேண்டியிருந்தது. கழுவி விட்ட நிலத்தில் காலை வெயில் அழகாய் விழுந்தது. நீண்டு நகரும் நிழல்கள். தடம்படாத தெருக்கரை மண். மழை பெய்தது முந்தநாளிரவு..

எங்கே போகிறோம்? எங்கேயி ருக்கிறது செஞ்சிலுவை அலுவலகம்? போனால் உடனே கவனித்து அனுப்பி விடுவார்களென்று பி. கே. சிங் சொன்னான். வேளைக்குத் திரும்பிவிட்டால் நல்லது. அநேக மாக அம்மன் கோவிலடிப்பக்கம் இருக்கலாம்.

2

சரிதான், முன்னால் போகிற வன் இடது பக்கமாகத்தான் திரும்பப் போகிறான்.

திரும்பினார்கள்.
என்ன இது?
கிருஸ்ணன் திகைத்தான்.

தெருவின் இருபுறத்து வேலிக ளும் கருகி.... மதில்கள் உடைந்து, கதிரேசு கடைப் பலகைகள் கூட.

இதென்ன?

உயிரசைவே இல்லாத வெறுமை உறைத்தது. எங்கோ, ஒரு தனிக் காகம் இரண்டுதரம் கத்தியது. ஆட்களை அமுக்குவது போலிருந்த அமைதி, இந்தக் கத்தலில் இன்னமும் பெரிதாய்க் கனத்தது....

சிங்கரை நிமிர்ந்துபார்த்தான். அவருக்கும் உறைத்திருக்கவேண் டும் - பார்த்துப் பார்த்து நடப்பதில் புரிகிறது. கதைக்க முடியாதா? இயந்திரங்கள் போல முன்னும் பின்னும் கூட வருகிற படை ஆட்கள்....

இவர்கள் ஏனிப்படி எங்களைக் கூட்டிக்கொண்டு போகிறார்கள், ஏதோ கைதிகளைக் கொண்டு செல்வது போல? இரண்டு சிவிலியன்களைக் கூட்டிப் போக ஏன் இவ்வளவு பாதுகாப்பு?....

முன்னால் ஒருதன் துவக்கோடு- அதை நீட்டிப் பிடிக்கிற விதமும் நடக்கிற நடையும் எச்சரிக்கை எச்சரிக்கையாக அடிவைக்கிறான்- அங்குமிங்கும் பார்த்தபடி. அடுத்த வர்களும் அதே மாதிரி! பின்னால் வருகிறவர்கள் அவர்களைத் திரும் பிப் பார்க்கமுடியாது. அவர்களும் அப்படித்தான் வருவார்கள்!

எங்கே போகிறோம்? என்னத் துக்கு இப்படி? முட்டாள்தனமாக வந்து மாட்டிக்கொண்டோமோ? வேலியாயிருந்தவற்றின் விளிம்போடு படர்ந்திருந்த பச்சைப் புல்வரிசைக் கும், வாரடித்த வெள்ளைமணற் கரைகளுக்குமிடையில் கரைந்துங் கலைந்துங் கிடக்கிற கரித்திட்டுக்கள். தெருவின் தாரிலும் குறுணிக் கற்களிலும் அவர்களின் முரட்டுச் சப்பாத்துக்கள் நறுநறுக்கிற நடை யொலி. அது மட்டுமே கேட்கிற அமைதி. இந்த வெறுமை, இந்தப் பயங்கரம்... எங்கள் ஊர்தானா இது? இல்லை. இது கனவில்லை.

நடந்தபடியிருந்தார்கள்.

பொன்னையர் வீட்டுப் போட்டிகோ கூரையின் மேல் அவர் வளவின் முன்மதில் கல்லெல் லாம் ஏறி, அது ஒரு கொத்தளமாகி ஓட்டையிலிருந்து ஒரு துவக்கு நீட்டிக்கொண்டிருந்தது.

துரைலிங்கம் வீட்டு வேலி வெட்டி, அடிவளவு வரை தெரிகி றது. கார்க்கொட்டிலில் துரையரின் மொறிஸ் மைனர் எரிந்து கருகி வெறுங் கோதாய்... இந்தப் பக்கத்துச் சனங்களையெல்லாம் எங்கே கொண்டுபோய் விட்டிருப்பான்கள்? அம்மன் கோவிலிலா? எங்களைப் போல எந்தக் குறிச்சியும் இவர்க ளிடம் அகப்பட்டுக்கொண்டதா, இல்லை, சுற்றிவளைப்பிற்கு முன்பே மாறிவிட்டதா?

மணத்தது.
மணம் நெருங்கி வந்தது. இங்கே எங்கோ கிட்டத்தில்தான்.

அந்தா, குணம் வீட்டு மதிலின் பின், இரண்டு இடங்களில், ஓட்டை களூடாக நீட்டிய துவக்குகள். காவற்கூடுகள். குணம் வீட்டுக்கு அந்தப் பக்கமும் அதேபோல் இரண்டு. பாக்கியமக்கா வீடு, பரஞ்சோதியர் வீட்டு மதில்களின் கற்கள்! செல்வத்தின் சைக்கிள் கடையின் முன்னாலிருந்த பத்தியின் தகரங்களையும் காணவில்லை. அவைதான் போலும், மேலே! முழு இடமும் புயலடித்து ஓய்ந்தது மாதிரி! இல்லை, இனித்தான் புயலோ?

முன்னால் போனவன், வலது புறம் சட்டெனத் திரும்பினான். பரமசிவம் வீட்டுக்குப் போகிற வண்டில் பாதை! திரும்பினார்கள்.

3

இதென்ன? மயிர்க்கொட்டி மொய்த்தது போல? இத்தனை பேர்களா?

சிலிர்த்தது.
இதுவுங் கனவில்லை.
இங்கே ஏன் வந்திருக்கிறோம்?

இதற்குள் எப்படி நாங்கள் தேடி வந்த இடம் இருக்கமுடியும்?... இத்தனை பேரிருந்தும் எவ்வளவு அமைதி! இந்த முடக்கினுள் இத்தனை சிப்பாய்கள் இருப்பார்கள் என்று யார் நினைப்பார்கள்?...

வேலிக்கரைகளோடு- வரிசை...

வரிசையாய்- குந்தியும் சப்பாணி கட்டியும்.... பீடிகளை உறுஞ்சியபடி. நெய் மணத்தையும் மீறி எங்கும் அது மணத்தது.

கிருஸ்ணனுக்கு வயிற்றைப் பிசைந்தது. எங்களூரில் இப்படி கூர்க்காக்கள் மொய்ப்பார்களென்று எவராவது எப்போதாவது நினைத்தி ருக்க முடியுமா?

இவர்களின் வரிசை நடுவால் நடந்தது. இங்கொன்று அங்கொன் றாக, ஆங்கார உறுமல்கள், முணுமுணுப்புக்கள். இருந்தாற்போல் ஒரு சீழ்க்கை! எல்லா முகங்களும் ஒரே மாதிரி மரத்துக்கிடந்தன. பார்க்காமல் நடந்தார்கள். திடீரென ஒருவன் தலையை உயர்த்திக் கறுவி னான்.. கத்திய சத்தம் திடுக்கிட வைத்தது. எல்.ரீ.ரீ.ஈ. என்ற மாதிரிக் கேட்டது. சிரித்தால் என்ன நடக்கும்? இந்த நேரத்திலும் வருகிற சிரிப்பை கிருஸ்ணன் மறைத்துக் கொண்டான்.

பரமசிவம் வீட்டுக்குத்தான் நேரே போனார்கள். கேற்றில்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஹைக்கூ வடிவ கவிதைகள்

அமைதி காப்பதென
ஆயுதங்கள் முழங்கின
தகர்ந்த வீடொன்றுள்

சிதைந்த நிலையில் காந்தியின் படம்

★

புத்தரின் சிலைநிழலில்
இட்லரின் அரியணை

தார்மீக அரசாட்சி!

★

இரண்டு படாத இலங்கை
அழகுதான்

வரைபடத்தில்!

★

வீழ்ந்த வீரனின்
கைகள் விரிந்தன

புதிய கரங்களில் கனம்!

★

அடர்ந்து கறுத்து
இருண்டது வானம்

தாரகை மிளிர்ந்தது!

★

இருளதன் இறுக்கத்துள்ளும்
இனிமைமிகு கூவல்கள்

குயில்களின் கனவில் கதிரவன்!

★

வளைந்திருந்த
எம் தெருக்களும் நிமிர்ந்தன

முகங்களில் மாவீரர் முகவரி!

– செ. போ. சிவனேசு

நுழைந்து திரும்பியதும், சிவத்தார் வளவு விரிந்து கிடந்தது. மேலே அடர்ந்த தென்னைகளும், கீழே அடர்ந்த புற்தரையும். இந்த இடத்தில் சந்தடியில்லை. ஆனால், நேரே முன்னால், சற்றுத் தொலைவில், வீட்டின் போர்ட்டிகோ பரபரத்துக்கொண்டிருந்தது.

கொஞ்சத்தூரம் போனவர்கள், ஒரு தென்னையருகில் வந்ததும் அழைத்து வந்தவன் இவர்களை நிற்கச்சொல்லிக் கையைக் காட்டினான். நின்றார்கள். அவன் மட்டும் நேரே போனான்.

இது இவர்களின் இடம். அலுவலகமோ, முகாமோ, எதுவோ. அதிலும் இந்த அமளியைப் பார்த்தால் பரமசிவத்தாரின் பழைய மோட்டார் சைக்கிள் எண்ணெய் சொட்ட நிற்கிற இந்தப் போட்டிகோதான் அவர்களின் கட்டளை மையமாகத் தெரிகிறது....

முப்பதடிக்கு முன்னால் அந்தப் போர்ட்டிகோ. அங்கு நடக்கிறதெல்லாவற்றையும் நன்றாகப் பார்க்க முடிகிறது. நடுவில் சோஃபாக் கதிரையில் ஒருவன். அதிகாரி போலும். அவனும் கூர்க்கா. சற்றுத் தள்ளி, ஒரு மேசையின்மேல் தொலைதொடர்புக் கருவிகள். அவற்றின் முன்னால் மூன்றுபேர் கதிரைகளில் உட்கார்ந்து மாறி மாறிக் கத்திக்கொண்டிருந்தார்கள். வெவ்வேறு இடங்களுக்கு இங்கிருந்து கட்டளைகள் போவது மாதிரி இருந்தது. வயர்லெஸ்காரர்களின் பின்னால், அவர்களின் கதிரைகளில் கையை ஊன்றி வளைந்து ஒரு நெட்டை மனிதன்; கட்டளைகள் இட்டபடி. அவன் கூர்க்கா அல்ல. நல்ல சிவலை. கறுத்தச் சீருடை. முழு மொட்டையாக மழித்திருந்த தலை.

இவர்களைக் கூட்டிப் போனவன், கூர்க்காவின் முன்னால் போய் நின்று சல்யூட் அடிக்கிறான். ஏதோ சொல்வது தெரிகிறது. திரும்புகிறான்.

அவன் வருவதை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அருகில் வந்ததும், "ஆவ்!..." என்றான்.

முகாமிலிருந்து புறப்பட்ட போது 'சலோ'வுக்குப் பிறகு அவன் வாயிலிருந்து வருகிற அடுத்த வார்த்தை இதுதான்.

4

காலுக்குமேல் காலைப் போட்டுக் கொண்டிருந்த அதிகாரி, இவர்களையே உறுத்துப் பார்த்தபடி இருந்தான். தொப்பி மடியிலிருந்தது. அங்குமிங்கும் நரையோடிய தலை. ஐம்பது வயதிருக்கலாம். அருகில் போன பிறகுதான் அங்கே வேறு கதிரைகளில்லாதது கண்களில் பட்டது.

கூர்க்கா ஒன்றுமே பேசவில்லை. இவர்களையே இன்னமும் உற்றுப் பார்த்தபடி இருந்தான்.

"குட்மோனிங்" என்றார் சிங்கர்.

அவன் முறைத்தான்.

"வெயிட் தேர்!..." உறுக்கியபடி தூணைக்காட்டினான்.

"விக்ரம்சிங்"

அழைத்து வந்தவன் அவசரமாக முன்னால் வந்தான். அதிகாரி சொன்னதை அட்டென்ஷனில் நின்று கேட்டான். சல்யூட் அடித்து திரும்பி நடந்தபோது, அந்த விக்ரம் சிங்கின் பின்னால், அவனோடு கூடவந்த நாலுபேரும் போனார்கள்.....

கிருஷ்ணன் திடுக்கிட்டான்.... நாங்கள் இங்கே வந்திருக்கவே கூடாது! சாப்பாடாவது, ஒன்றாவது... போகிறவர்கள், பி. கே. சிங்கின் ஆட்கள். இவர்களைக் கொண்டு வந்து விட்டு விட்டுப் போகிறார்கள். இனித் திரும்புவது?... இந்தச் சூழலில் தனியே இவ்வளவு தூரமும் - அரைமைல் தானென்றாலும் போகமுடியுமா? இவர்கள் கொண்டுபோய் விடுவார்களா?... நடக்கிற நடப்பைப் பார்த்தால், போகத்தான் முடியுமா என்பதே சந்தேகமாயிருக்கிறது.

கிருஸ்ணன், புறங்கையால் முகத்தைத் துடைத்துக்கொண்டான்.

பி. கே. சிங்கின் முகத்தில் பொய்யோ, மெய்யோ புன்சிரிப்பா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



வது தெரிந்தது. கதிரையிலிருக்கிற இந்த கூர்க்கா முகத்தில், அதன் சாயலையே காணவில்லை. பிடித்துத் தின்றுவிடுகிறவன் மாதிரி.... நெஞ்சு படபடத்தது.

வீட்டுக்குள்ளிருந்து ஒருவன் வந்தான். வெள்ளித்தட்டு. அது நிறைய, வெள்ளையாய்ப் பூக்குவியல் போல... தேங்காய்ச்சொட்டு!

வந்தவன் கூர்க்காவின் அருகே போய்த் தட்டை நீட்டினான். அவன் கையை மட்டும் நீட்டிப் பிடியாக அள்ளிக்கொண்டதும், தட்டுக்காரன் மொட்டந் தலை ஆளின் முன் போய் நின்றான். கிருஸ்ணன் இப்போதுதான் கவனித்தான் - அந்த ஆளின் தலை முழு மொட்டையில்லை; உச்சிச் சுழியருகில் மட்டும், விரல் தடிப்பில் நீளமாய் - எலிவால் போல ஒரு குடுமி. அம்புலிமாமாப் படங்களில் வருகிற சில ஆட்களின் தலை மாதிரி.

அந்த ஆள், கதிரையில் கிடந்த வெள்ளைத் துவாய் ஒன்றை எடுத்தான். ஒற்றைக் கையால் முகத்தை அழுந்தத் துடைத்தபடி, மற்றக் கையால் சொட்டுக்களை எடுத்தான். தட்டுக்காரன் கூர்க்காவின் அருகிலிருந்த சிறிய முக்காலியில் தட்டை வைத்துவிட்டு உள்ளே போனான்.

எதிரே இவர்கள் நிற்கிற உணர்வேயில்லாமல் இருவரும் சப்புகிறார்கள்...! கிருஸ்ணனுக்கு எரிச்சல் மண்டியது. இருக்கக்கூட இடந்தராமல்!... சிங்கரைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. அவர், பக்கத்தில் தோளோடு தோள்முட்ட நிற்கிறார். ஆனால் எப்படித் திரும்புவது?..

கதிரையில் இருக்கிறவனின் பெயர்ப்பட்டி இப்போது வடிவாகத் தெரிகிறது. மேஜர்!... பெயரைப் படிப்பதற்குள் கூர்க்கா கையை அசைத்துவிட்டான்.... இப்ப தெரிகிறது. பதாவோ, பாதாவோ. எப்படி உச்சரிப்பது? கறுப்புச் சட்டைக்காரனின் பெயரையும் பார்க்க வேண்டும் போலிருந்தது. அவன், நின்ற நிலையிலேயே வயர்லஸ்காரர்களை அதட்டியபடி, வலது கையால் வாய்க்குள் சொட்டுக்களை எறிந்தபடியிருக்கிறான். கப்டன். வன்பர். அதைகூட சிலவேளை வான்பர் என்றோ வன்பார் என்றோ உச்சரிக்கவேண்டுமோ?

## 5

பதா, கிருஸ்ணனைக் கூப்பிட்டான். "கம் ஹியர்!"

கதிரையில் காலுக்குமேல் கால் போட்டபடி இருந்து கூப்பிடுறான்!

இதுகாலவரை இப்படி எவருந் தன்னைக் கூப்பிட்டதில்லை.

வந்த எரிச்சலுக்கு...

என்னதான் செய்துவிட முடியும்? கையாலாகாத கோபம்.

இரண்டடி எடுத்து வைத்தான்.

"நீ இங்கிலீஸ் பேசுவியா?"

அது பேசப் போய்த்தானே பி.கே.சிங் இங்கே அனுப்பியிருக்கிறான்!

"ஓரளவு..." தெரிந்ததாக இவர்களுக்குத் தெரிந்துவிட்டது எவ்வளவு பிரச்சினையாகப் போயிற்று!

"என்னுடைய கேள்விகளுக்கு ஒழுங்காகப் பதில்சொல்லவேண்டும்... பொய் சொல்லித் தப்ப நினைக்கக்கூடாது..."

உறுத்து மிரட்டும் கண்களால் தன் உளவுறுதியைச் சிதறடிக்க முயல்கிறானா இந்த இராணுவத்தான்?

இதுதான் உணவுக்கு ஏற்பாடு செய்கிற வள்ளல்!

"நீ ஒரு எல்ரிரியா?"

"இல்லை"

"பொய் சொல்லாதே! சொன்னால்..."

கிருஸ்ணன் விறைப்பாகச் சொன்னான்.

"இல்லை, நான் ஒரு ஆசிரியன்.... குடும்பகாரன்..."

"ஆசிரியன் என்கிற முறையில் உண்மையைச் சொல்லு. எல்ரிரிஈக்காரர்கள் எங்கே?... இங்கே யார் எல்ரிரிஈ?..."

"இங்கு ஒருதரும் இல்லை.."

"நீ ஒரு இளம் ஆள். உனக்குக் கட்டாயம் தொடர்பு இருந்திருக்கும்....."

"எனக்கு அவர்களோடு எந்தத் தொடர்பும் கிடையாது."

"ஷட் அப்!..." அவன் கதிரையிலிருந்து துள்ளி நிமிர்ந்தான். கன்னத்துத் தசைகள் துடிப்பது வடிவாய் தெரிந்தது. இமைகொட்டாமல் இவனையே முறைத்தான்.

"எனக்குப் படிப்பிக்க நினையாதே!" கன்னத்துத் தசைகள் இன்னமுந் துடித்தன.

இதற்கு என்ன சொல்வது? கிருஸ்ணன் பேசாமல் நின்றான்.

"சரி இந்த ஊர் புலிகளின் கோட்டை என்று சொல்லப்படுகிற இடம். நீ இந்த ஊரவன். உனக்கு அவர்களைத் தெரியாது என்கிறாய்! எப்படி நம்புவது?" அடிக்காத குறையாக கையை நீட்டி இரைந்தான் மேஜர்.

"இருந்திருக்கலாம்... ஆனால் எனக்குத் தெரியாது..."

"அதெப்படி?.." பதா கோபமாய் உறுமி நக்கல் சிரிப்புச் சிரித்தான்.

"என்னை முட்டாளாக்கப் பார்க்கிறாயா?"

"என்னைச் சொல்ல விடுங்கள்..." வருவது வரட்டும் என்று கிருஸ்ணன் சொன்னான்:

"இப்போது இங்கே நீங்கள் இவ்வளவுபேர் இருக்கிறீர்கள். உங்களை யார், எவர்? யார் அதிகாரி, யார் சிப்பாய்? எங்கிருந்து வந்தீர்கள், இனி எங்கே இருப்பீர்கள்? இது ஒன்றுமே எங்களுக்குத் தெரியாது. எங்களைப் பொறுத்தளவில் நீங்கள் இங்கே இருந்தீர்கள் - இதைத்தான் நீங்கள் போன பிறகு யாராவது கேட்டாலும் எங்களால் சொல்லமுடியும்!..."

முடித்தபோது பதற்றமாயிருந்தது. அதிகம் பேசிவிட்டேனோ?

பதா, உற்றுப் பார்த்துக்கொண்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

டேயிருந்தான். வளைந்த புருவங்களின் கீழ் அந்த இடுங்கிய மொங்கோல் கண்கள் இன்னும் சிறிதாகி அவை கிருஸ்ணனைத் துளைக்க முயன்றன.

மார்பின்மேல் கட்டிக்கொண்டிருந்த கைகளை விலக்கி முகத்தைத் துடைத்தான் கிருஸ்ணன்.

அரை நிமிஷமிருக்குமா?

பதா சொன்னான்!

"இங்கே பார்!"

கிருஸ்ணன் பார்த்தான்.

"... இப்போ நான் உன்னை ஓடும்படி சொல்ல முடியும்... ஆனால் நீ எவ்வளவு தூரம் ஓடிவிடுவாயென்றும் நான் பார்த்து விடுவேன்..."

அவன் சொன்னது விளங்கச் சில வினாடிகள் பிடித்தன!

கிருஸ்ணனுக்கு வியர்த்தது. 'உன்னைச் சுடுவேன்' என்பதை இதைவிட வடிவாக வேறெப்படிச் சொல்லமுடியும்.?

## 6

என்ன செய்ய நினைக்கிறான் இவன்? கிருஸ்ணனுக்கு நெஞ்சிடித்தது. சிங்கர் பின்னால் நிற்கிறாரா?...

அந்த மொட்டந்தலை மனிதன் கழுத்திலொன்றும் கைகளில் இரண்டுமாய்- தொலைபேசிகளுடன் மல்லாடியபடியே இங்குமங்கும் பார்த்துக்கொண்டிருக்கிறான்...

"பின்னால் போ!" கூர்க்கா கத்தினான்.

என்ன சொல்கிறான். இவன்? சற்றுமுன் சொன்னது போல சுடப்போகிறானா? கடவுளே.... அசையவே முடியாதிருந்தது.

"பின்னால் போய்நில்!" மேஜர் மீண்டும் கூவினான்.

"யூ கம் ஹியர்!" என்றான் சிங்கரைப் பார்த்து.

கிருஸ்ணனுக்கு நம்பமுடியவில்லை; இப்போதைக்கு விட்டிருக்கிறானோ?... தன்னையறியாமலே




## தமிழீழ மாணவர் எழுச்சிநாள்

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் வட தமிழீழமெங்கும் மிகவும் உணர்ச்சிகரமாகக் கொண்டாடப்பட்டது. அவ் எழுச்சிநாளில், பாடசாலைகள், மற்றைய இடங்கள் என்பன சுறுசுறுப்பாக இயங்கின. மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எல்லோரும் அந்நாளின் கொண்டாட்டங்களில் கலந்துகொண்டு அந்நாளை வெற்றிகரமானதாக ஆக்கினார்கள்.

ஆனி, 5ம் திகதி காலை 8.30 மணிக்கு சகல பாடசாலைகளிலும் தேசியக்கொடி ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து எழுச்சிநாள் சம்பந்தமான சிறப்புப் பேச்சுக்கள், மற்றும் நிகழ்வுகள் இடம்பெற்றது.

இவ்வெழுச்சி நாளின் மாலைநேர கொண்டாட்டங்கள் கோட்ட ரீதியில் இடம்பெற்றது. மாணவர்கள் தேசியக் கொடியை ஏந்திய வண்ணம் பாண்ட் வாத்தியங்கள் இசைத்தபடி அணிவகுத்துச் சென்றனர். யாழ். கோட்ட நிகழ்வுகள் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்றன.

www.tamileelamarchive.com

பின்னுக்கு நகர்ந்தான்.

சிங்கர் முன்னால் போனார். தோளில் கிடந்த சால்வையைச் சரியாக இழுத்துவிட்டபடி நின்றார்.

"இப்போது நீ சொல்லலாம்!..". பதா உறுமினான்.

"நான் என்ன சொல்லவேண்டுமென்கிறீர்கள்?..."

அந்தக் குரலும் ஆங்கிலத்தின் சுத்தமும் அவனை ஒருகணம் அசைத்திருக்கவேண்டும்.

"உண்மையை!... உண்மையைச் சொல்லு..."

"நாங்கள் இந்தியாவை எங்கள் தாய்நாடாக மதிப்பவர்கள்"

அவரை அவன் முடிக்கவிடவில்லை.

"உன்னுடைய புலுடாவை நிறுத்து!..." கத்தினான்.

"இந்தியாவுக்கு எதிரானவர்கள் இந்தியாவுக்குள்ளே கூட இருக்கிறார்கள்!"

அந்தப் பெரியவரை தன் முன்னால் நிறுத்திவிட்டு, இவன் கதிரையில் கால்மேல் கால்போட்டபடி உட்கார்ந்து கதைக்கிற விதம்! அவருடைய படிப்பென்ன, பழக்கவழக்கமென்ன, வயதென்ன, மதிப்பென்ன....

இன்று? எங்களை இவர்கள் ஏதோ அடிமைகள் மாதிரி....

இராணுவம் என்கிற திமிர்! ஆயுதங்களும் ஆட்களுமிருக்கிற அகம்பாவம்!

"ஸோ, உனக்கும் ஒருவரையுந் தெரியாது?"

"தெரியாது"

"போய் நில்!...." பதா, கத்தினான்.

"எக்ஸ்கியூஸ் மி..." சிங்கர், நிதானமாகச்சொன்னார்:

"...நீங்கள் எங்களைத் தவறாகப் புரிந்துகொண்டு விட்டீர்கள். காலையில் எங்கள் முகாமைப் பார்க்க வந்த உங்கள் கப்டன் பி.கே. சிங், வீடுகளுக்குப் போக அனுமதிக்கும் வரை ஊரவர் எல்லோரும் முகாமில் தானிருக்கவேண்டுமென்றார். அதுவரை எங்களுக்கான சாப்பாட்டு ஏற்பாடுகள் பற்றி..."

"ஷட் அப்!...." மேஜர், உச்சக்குரலில் இடைமறித்தான். முகம், இரத்தமாய்ச் சிவந்து, வியர்வையில் பளபளத்தது.

"இரண்டு பேரும்..." அவன் காட்டினான்:

"....அந்த மதிலோடு போய் நில்!"

## 7

மதிற்கரையோடு மாரிப்புல் மெத்தையாகச் சணைத்திருந்தது. சிவத்தார் வீட்டுப் பூமரங்கள் இந்த மழைக்கு வஞ்சகமில்லாமல் மதாளித்து நின்றன. அவன் கனகாலம் தேடித்திரிந்த சரக்கொன்றைக் கன்றுகள், இந்தா- இதில்- கைக்கெட்டும் தூரத்தில் முளைத்து நிற்கின்றன! என்ன வேடிக்கை!.... யார் செய்கிற வேடிக்கை இது?

சிங்கர் அருகோடு நிற்கிறார். ஆளை ஆள் பார்த்துக்கொண்டார்கள். அவரின் முகமெல்லாம் வியர்த்திருந்தது. கண்ணாடியைக் கழற்றிவிட்டு சால்வையால் ஒற்றிக்கொண்டார். கதைக்கவே பயமாயிருக்கிறது.

"என்ன நினைப்பான்களோ....! இப்பிடி வெருட்டினால்...? எங்களுக்கென்ன தெரியும்?.."

கிருஸ்ணன் திரும்பிப் பார்த்தான்.

எதிரே போர்ட்டிகோ. இங்கே கதைத்தால் கேளாதுதான். என்றாலும் பதாவை இப்போது காணவில்லை.

அம்புலிமாமா ஆள் தொலைபேசியுடன் இன்னமும் அமளியாக இருக்கிறான். அவனோடு மட்டும் ஐந்தாறு ஆமிக்காரர். வீட்டின் கோடிப்பக்கத்தில்- சமையல் வேலை நடக்கிறதா? கிடாரங்கள் வாளிகளின் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றன.

இவர்களின் இடதுபக்கம், கேற்முடக்கின் மறைவில்- அந்தக் கையொழுங்கையில் மொய்த்துக்கொண்டிருந்த ஆட்கள் இன்னமும் அங்கேதானிருக்க வேண்டும்.

பீடிப்புகை, காற்றெல்லாம் கலந்திருந்தது. இங்கிருந்து ஒன்றுமே தெரியவில்லை.

களைப்பாக இருந்தது. பசியில்லை, ஆனால் தண்ணீர் விடாய்த்தது. காலையில் எழுந்ததற்கு பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்கவில்லை!

"இந்தா, பத்து நிமிஷத்தில் பேசிவிட்டு வந்துவிடலாமென்று கூட்டி வந்து....! என்ன நயவஞ்சகம்...."

கோபமா, கவலையா, பயமா, ஏமாற்றமா - எதுவென்றில்லாமல் எல்லாம் கலந்து மனதை அழுத்தின.

"இதிலை இருப்பம்" என்று சிங்கரைப் பார்த்தான்.

"ம்ம்?.." என்றவர், உடனே

".. ஏதும் சொல்லுவாங்களோ?" என்றார்.

"இருந்து பார்ப்பம்..." காலால் புற்பரப்பை மெல்லத் தடவிவிட்டுக் குந்தினான். சப்பாணி கட்டிக் கொண்டபோது, காலுக்கு இதமாக இருந்தது.

சிங்கரும் பக்கத்தில் சால்வையைப் போட்டுவிட்டு அமர்ந்தார்.

யாராவது பார்க்கிறார்களா? இல்லை ஒருவரும் இதைக் கவனித்ததாகத் தெரியவில்லை....

புல்லின் பூக்காம்பொன்றைக் கிள்ளி, கிருஸ்ணன் தன்னையறியாமலே பற்களால் நன்னலானான். என்ன நடக்கும்?

## 8

படபடவென்று முறியும் சத்தங்கள் கேட்டுத் திரும்பினார்கள். வளவின் மேற்குவேலி விழுந்து கொண்டிருந்தது. பென்னாம் பெரிய லொறியொன்று, முக்கியபடி, உள்ளேவர முயன்றுகொண்டிருந்தது. உச்சக் கியரில் அதன் உறுமல்...

ஒவ்வொரு கதிகாலாக முறிந்து அந்த மூரி வேலி - முடியாமல் வழிவிட்டுக்கொண்டிருந்தது.

தமிழீழ ஆவணக் காப்பகம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஒரேயொரு வாதநாராயணி மட்டும், கொஞ்சம் மொத்தமாகத் தாக்குப் பிடித்தது. காட்டுக் கத்தியும் கையுமாய், ஒரு சிப்பாய் ஓடி வந்து-

அதை அடியோடு தறிக்கலானான்.

வெட்டிய வேலிக்கப்பால், அடுத்த வளவு. அதுவும் தென்னங்காணி. முருகேசருடையது. அதையுந் தாண்டி, மதவடி றோட்டுத் தெரிந்தது! முருகேசர் வளவின் றோட்டு வேலி வெட்டித்தான் லொறி இங்கு வந்திருக்கிறது. இந்த வளவுக்கு வருகிற கையொழுங்கையால் பெரிய வாகனங்கள் வரமுடியாதென்று இந்த வேலை பார்க்கிறார்கள்! இப்போது மதவடி றோட்டிலிருந்து வலு சுகமாக வந்துவிடலாம்...

லொறி, தென்னைகளைத் தாண்டி வளைந்து வளைந்து வந்து கொண்டிருந்தது. சென்னைத் தெருக்களை நினைவுபடுத்துகிற அந்தப் புகைமணம்.

இவர்களின் இந்த வேலைகளைப் பார்த்தால், வாகனங்களும் ஆட்களுமாய்- இப்போதைக்கு விட்டுப்போகிற நோக்கம் இருப்பதாய்த் தெரியவில்லை...

குறுக்குப் பாதையை ஆட்கள் சீர்ப்படுத்துகிறார்கள். இந்த வளவுக்கு இவ்வளவு கிட்டவா, மதவடித் தெரு இருக்கிறது! தெருவுக்கு அந்தப் பக்கம் பனங்காணி. அதற்கப்பால் பள்ளிக்கூடத்தின் பழைய விளையாட்டு மைதானம்.

தண்ணீர்தான் நன்றாக விடாய்த்தது. எங்கே குடிக்கலாம்? அந்தா அந்த தகர மறைப்பின் பின்னால் சிவத்தார் வீட்டுக் கிணற்றடி. வெட்டிய வேலிக்கப்பால் முருகேசர் வளவுத் துலா தெரிகிறது. முழத்திற்கொன்றாய்க் கிணறுகள், மாரிக்கு முட்டி வழிந்தபடி! ஆனால்?... நினைக்க நினைக்க..

இப்படியே இந்தப் புல்லில் படுத்துவிட வேண்டும் போல் அசதியாயிருந்தது. தங்களைக் காணாமல் முகாமில் என்ன பாடுபடுகிறார்களோ.... இதெல்லாவற்றையும் அனுபவிக்கட்டுமென்றுதான் இப்படித் தடுத்து வைத்திருக்கின்றார்கள்!...

என்ஜினை ஒரு தடவை ஓங்கி ஒலித்துவிட்டு, லொறி மாவின் கீழ் வந்து மௌனமாய் நின்றது.

ஷக்திமான். சாணிநிற உடம்பில் தூசி - இந்த மாரியிலும். சில்லுகளில் சேறு. ட்றைவர் குதித்தான். வேறொருவரும் வந்ததாயில்லை. குதித்தவன், தொப்பியைக் கழற்றியபடியே, முன்னால் நின்ற ஆளிடம் ஏதோ உரத்துச் சொன்னான். பாணி, பாணி என்று கேட்டது. மற்றவன் பதில் பேசாமல் வீட்டின் பின்புறம் போகிறான். ட்றைவர், முகத்தைத் துடைத்தவாறே இவர்கள் பக்கம் பார்ப்பது தெரிந்தது. கிருஸ்ணன் பார்வையைத் திருப்பிக்கொண்டான்.

வெய்யில் ஏறிக்கொண்டிருக்கிறது. முகாமைவிட்டு புறப்பட்டு இரண்டரை மணித்தியாலயம்.

## 9

வீட்டின் பின்னாலிருந்து ஒருவன் வருகிறான். ட்றைவருடன் பேசிவிட்டுப் போன அதே ஆள். கையில் பெரிய வெள்ளிச் செம்பு- சிவத்தார் வீட்டுச் செம்போ?- ட்றைவரிடம் போய் நீட்டுகிறான். ட்றைவர் அண்ணாந்து மடமடவென்று குடிப்பதைப் பார்க்க, கிருஸ்ணனுக்கு இன்னும் விடாய்த்தது.

சிங்கர், காலை நீட்டி நெட்டி முறித்தார்.

"எழும்புவமா?"

"ம்ம்.." கிருஸ்ணனும் எழும்பினான்.

எவருமே பார்க்கவில்லை. தண்ணீர் குடித்தவன் புறங்கையால் வாயைத் துடைத்தவாறே செம்பைக் கொடுக்கிறான். அவன் தங்களைப் பார்க்கிறானோ?.... இங்கேதான் வருகிறானோ?..

இரண்டடி முன்னால் வைத்த ட்றைவர், மீண்டும் மற்றவனைக் கூப்பிட்டுச் செம்பை வாங்குவது தெரிகிறது. இவர்களை நோக்கி வருகிறான்...

"தண்ணி குடிக்கிறீங்களா?..." அருகில் வந்ததும் செம்பை நீட்டினான். தமிழனா?

என்ன செய்யலாம்? சிங்கர் தயங்கியபடி வாங்கினார்.

"நீங்க தமிழ் ஆளா?.."

"குடியுங்க.."

"எங்களை ஏன் இப்படி நிக்கச் சொல்லியிருக்கு?..."- குமுறலுடன் கேட்டான், கிருஸ்ணன்.

"என்ன ஆச்சு?"

சொன்னார்கள்.

"விட்டுருவாங்க. நோ ப்ராப்லம்! குடியுங்க..."

"நீங்கதான் ஒரு ஆள், இவ்வளவு நேரத்துக்கு, இப்படி வந்து மனுசத்தன்மையாய்க் கதைச்சிருக்கிறியள்.... தண்ணியும் தந்து..."

"என்னதான் இருந்தாலும் நாம ஒரே ஆளுங்க இல்லையா?"

"உங்கட பேரென்ன?..." சிங்கர் கேட்டார்.

"கோபாலன்"

குடித்துவிட்டு கிருஸ்ணனிடம் செம்பை நீட்டினார். தண்ணீர், நாக்கு, தொண்டை, நெஞ்சமெல்லாம் நனைத்து சில்லென்று இறங்கியது.

### கரும்புலிகள் நினைவாக நூலகத் திறப்பு விழா

கடந்த 5.7.94 கரும்புலிகள் தினத்தன்று வவுனியாக் கோட்டம் முத்துமாரி நகர், புளியங்குளத்தில் தமிழர் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட பொது நூலகம் வன்னி மாவட்டத் தளபதி சூட்டி அவர்களால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



"நான் மலையாளத்துக்காரன்... வாறேன் சார்..."

அவன் அவசரமாகச் செம்பை வாங்கிக்கொண்டு திரும்புவதாகப் பட்டது. லொறியை நோக்கி நடந்தான். சிங்கரும் கிருஸ்ணனும் ஆளை ஆள் பார்த்துக்கொண் டார்கள்.

என்ன நடந்தது இவனுக்கு? எங்களுடன் பேசிக்கொண்டிருந்ததை யாராவது பார்த்துவிட்டார்களா? அல்லது, பார்த்துவிட்டால் என்ற பயமா? தான் தமிழன் என்று ஒப்புக்கொள்ள இவனைத் தடுப்பது எது?

எல்லாமே புதிராக இருந்தது.

"இருப்பம்"

மீண்டும் புல் சணைப்பில் குந்தினார்கள். புல் மணத்தது.

10

எவ்வளவு நேரம் இருக்கவேண் டும், இன்னும்? என்ன நடக்கப் போகிறது? உடலே ஓய்ந்தமாதிரி.

இடதுபுறம்- ஒழுங்கை மறைவில் அத்தனை பேர்களும் இருக்கிறார்க ளென்றே படுகிறது. போர்ட்டி கோவில் அதே ஐந்தாறு பேர்தான். ஆனால் வீட்டினுள்ளும் பின்னா லும் எத்தனை பேரென்று தெரிய வில்லை.

ஒருவர் கூட இவர்களிடம் வரவே இல்லை. அந்த கோபால னைத் தவிர. அவன் எங்கே? வேலி வெட்டிய ஆட்கள் எங்கே? பீடிப்புகை, நெய்மணம், சமையல் புகை, வாகனங்களின் அருகாமை யில் கிளம்புற புழுதியும் பெற்றோ லும் கலந்த நெடி, பச்சைப் புல் வாசம் - என்று ஒவ்வொன்றையும் சுமந்து அலைந்த காற்று. இருந்தாற் போல இரைந்து கடந்தது. தென்னோலைகள் அலையாய் அசைந்தன. திட்டுத் திட்டாய் விழுந்து கிடந்த வெய்யில் ஓடிஓடி, உருமாறி.... இந்த மாரியிலும் நல்ல வெக்கை.

சிங்கர், கந்தசஷ்டிக் கவசத்தை முடித்துவிட்டு, தேவாரமொன்றை வாய்க்குள் மெல்ல - மிகமெல்ல சொல்லிக்கொண்டிருக்கிறார்.

"... நாமார்க்குங் குடியல்லோம்.... நமனை அஞ்சோம்.."

நேரம், பன்னிரண்டு இரண்டு. கிருஸ்ணன் மணிக்கூட்டைப் பார்க் கும் போதே, அந்தக் கறுத்தப் பிளாஸ்ரிக் டிஜிற்றல் கடிகாரத்தில், இரண்டு மூன்றாக மாறிற்று. தோன்றித் தோன்றி மறைகிற புள்ளிகளில் தெரியும் அதன் உயிர்த் துடிப்பு..

இந்தப் பிரச்சினை மட்டும் இல்லையென்றால், இந்த நேரம், உச்சிவேளைப் பூசைக்காக ஒலிக்கிற

# சோம்பியிருத்தல்

ஓய்வு எல்லோருக்கும் தேவையானதே. நாள் முழுவதும் வியர்வை சிந்தி உழைக்கும் தொழிலாளிக்கும், மூளையை உபயோகித்துச் செயற்படும் புத்தி ஜீவிகளுக்கும், வீட்டுவேலை செய்யும் பெண்களுக்கும், சகல தொழிலாளர்களுக்கும் ஓய்வு தேவையானதே.

ஓய்வுக்கும் வேலை ஒன்றும் செய்யாது சோம்பி இருப்பதற்கும் அனேக வேறுபாடுகள் உண்டு.

இந்த உலகில் நேரமானது ஒரு விலை மதிப்பற்ற பொருளாகும். ஒரு நிமிடந்தானும் வீணாகிவிடக்கூடாது. ஒன்றும் செய்யாதிருத்தல், சோம்பியிருத்தல் என்ற இரண்டிற்கும் உள்ள முரண்பாடுகளை நன்கு உணர்ந்துகொள்ளவேண்டும். கூடுதலான ஓய்வு என்பதை அனேகமாக வேலை மாற்றங்களினால் அடையக்கூடுமேயன்றி ஒரு வேலையும் செய்யாமல் சும்மாயிருப்பதனாலன்று. சோம்பி இருப்பதென்பது ஓய்வாக இருப்பதற்குச் சொல்லப்படும் சமாதானம் ஆகாது.

சிலபேர் உட்கார்ந்து சிந்திப்பார்கள்; வேறுசிலர் சிந்தனையின்றிச் சும்மா உட்கார்ந்திருப்பார்கள்.

சிவனே என்று சும்மா உட்கார்ந்து இருப்பவர்கள்தான் இந்த உலகிலே வறுமையால் வாடுபவர்கள். கையாலாகாதவர்கள்.

தினந்தோறும் மனித இயந்திரம் ஆக்கபூர்வமான சக்தியை உண்டுபண்ணிக்கொண்டேயிருக்கும். இந்த சக்தியை உபயோகப்படுத்தாவிடில் துன்பங்கள் வந்தடையும்.

உடல் உழைப்பாளிகளுக்கு தகுந்த ஓய்வு மூளைக்கு வேலை கொடுப்பதாகும். உதாரணமாக பத்திரிகைகளைப் படிக்கலாம். நூல்களை வாசிக்கலாம்.

தினசரி மூளையைப் பிரயோகித்து வேலை செய்பவர்களுக்கு உண்மையான ஓய்வு, தோட்டவேலை, தச்சுவேலை முதலான வேலைகளைச் செய்வதனால் கிடைத்துவிடுகிறது.

எல்லோருமே தகுந்த சமயங்களில், சுமார் அரைமணி நேரம் இளைப்பாறி ஓய்வெடுப்பது நல்லது. ஆனால் அப்படி எடுக்கும் ஓய்வுக்கு நாளடைவில் அடிமையாகி விடக்கூடாது. உடல் தளர்ச்சிக்கு ஓய்வு தேவை என்பது கட்டுப்பாட்டிற்குள் இருக்கவேண்டும்.

உங்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தவேண்டும். மகிழ்ச்சியோடு இருப்பவர்கள் தங்களுக்குள்ளே இருந்து வெளிப்படும் நரம்பு சக்தியை நல்ல வழியில் பிரயோசனப்படத்தக்க முறையில் பயன்படுத்தவேண்டும்.

முற்றாகச் சோம்பியிருப்பதை மருந்துக்கு ஒப்பிடலாம். நல்ல ஆரோக்கியமான திடகாத்திரமான மக்களுக்கு அந்த மருந்து தேவைப்படாது.

- ஈ. ஆர். தொம்சன் -

தமிழில் கே.சி. ராமனாதன்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கோவில் மணிகள் எல்லாப் பக்க மும் கேட்கத் தொடங்கியிருக்கும்...

இருந்தாற்போல சடசடவென்று. சூட்டுச் சத்தந்தான். கிழக்கே கேட்டது. கிருஸ்ணன், சிங்கரைப் பார்த்தான். துப்பாக்கிகள் ஆக்ரோஷமாய் குரைக்கத் தொடங்கின. கிழக்கேதான். கிட்டவுமில்லை, தூரவுமில்லை.

"சண்டைதான்...?"

எங்கள் பாடு? முகாமிலிருக்கிற வர்கள் பாடு?

வேட்டொலிகள் விடாமல் கேட்டன. இருபுறமும்மாறி மாறி. கூடியும் குறைந்தும்.... ஒன்றுக்குள் ஒன்றாய், ஒன்றை மீறி மற்றதாய்....

இனி....?- கிருஸ்ணன் முழங் கால்களில் கைகளைக் கட்டியபடி குனிந்துகொண்டான். மயிர் கலைந்த தலையின் நிழல் முன்னால் விழுந்தது.

வீட்டுப் பக்கம் ஏதோ அசைவு தெரிந்ததில் திரும்பினார்கள். சிப்பாய்கள், வரிசையாக பெரிய தொரு பாம்பு போல், சரசரவென்று அந்த வரிசை. சந்தடியில்லாத அந்த வேகம் பயமாயிருந்தது. உருமறைப் புச் சீருடைகள். இரும்புத் தொப்பி களை மறைத்த பச்சை மிலாறுகள். ஹோல்ஸ்ரரும், தயாராய்ப் பிடித்த துவக்குகளுமாய் முழங்கால்களுக் கருகில் உப்பியிருக்கிற பைகளில் கைக்குண்டுகளோ? - நிதானமாய்ப் பதியும் கனத்த காலணிகள்...

வரிசை இப்படித்தான் வருகி றது. முன்னே வந்தவன் நெருங்குகி றான்.

எழும்பலாமா? - வேண்டாம். இப்போ எழும்பினால் பிரச்சினை. கைகால்களை அசைக்கமுடியாத மாதிரியும் இருந்தது. சிங்கரும் எழும்பவில்லை. எழும்பாமலேயிருந் தார்கள்.

வந்துகொண்டிருந்தவர்களுக்கு, இவர்கள் கண்ணில் படவில்லைப் போலும். தம்பாட்டில் போனார்கள். இவர்களைக் கடந்து, கேற்றில் திரும்பி.... அங்கு ஒழுங்கையில் ஏற்கனவே இருந்தவர்கள்..?

வரிசை, வந்தபடியேயிருந்தது. எத்தனை ஆட்கள்!

உயரமான ஒரு மெல்லிய சிப்பாய், தும்புக்கட்டு மீசையும் ஆளுமாய், வரிசையில் சேராது அருகோடு வந்தான். முதுகில் வயர்லெஸ், ஒடாக்குறையாகத் தாண்டிப்போனான். ஏரியல், உயரமாய், தென்னங்கீற்றுப்போல், அவன் நடைக்கேற்பத் துடித்தசைந் தது.

இப்போது வருகிறவர்கள், இடைக்கிடை இவர்களையும் கவனிக்கிறார்கள். ஒருவன் ஏதோ சொல்லிவிட்டுப் போகிறான்.

இருநூறு பேராவது தாண்டியி ருப்பார்களா? இன்னமும் வருகிறார் கள். அடுத்த பக்கத்து வளவுகளுக் குள்ளும் ஆட்களிருக்கவேண்டும்.

அந்த அம்புலி மாமா ஆள்- அவன் பெயர் அதற்குள் மறந்து விட்டது- போர்ட்டிகோவிலிருந்து வெளியே வருகிறான். அதே கறுப் புச் சீருடை. இப்போ தொப்பி அணிந்துகொள்கிறான். அவன் முதுகிலும் ஒரு வயர்லெஸ்.

பின்னால் இரண்டு பேர் தொடர வேகமாக வருகின்றான்.

ஆளைப்பார்த்தால் கம்பீரமாய்த் தானிருக்கிறது. இந்திப்பட நடிக னாய்ப் போயிருக்கவேண்டியவன். இல்லை, நடிப்பென்று பார்த்தால் அந்த பி. கே. சிங்கை யாரும் மிஞ்சமுடியாது! என்ன மாதிரிப் பேசி இங்கே அனுப்பினான்!...

கப்டன், நெருங்கித்தாண்டிய போது இவர்களைப் பார்த்தான். போகிற போக்கில் சொன்னான்.

"நீங்கள் போகலாம்!"

சொல்லிவிட்டுப் போனான்.

## 11

ஒன்றுமே விளங்கவில்லை.

இப்போது போகச் சொன் னால்? போகலாமா? சிலவேளை...

நினைத்ததும் மீண்டும் நெஞ்ச டித்தது - போகச்சொல்லிவிட்டு...?

"இப்ப போ எண்டா, இதென்ன?" சிங்கரும் குழம்புவது தெரிகிறது.

"போவம்?...." கிருஸ்ணன் திரும்பிப் பார்த்தான்.

கப்டனைக் காணவில்லை.

"பாப்பம், இவங்கள் போய் முடியட்டும்.... இப்ப எழும்பினாலும் பிழை..."

சரிதான் போகட்டும்.

வரிசை வந்துகொண்டேயிருந்தது.

இவர்களுக்குள் - எங்களால் ஆளை ஆள் வித்தியாசங்கண்டு பிடிக்கமுடியுமா? ஒரே சாயல்... ஒரே நிறம்... ஒரே உயரம்...

தன்னையறியாமலே தான் அவர்களைக் கவனிப்பதைக் கிருஸ் ணன் உணர்ந்தான். வேண்டாம், ஏதாலும் நினைத்தாலும்.... அங்கே பார்க்கக்கூடாது.

வலப்பக்கம், யாரோ ஓடி வருவது மாதிரி....

திரும்பினான்...

ஐந்நூறு பேருக்கப்பால் வருகிற ஒருவன், வரிசையை விட்டு விலகித் தங்களை நோக்கிக் கத்தியபடி ஓடி வருவது தெரிகிறது! நீட்டிய துவக்கு...

என்ன இது? ஏன் மற்றவர்கள் பிடிக்கவில்லை? ஆவேசங்கொண்டு அவன் கத்துவது இந்தியிலா என்று கூடத் தெரியவில்லை...

கடைசிச் சொல் மட்டும் புரிந்தது... "எல்ரிரிஈ!" அவன் உறுமியபோது, நெற்றியை மறைத்த மயிரும், கொலைவெறி துள்ளும் கண்களுமாய், அவன் முகம், மூன்றடிக்கு முன்னாலிருந்தது. ஏறிட்டுப் பார்த்த கிருஸ்ணனின் நெஞ்சில் துப்பாக்கி இடித்தது. கண்களை மூடிக்கொண்டான்.

## 12

தானும் அப்போது மூடிக் கொண்டதாகச் சிங்கர் பிறகு சொன்னார்.

★★★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# தென்னந்தும்பு உற்பத்தி

**புர்ஜிதன்**

வடமராட்சியில் ... (see body)

வட தமிழீழத்தில் கொழும்புத்துறை தும்புத் தொழிலுக்கு பெயர்பெற்ற இடமாக விளங்குகின்றது. ஆழமற்ற கடற்பரப்பை அண்மித்து இருப்பதும், மக்கள் இத்தொழிலில் ஆர்வம் உள்ளவர்களாய் இருப்பதும் இதற்குக் காரணமாய் அமைகின்றது. ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், சிறுமியர் பங்கேற்கும் குடிசைக் கைத்தொழிலாக இது நடைபெறுகின்றது. உள்ளூர் தொழில்நுட்பத்தின் மூலம் வடிவமைக்கப்பட்ட கருவிகள் இங்கே பயன்படுத்தப்படுகின்றன. அவரவர் மூலதன, ஆளணி வசதிக்கேற்ப தொழில் விரிவாக்கம் அமைந்துள்ளது.

போர்க்கால சூழ்நிலையில் ஏற்பட்ட பொருளாதாரத் தடையும், போக்குவரத்துச் சீர்கேடும் தமிழீழத்தில் பல தொழில்கள் முளைக்க வித்தாயின. ஆனால் கொழும்புத்துறை தும்புத் தொழில் இதற்கு விதிவிலக்காக பல வருடங்களுக்கு முன்பிருந்தே சிறப்புற்று விளங்கி வருகின்றது. சிறீலங்காவிலிருந்து வரும் கயிறு தாராளமாகப் பாவனையில் இருந்த காலத்திலேயே கொழும்புத்துறைக் கயிறு தனி மதிப்புப் பெற்றிருந்தது. தற்காலச் சூழ்நிலையில் இத்தொழில் இன்னும் மெருகேறியுள்ளது.

தமிழீழ மக்களின் தும்புப் பொருட் தேவையை பூர்த்திசெய்ய இத்தொழிலாளர்கள் அயராது உழைக்கின்றார்கள். எமது பணத்தினை சிங்களப் பகுதிக்குச் செல்லவிடாமல் தடுப்பதில் பெரும் பங்காற்றுகிறார்கள்.

இந்த உற்பத்தியாளர்களுக்கு உதவும் வகையிலும், உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கிலும் விளக்குமாறு, தும்புத்தடி போன்ற சில தெங்குப் பொருட்களின் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தும்புசார் உற்பத்திப் பொருட்கள் அனைத்தும் சுயதேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் உற்பத்திப் பெருக்கமடையுமாயின் இறக்குமதித் தடையை இன்னும் இறுக்கலாம். இதன் மூலமாக உற்பத்தியாளர்களின் நன்மையைப் பேணலாம்.

தும்புத்தொழில் அபிவிருத்தி அடைவதற்குரிய சகல வளங்களும் தமிழீழத்தில் உண்டு. பாரிய கைத்தொழிலாக இல்லாமல் குடிசைக் கைத்தொழிலாகச் செய்தே எமது சுயதேவையைப் பூர்த்திசெய்யலாம். சிறீலங்காவின் எந்தத் தடையும் இதற்கு குந்தகமாக அமையாது. பலருக்கு வேலை வாய்ப்பையும் அளிக்கலாம்.

தமிழீழம் பெரும் கடற்பரப்பைக் கொண்டுள்ளதால் நாட்டின் பல்வேறு இடங்களிலும் பரந்துபட்ட முறையில் இத்தொழிலை அபிவிருத்தி செய்யலாம். இதனால் உற்பத்திப் பொருட்களுக்கான போக்குவரத்துக் கூலி குறைவடையும். அத்துடன் போதிய சந்தை வாய்ப்பையும் இலகுவில் பெறமுடியும்.

தும்புசார் பொருட்கள் நல்ல சந்தை வாய்ப்பைப் பெறுவதோடு போதிய வருவாயையும் ஈட்டித் தருவதாக உள்ளது.

இத்தொழிலின் மூலப்பொருளான தேங்காய்ப் பொச்சுமட்டை இரண்டுரூபாவுக்கு அதிகப்படாத விலையில் நாட்டின் எப்பாகத்திலும் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது.

இத்தொழிலில் உள்ளூர் மூலப்பொருள் பயன்படுத்தப்படுவதோடு மக்களின் தேவையும் பூர்த்தியாகின்றது. பலருக்கு வேலை வாய்ப்பும் கிட்டுகின்றது. இதுவரை சிங்கள நாட்டிற்குச் சென்றுகொண்டிருந்த பணம் மீதப்படுத்தப்படுகின்றது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, மலரப் போகும் தமிழீழத்தில் அந்நிய செலவாணி வருவாயை ஈட்டித்தரும் தொழிற்துறையாக இது அமையப்போகின்றது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நிதர்சனம் தயாரிப்பான 'காற்றுவெளி'

## வீடியோ திரைப்படம் பற்றிய ரசனைக் குறிப்பு

-ராஜராகுலன்-

**காற்றுவெளி**
*வீடியோத் திரைப்படம்*

*தயாரிப்பு:*
**நிதர்சனம்**

*இசை:*
**முரளி**

*கதைவசனம் நெறியாள்கை:*
**ஞானரதன்**



குரலை எழுப்பாமல் தன்னையும், தான் சார்ந்த சமூகத்தின் அரசியல், பொருளாதார, சமூக நிலையையும் இனங்காட்டிச் செல்லும் 'எழுத்து' எப்பொழுதுமே செம்மைசார் இலக்கியமாக உயர் நிலையில் வைத்துப் பேசப்படுவது மரபு வழக்கு. அதே போன்றதொரு சாதனையை அல்லது பரீட்சார்த்த வெற்றியை 'வீடியோத் திரைப்படம்' ஒன்று சாதிக்கமுடியும் என்பதனை 'காற்றுவெளி' நிரூபித்துள்ளது என்பது நிதர்சன உண்மை.

படத்தின் ஒவ்வொரு 'பிரேமும்' தமிழீழ சமுதாயத்தின் இயக்கவியலின் உரத்த முணுமுணுப்பாகப் பார்வையாளருடன் உரையாடுகின்றன. பார்வையாளர்களின் நெஞ்சங்களும் நெட்டுயிர்ப்பு விடுகின்றன. மௌன அங்கீகாரமான தலையசைப்பும் நிகழ்கிறது. இதற்குக் காரணம் 'காற்றுவெளி' சினிமாத்தனமான கதையையோ, போலித்தனமான சம்பவக் கோவைகளையோ, அசட்டுத்தனமான உணர்ச்சிக் கட்டங்களையோ கொண்டிராது, சமகாலத் தமிழர் வாழ்வின் நாளாந்த நடப்புக்களையும், அவர்கள் தம் அபிலாசைகளையும், உணர்ச்சி வெளிப்பாடுகளையும் உள்ளடக்கி, உண்மையும் உயிரோட்டமும் நிறைந்த கூட்டுச் சேர்க்கையின் தொகுப்பாக வெளிவந்திருப்பதேயாகும்.



படத்தின் குறைகள் நாமே உணர்வன; நாளை திருத்தப்பட இருப்பவை. காற்றுவெளி - தரத்திலும், காலத்தின் தேவையிலும் முன்னணியில் நிற்கிறது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# இத்தாலியில் செஞ்சோலைக் கலைமாலை

செஞ்சோலையின் வளர்ச்சி நிதிக்காக இத்தாலியில். நடாத்தப்பெற்ற கலை மாலையில் ஆயிரத்து இருநூறுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பலர்மோ - இத்தாலியில் புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களின் மொத்தத் தொகையே இரண்டாயிரத்துக்கும் குறைவானதாகும். அத் தொகையினரில் 1200 பேர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கலைமாலை மிகவும் காத்திரமானதாக இருந்தது. '2ம் லெப். மாலதி கலைப்பள்ளி' மாணவிகளும் 'திலீபன் கல்வி நிலைய' மாணவிகளும் சேர்ந்து 'வீழ்ந்தவர்கள் அல்ல விதைக்கப்பட்டவர்கள்' என்னும் நாட்டிய நாடகத்தை நடித்தனர்.

குருநகர் 'பாடும்மீன்' விளையாட்டுக் கழகத்தினர் 'குற்றவாளிகள்' என்ற நாடகத்தை மேடையேற்றினர். இந்நாடகம் உலக நீதிமன்றத்திற்கு முன்னால் ஆக்கிரமிப்பாளர்களை நிறுத்துகிறது. தமிழீழத் தாயின் விலங்குகளை உடைக்கும் பலம் கொண்டு விடுதலைப் புலிகள் எழுந்து நிற்பதை உலகுக்கு கூறுகிறது.

பொதுவாகப் புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் மக்கள் தமது கலை பண்பாட்டு விழாக்களை நடத்துவது என்பது மிகச் சாதாரணமான காரியமல்ல. தமது கலை, இலக்கிய பண்பாட்டுப் பாரம்பரியங்களை பேண விளைவதாக இக் கலைமாலை திகழ்ந்தது. இன்னும் உச்சங்களைத் தொடவேண்டியது என்ற கருத்து ஒருபுறம் இருந்தாலும் இங்கே மண்பற்று, மொழிப்பற்று, வீழ்ந்தவரை நினைக்கின்ற உயரிய மானிடப் பண்பு மேலோங்குகிறது.

நாடோடிகளாய் அல்லலுறும் எமது மக்கள் தாம் அனுபவிக்கின்ற துயரங்களை வெல்ல கூட்டாகக் கலந்து பண்பாடுகின்ற இந்தப் பண்பாடு மென்மேலும் வளரவேண்டும்.

கலைமாலை நிகழ்வுகளின் நிழற்படங்கள் சிலவற்றை இங்கே காண்கிறீர்கள்.







www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கரும்புலி அடிமுடி அறியமுடியாத அற்புதம்

கரும்புலி,
சாவுக்குத் தேதிகுறிக்கும் சரித்திரம்.
கந்தகத்தை மேனியிற் கட்டிய சந்தனம்.
வீதியுலாவுக்காக வெளியில் வராத விக்கிரகம்.
உயிர்மூச்சை ஊதிவிடும் உன்னதம்.
அடிமுடியை அறியமுடியாத அற்புதம்.
தென்றலும், புயலும் சேர்ந்த கலவை.
இவர்களை எழுதத் தொடங்கினால்....
எந்தமொழியும் தோற்றுப் போகும்.
வார்த்தைகள் வறுமை அடையும்.
உளவியலாளர்கள் உள்ளே புகுந்தாலும்
வெறும்கையோடுதான் வெளியே வருவார்கள்.
கற்பனைக் கவிஞர்கள் கவிதை எழுதினால்
அற்புதம் என்பார்கள்.
அடுத்த வார்த்தை வராது.
சித்திரக்காரர்களும்
தீப்பிழம்பைத்தானே தீட்டமுடியும்.
பக்கத்திருந்து பழகியவர்கள்கூட
குறிப்புகள் மட்டும்தான் கூறமுடியும்.
ஆழத்தோண்டினாலும் மூலவேர் தெரியாது.
சமுத்திரநீரை
அகப்பையால் அள்ளி அடக்கமுடியுமா?
ஓடும் முகிலை
ஏணிவைத்து எட்டித்தொட முடியுமா?
எதிரியின் எந்த வலுவும்
இறுதியில் இவர்களிடம் சரணடையும்.
கடைசிநொடிவரை சிரித்தபடி திரிவர்.
மறுநாள்
வெடித்த செய்தி வெளிவரும்போது,
ஜாதகமும் சோதிடமும்
தங்களுக்குத் தாங்களே தீ மூட்டிக் கொள்ளும்.
காலால் நடந்து,
வாயால் மொழிந்து,
கையால் தலைவாரிக் கொண்டு,
எல்லோரையும் போலவேதான் இவர்களும்.
உள்ளே எரியும் விடுதலைக் கனல்மட்டும்
வேறுபட்டது.
உயிர்ப் பூவை கிள்ளி எடுத்து
விடுதலைக்கு விலைகொடுக்கும்
வித்தியாசமானவர்கள்.

கிட்டநெருங்க முடியாத இலக்குகளைக்கூட
தொட்டு அசைத்துவிடும் துணிச்சலர் இவர்.
முதுகில் வேர்க்குரு போட்டாலே.....
சாவைத் தம் தோள்களில் சுமந்து
நொடிகளை கணக்கிட்டு நகரும் நூதனங்கள்.
காற்றிலும், நீரிலும் இவர்கள் கலக்கும்போது,
காற்றுக்கு வேர்க்கும்.
நீர் நெருப்பாகிவிடும்.
இவர்களுக்கு,
சூரியன் கைகளுக்கு எட்டும் தூரம்தான்.
பசிபிக் சமுத்திரம் முழங்கால் ஆழம்.
கரும்புலிகள்;
தலைவன் தலைவாரிவிடும் புயல்கள்.
தாயை நேசிக்கும் அளவுக்கு
தலைவனையும் நேசிப்பவர்கள்.
தாயகத்தை மட்டும் பூசிப்பவர்கள்.
ஆவிபிரியும் அடுத்த கணம்பற்றிய அச்சம்
இவர்களின் அகராதியில் அச்சிடப்படுவதில்லை.
"ஜூலை-5 1987"
கருமைக்கும் பெருமைவந்த நாள்.
புலியொன்று முதல் கரும்புலியான தினம்.
நெல்லியடியில்
"மில்லர்" புதிய வரலாற்றைத் தொடக்கிய நாள்.
"எல்லாம் சரி

## உலைக்களம்

- வியாசன் -

வடமராட்சி எமது கட்டுப்பாட்டில்"
கொழும்புக்குச் செய்தி அனுப்பியவரின்
வாய் மூடமுன்னர்
செவிப்பறைகள் கிழிந்தன.
சாவு நேரே ஓடிவந்து
முகத்தில் சந்திக்குமென்று
எதிரி எப்படி எதிர்பார்த்திருப்பான்.
"உயிராயுதம்" வலுவானது.
கரும்புலிகள்,

www.tamileelamarchive.com

தேவை அறிந்து செல்பவர்களே அன்றி
சாவை விரும்பிச் சந்திப்பவர்களல்ல...
இவர்கள் வசந்தம் தழுவாத கொடிகளோ
முகில்கள் முத்தமிடாத மலைமுகடுகளோ அல்ல.
இதயம் இரும்பாலானவர்களும் அல்ல.
பனியாய் உருகும் நெஞ்சுக்கும்
பாகாய் இனிக்கும் வார்த்தைகளுக்கும்
உரிமையாளர்கள்.
வெடித்த பின்னரும்,
இவர்கள் எல்லோரும் வெளிச்சத்துக்கு
வருவதில்லை.
சுவரொட்டியில் சிரிப்பவர்கள் சிலர்தான்.
'நடுகல் நாயகர்கள்' ஆகும் வாய்ப்பும்
எல்லோருக்கும் ஏற்படப் போவதும் இல்லை.
கல்லறைகூட இல்லாத காவியமாய்
வாய்விட்டு சொல்லியமும் வாய்ப்பும் இல்லாமல்
சிலருக்கு வெளியே தெரியாத
வேரின் வாழ்வு.
பலருக்கு மரணம் வாழ்வின் முடிவு.
கரும்புலிகளின் ஜனனம் மட்டும் மரணத்தில்
ஆரம்பம்.
கால. நதியில்
இவர்கள் ஓடிக் கரைய மாட்டார்கள்.
மற்றவர்களுக்கு
இனி என்ன செய்வதென்று
தலைவெடிக்கும் போதுதான்
இந்த சுகந்த ஊதுபத்திகள்
உடல்வெடித்துப் போகிறார்கள்.
"ஊரறியாமல் உண்மைகள் கலங்கும்
ஒருபெரும் சரித்திரம் ஊமையாய் உறங்கும்
வேருக்கு மட்டுமே விமுதினைப் புரியும்
வெடிமருந்தேற்றிய வேங்கையைத் தெரியும்."
பூகம்பத்தைப் போத்தலில் அடைத்தது போல
வந்தவரிகளில் வென்றவரிகள் இவை.
கரும்புலிகளுக்கு காணிக்கை என்ன?
கண்ணீரா?
கல்லறையா?
இல்லை.
எதுவுமே இல்லை.
நெஞ்சின் நினைவே
நெடிய கோபுரம்.
கரும்புலி
அடிமுடி அறியமுடியாத அற்புதம்!

❂❂❂

# சிறீலங்காவின்

# தேர்தல் தமாசு

"ஐக்கிய தேசியக் கட்சியே தேர்தலில் வெற்றிபெறும். ஆட்சி அமைக்கக்கூடிய பலத்தையும் பெறும். மூன்றிலரண்டு பெரும்பான்மை கிடைத்தால் வடக்கு- கிழக்கு பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும்."

*- ரணில் விக்கிரமசிங்க -*

"அரசியலில் இறங்கவேண்டுமென நான் நினைத்திருக்கவில்லை. ஆனால் எனது கணவரைப் பின்பற்றி நம்பிவந்த இலட்சக் கணக்கான மக்களை அனாதைகளாக்கிவிட நான் விரும்பவில்லை. இந்த நோக்கத்துடனேயே அரசியலில் இறங்கினேன்."

*- அமைச்சர் திருமதி. சிறிமணி அத்துலத்முதலி -*

"இந்த நாட்டு மக்களாகிய நாம் முற்பிறவியில் ஒரினத்தவராக இருந்தோம். அதுபோல அடுத்த பிறவியிலும் எதுவித பிரிவுகளோ பேதங்களோ இல்லாமல் ஒரே குடும்பத்தவராக, ஒரே இனத்தவராகப் பிறப்போம்."

*- ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா -*

"பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 150 பாராளுமன்ற உறுப்பினர்கள் கிடைக்கக்கூடியதாக மக்கள் வாக்களித்தால் இருவார காலத்துக்குள் வடக்கில் புலிகள் இயக்கத்தினரை தோற்கடிப்போம்."

*- ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா -*

"ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து எமது மக்களுக்காக சேவை செய்யும் எங்களை கறைபடிந்த கைகளென்றும், தமிழ்த்துரோகிகள் என்றும் கூட்டணியினர் கூக்குரலிடுகின்றனர்."

*- ரெலோ கருணாகரன் -*

"தமிழ் மக்களின் சுபீட்சம் கருதித் தலைவர்கள் ஆழமாகவும், தீர்க்கதரிசனமாகவும் சிந்தித்து எடுக்கப்பட்ட இக்கூட்டு முயற்சி தமிழ் மக்களின் வரலாற்றில் ஓர் திருப்புமுனையே."

*- ரெலோ, புளொட், ஈரோஸ் குழுக்கள் தமது கூட்டுத் தொடர்பாக விடுத்த செய்தி -*

தொகுப்பு: ஜெயா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சுவைத்தலும் மதிப்பிடுதலும்

கலாநிதி நா. சுப்பிரமணியன்

கலை இலக்கியம் என்பவற்றை நுகரும் நிலையிலே இரு வேறு அணுகுமுறைகள் பயில் நிலையில் உள்ளன. ஒன்று சுவைத்தல்; மற்றது மதிப்பிடுதல். சுவைத்தல் என்பது பொதுவான இரசனை என்ற வடசொல்லால் வழங்கப்படுவது. மதிப்பிடுவது என்பது விமர்சனம் என்ற வடசொல்லால் வழங்கப்பட்டு வந்துள்ளது. கடந்த ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாக திறனாய்வு என்ற சொல்லாலும் இதனை வழங்கி வருகின்றோம்.

சுவைத்தல் அல்லது இரசனை என்பது புலன்கள், மனம் என்பவற்றின் தொழிற்பாடு சார்ந்ததாகும். இவற்றின் அனுபவ உணர்வில் திழைக்கும் நிலையே சுவைத்தலின் முடிந்த முடிபாகும். அதாவது ஒரு கலைப்படைப்பு அல்லது இலக்கியம் பார்வையாளன் அல்லது செவிநுகர்வோன் அல்லது வாசகனின் உள்ளத்தைத் தொட்டு அவனைப் புதிய அனுபவ நிலைக்கு இட்டுச் செல்லுமாயின் அதுவே அவ்வாக்கத்தின் வெற்றி என்று கருதப்படும். மதிப்பிடுதல் அல்லது திறனாய்தல் என்பது புலன்கள், மனம் என்பவற்றுக்கு அப்பால் அறிவுநிலை நின்று மேற்கொள்ளப்படும் செயற்பாடாகும். ஒரு கலைப்படைப்பு அல்லது இலக்கியத்தின் தொனிப்பொருள், அமைப்பியல், பயன் முதலியவற்றைக் காரணகாரிய ரீதியாக தருக்கநிலையில் விளக்கும் வகையில் அமையும் முயற்சி இது. இவ்வகையில் நோக்கும்போது சுவைத்தல் என்பது உள்ளம் அதாவது இதயம் சார்ந்த ஒரு செயற்பாடாகவும் மதிப்பிடுதல், மூளைசார்ந்த ஒரு செயற்பாடாகவும் திகழ்கின்றமை புலனாகும். எனவே இவ்விரண்டும் இருவேறு தளநிலைச் செயற்பாடுகள் என்பது தெளிவாகும். இவ்வாறு இருவேறு தளங்களில் நிகழும் இவற்றுக்கிடையில் உள்ள உறவு நிலை, பொதுமை - வேற்றுமை என்பன இங்கு நமது சிந்தனைக் குரியவையாகின்றன.

கலை இலக்கிய நுகர்ச்சி என்ற பொது அடிப்படையிற் பயிலும் இவற்றுள் சுவைத்தல் தனிமனிதப் பாங்கானது; ஒவ்வொருவரதும் அநுபவ நிலைகளுக்கு ஏற்ப வேறுபடக்கூடியது. ஒருவரால் சுவைமிக்கது என உணரப்படும் ஒரு ஆக்கம் இன்னொருவரால் அபத்தம் என இகழப்படவும் கூடும். எனவே சுவையுணர்வு பொதுமைப்படக் கூடியதன்று. ஒவ்வொருவரும் தன்னளவில் அநுபவித்துத் திருப்திப்பட்டுக் கொள்ளுதல் என்ற அளவிலேயே அது எல்லைப்பட்டு நிற்கும். இந்தச் சுவையநுபவத்தை ஒருவர் மற்றொருவருக்கு எடுத்துக்கூற முற்படும் பொழுது உதாரணங்கள்; காரணகாரிய ரீதியில் விளக்கங்கள் என்பன அவசியமாகின்றன. இந் நிலையில் மனம் என்ற தளத்தின் செயற்பாட்டைக் கடந்து மூளையின் செயற்பாடு தொடங்கிவிடுகிறது. சுவையுணர்வு மதிப்பீடாகப் பரிணாமம் பெறும் நிலைக்கான தொடக்கம் இது. அதாவது உணர்வு நிலையிலிருந்து அறிவுநிலைக்கு அடியெடுத்து வைக்கும் கட்டம் இது. இந்நிலையில் தனிமனித அநுபவம் பலரது பொதுவான ஒப்புதலுக்குரிய உண்மையாக பரிணாமம் எய்துகின்றது. இதன் முதிர்ந்த நிலையே திறனாய்வு என்ற முழுநிலைச் செயற்பாடாகும்.

இவ்வாறு நோக்கும்போது மதிப்பீடு அல்லது திறனாய்வு என்ற செயற்பாட்டின் தொடக்க நிலை சுவையுணர்வு என்பது தெளிவாகும். அதாவது தன்னளவில் ஒரு கலையாக்கத்தை உணர்ந்து சுவைக்கவல்ல ஒருவரே அதனைப் பொதுநிலையில் திறனாய்வுசெய்து விளக்குவதற்கான அடிப்படைத் தகுதி உடையவரா கிறார் என்பது இங்கு சுட்டிக்காட்டத் தக்கது. ஆனால் கலைஞர்கள் எல்லோரும் திறனாய்வாளராக முடியாது. அதற்கு முறையான பயிற்சி அவசியம். மேலும் விரும்பிச் சுவைத்த ஒன்றை அவ்விருப்பைக் கடந்து நடுநிலையில் நின்று சீர்தூக்கும் மனப்பக்குவம் அவசியம். இவ்வாறான பயிற்சி, பக்குவம் என்பன பெற்ற ஒருவர் சுவையுணர்வு என்ற அடிப்படைத்தகுதி அற்றவராக இருப்பின் அவரது திறனாய்வு செயற்கையானதாக- அதாவது இயந்திரத்தன்மை வாய்ந்ததாக அமைந்துவிடும் அபாயம் உண்டு. படைப்பிலே உள்ளடங்கியிருக்கும் தொனிப்பொருளை அதாவது கலைஞனது உள்ளத்தின் ஆழத்தில் உரியவாறு இனங்கண்டு கொள்வதற்கு கலையுணர்வு அவசியம். அதேபோல, குறித்த ஒரு கலைப்படைப்பின் உள்ளடக்கம் மீதான தனி ஈடுபாடு காரணமாக கலைத்தன்மை குன்றிய ஒன்றை, உயர்ந்த படைப்பாகக் கருதிவிடக் கூடிய ஆபத்தைத் தவிர்ப்பதற்கு மேற்சுட்டிய பயிற்சியும் நடுநிலை நோக்கும் அவசியமாகின்றன. இவ்வாறு நோக்கும்போது திறனாய்வு என்பது குறித்த படைப்புத் தொடர்பான விருப்பு வெறுப்புக்களைக் கடந்து நடுநின்று குணம்நாடிக் குற்றமும் நாடும் பணி என்பது தெளிவாகும். இந்நிலையில் அது கலை இலக்கியம் என்பவற்றையும் சமூகத்தையும் இணைக்கும் பணியைப் புரிகிறது. இன்னும் சரியாகக் கூறுவதானால் கலை இலக்கியம், சமூகம், அதன் சுவையுணர்வு ஆகிய மூன்றையும் இணைக்கும் ஒரு முக்கோணச் செயற்பாடாக திறனாய்வு அமைகின்றது.

முதலில் அது சமூக வாழ்க்கைக்கும் கலை இலக்கிய ஆக்கங்களுக்கும் உள்ள தொடர்பை ஆராய்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கிறது. பின்னர் அவ்வாக்கங்களுக்கும் அவற்றைச் சுவைக்கும் உணர்வு நிலைக்கும் உள்ள உறவைத் தெளிவு படுத்த முனைகின்றது. சமூக வாழ்க்கையுடன் கலை இலக்கிய ஆக்கங்கள் தொடர்பை நோக்கும் நிலையில் அவ்வாக்கங்களுடைய உள்ளடக்கங்களின் சமூக மெய்மை- உண்மைத்தன்மை கவனத்தைப் பெறுகிறது. அவ்வாக்கங்கள் சுவையு டன் தொடர்புபடும் நிலையில் புனைதிறன் எனும் ஆக்கச் செயற் பாடு கவனத்தைப் பெறும். அதா வது கலைசார்ந்த ஆக்கக்கூறுகள் குறிப்பாக கற்பனை, நடை, கட்டமைப்பு, உத்திமுறை என்பன இந்நிலையில் ஆராய்ந்து தெளியப் படுகின்றன. இவ்வாறு இவை ஆராயப்பட்டு தெளிவுபடுத்தப் படுவதன் மூலம் சராசரி பார்வை யாளன், செவிநுகர்வோன், வாசகன் ஆகியவர்களது சுவையுணர்வானது செம்மைப் படுத்தப்படுகின்றது. தரமானவற்றை இனங்கண்டு சுவைத்து மகிழவும் பேணிக்கொள்ள வும் ஏற்றதான மனநிலை வளர்த் தெடுக்கப்படுகின்றது. இதன்மூலம் படைப்பின் தரம், சுவையின் தரம் என்பவை மேம்படுகின்றன. இவற் றின் விளைபொருளாக சமூக சிந்த னையின் தரமும் வளர்ச்சியடைகி றது. இவையாவற்றையும் தொகுத்து நோக்கும்போது தனிமனிதப் பாங்கான சுவைத்தல் என்பது மதிப்பீடு என்ற பரிணாமத்தை எய்தும் நிலையில் ஒட்டுமொத்த மான சமூகவளர்ச்சிக்கான செயற் பாடாக, ஒரு சேவையாக வெளிப் படுகின்றது. இவ்வாறு அமையும் திறனாய்வானது முதல்நிலையில் ஒரு கலைப்படைப்பு அல்லது இலக்கியத்தை விளக்க முயல்கிறது. அதன் தரத்தை மதிப்பிடுகின்றது. இச் செயற்பாடுகளூடாக தரமான கலை, இலக்கியம் எனபன எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கான எண்ணங்களை முன்வைக்கிறது. இதன் தொடர்ச்சியாக இரண்டா வது நிலையிலே புத்தாக்கங்களுக் கான படைப்புத் தூண்டுதலை செய்கின்றது. இவ்வகையில் கலைஞ ரின் தரம் படைப்பாளியின் தரம் என்பன ஒன்றையொன்று சார்ந்து வளரவும் இரு நிலையினரும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இந் நிலையில் திறனாய்வானது சம காலத்தின் கண்ணாடியாகவும் எதிர்காலத்துக்கான படியாகவும் நிகழும் சிறப்புடையதாகின்றது.

சுவைத்தல் என்ற நிலையி னின்று திறனாய்தல் என்ற நிலைக் குத் தன்னை வளர்த்துக்கொள்ள விரும்பும் ஒருவர், மேற்கொள்ள வேண்டிய பயிற்சியைப் பின்வரும் நான்கு படிநிலைகளாக வகைப்படுத் திக் கூறலாம். முதலாவது படிநிலை, கலை இலக்கியப் படைப்புக்களை அவற்றின் உள்ளடக்கம், வடிவம், அவற்றின் காலம், களம், ஊடகம், அணுகுமுறை முதலியவற்றின் அடிப் படையில் வகைப்படுத்தலாகும். இவ்வாறு வகைப்படுத்தியபின் குறித்த ஒரு வகைப் படைப்பினை அவ்வகையில் அமைந்த பிறபடைப் புக்களோடு ஒப்புநோக்கிப் பொதுமை - வேற்றுமை என்பன அவதானிக்கப்படவேண்டும். இது இரண்டாவது படிநிலையாகும். இவ்வாறான ஒப்பீட்டை அல்லது மதிப்பிடுதல் அதாவது தரம்காணல் என்ற செயற்பாடு அமையும். இதுவே திறனாய்வின் உயிரோட்ட மான பகுதியாகும். ஒரு படைப்பு அசலா? நகலா? பயிரா? அல்லது களையா? என்பதைக் கண்டுவரும் பணி இது. இதுவே மூன்றாவது படிநிலையாகும். இம்மூன்று படி நிலைகளிலும் தயாரிப்பு நிலையில் மேற்கொள்ளப்பட்டவற்றைச் சமூகத் துக்கு எடுத்து விளக்கியுரைத்தல் என்பது நான்காவது படிநிலை ஆகும். இந்த விளக்கியுரைத்தல் பணி குறித்த ஒரு காலகட்டத்தில் எழுந்த கலை இலக்கியங்களை அக்காலப்பகுதிக்கு அப்பாலான காலப்பகுதியொன்றிற்கு அறிமுகம் செய்யும் செயற்பாட்டையும் உள்ளடக்கியதாக அமைகின்றது.

## இடர்படுவது சிங்கள மக்கள்தான்

"பதவிக்கு வந்தால் வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு மாதாந்தம் ரூபா இரண்டாயிரம் வழங்கப்படும்" என பொ.ஐ.ஐ.மு. தெரிவித்துள்ளது. இது குறித்து டி. பி. விஜயதுங்கா "காசு மரமிருந்தாலும் மாதாந்தம் ரூபா இரண்டாயிரம் அவர்களால் கொடுக்கமுடியாது" என அடித்துச் சொல்லிச் சிரித்தாராம்.

தமது கட்சியின் பதினேழு வருட ஆட்சிக் காலத்தில் அரசியல் கொள்கைகளாலும் முறையற்ற திறந்த பொருளாதாரக் கொள்கைகளாலும் சிறீலங்கா எந்த நிலையில் சென்றுகொண்டிருக்கிறது என்பதை அறிந்தவராகவே இந்த நகைச்சுவையை அவர் அப்படி அவிழ்த்தார். அதிவேகமாக வறிய நிலையினை அடையும் ஐந்து நாடுகளில் சிறீலங்காவும் ஒன்றாகி வருகிறது. மோசமான நிலைகளில் சிங்கள மக்களின் வாழ்க்கை சென்றுகொண்டிருக்கிறது.

சிறீலங்காவிற்கு உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் கடன்கொடுக்கப் பின்நிற்கின்றன. அப்படிக் கடன் கொடுப்பதாயிருந்தாலும் பல நிபந்தனைகளை விதிக்கின்றன. அபிவிருத்திக்கென்று வாங்கப்படும் பணம் தமிழ் மக்களின் பொருளாதார வாழ்வினைச் சிதைப்பதற்கே பயன்படுத்தப்படுகிறது என்பது உலகவங்கிக்கு, சர்வதேச நாணய நிதியத்துக்கு தெரியாது போகாது.

திறந்த பொருளாதாரக் கொள்கை எனக் கூறிக்கொண்டு நாட்டில் உள்ள செல்வந்தர்கள் வெளிநாட்டு வர்த்தகர்கள் போன்றோருக்கான வசதிகளே அதிகரிக்கப்பட்டுள்ளன. மானியங்கள், வரிகளினால் சிங்கள மக்களே பெரும் பழுவைச் சுமக்கின்றனர். இது சிறீலங்காவில் அதிகமான மக்களை நாளுக்கு நாள் வறிய நிலைக்குத் தள்ளுகிறது. இது இவ்வாறிருக்க நாற்காலிக் கனவுகளிலும், ஒட்டுப் பொறுக்குவதிலும் அக்கறை கொண்டு அரசியல் சுயலாபம் தேடுவதற்காக இவ்வாறான தேர்தல்காலப் புழுகுகளைச் சொல்லி மக்களை மேலும் ஏமாற்றும் அரசியலைத் தொடராது சிறீலங்கா தேசம் தனது இறைமையைப் பாதுகாத்து வறுமையில், பிணியில் தள்ளாடும் தனது மக்களின் எதிர்காலத்தை நம்பிக்கையுள்ளதாக மாற்ற முனையுமா? தமிழீழத்தையும் தனது பொய்மையில் கூட்டுச் சேர்க்காது சுதந்திரமாக இருக்க அனுமதிக்குமா?

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சமகாலத் தமிழ்ப் புனைகதை

## தமிழ்ப் புனைகதைத் துறையில் எண்பதுகளின் பின்னால் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் சில பற்றிய அவதானிப்புக்களும் சிந்தனைகளும்

கார்திகேசு சிவத்தம்பி
முதுதமிழ்ப் பேராசிரியர்

நான்கைந்து ஆண்டுகளின் முன்னர் ரஞ்சகுமாரின் 'மோகவாசல்' சிறுகதைத் தொகுதியை முதலில் வாசித்தபொழுது குறிப்பாக 'கோசலை', 'கோளறு பதிகம்' என்னும் படைப்புக்களை வாசித்தபொழுது புனைகதைத் துறையில் ஒரு புதிய "வெளிப்பாட்டு முறைமை" தோன்றிவிட்டதை உணரமுடிந்தது. அதன் பின்னர் உமா வரதராசனின் 'உளமனயாத்திரை' என்ற தொகுதியை (அது ஏற்கனவே வெளிவந்திருந்தது) வாசித்தபொழுது அப்புலப்பதிவு சரியென்றே தோன்றியது.


இவையிரண்டுக்கும் பின்னர்தான் 'காலச்சுவடு' மலரை வாசிக்கும் வாய்ப்புக்கிட்டிற்று. (இதுவும் முன்னர் வெளிவந்த ஒன்று. எனது கைகளுக்கு மிகக் காலந்தாழ்த்தியே எட்டிற்று.)

தொடர்ந்து, தோப்பில் முகம்மது மீரானை வாசித்தபொழுது, முதலில் புலப்பதிவாக இருந்த அபிப்பிராயம் திட்டவட்டமான கருத்தாக முகிழ்க்கத் தொடங்கிற்று.

அண்மைக் காலத்தில் தமிழ்ப் புனைகதையுலகில் தம்மை இறுகப் பதிவுசெய்து கொண்டுள்ள படைப்பாளிகள் சிலரை வரிசைப்படுத்திப் பார்ப்போம்.

கோணங்கி
தமிழ்ச்செல்வன்
ஜெயமோகன்
விமலாதித்த மாமல்லன்
சுரேஸ்குமார இந்திரஜித்
ரஞ்சகுமார்
உமா வரதராஜன்
தோப்பில் முகம்மது மீரான்

இவர்களுடைய ஆக்கங்களுடன் பரிச்சயமானவர்களுக்கு ஒரு உண்மை நிச்சயமாகப் பளிச்சிடும்.



இவர்கள் பார்வை ஏறத்தாழ ஒரே மாதிரியானது. அதேவேளையில் மற்றைய எழுத்தாளர்களின் நோக்கிலிருந்து வித்தியாசப்பட்டது.

இவர்களது பொதுப் பண்புகளாக பின்வருவனவற்றைச் சொல்லலாம்:

கதைச் சித்தரிப்பின் பொழுது பாத்திரங்களை மிக ஆழமாக - பாத்திரங்களின் மனசை மிக ஆழமாகப் பார்க்கும் தன்மை.

முற்றிலும் ஆள் நிலைப்பட்ட தனிமனித அநுபவங்களே மேற்கிளம்புகின்றன.

சிலர் சமூகப் பிரக்ஞையுடன் சித்தரிப்பர். சிலர் அந்தப் பிரக்ஞையில்லாமல் தனியே பாத்திரத்தின் ஆள் நிலைப்பட்ட உள்மன ஓட்டத்தைச் சித்தரிப்பவர்களாகவுள்ளனர்.

இவர்களின் கதை கூறுமுறை (Narration) வித்தியாசமானது.

இவர்களின் "மொழி" வித்தியாசப்பட்டது.

இந்த மாற்றங்கள் எண்பதுகளின் நடுக்கூற்றிலிருந்து தெரியவந்து தொண்ணூறுகளில் முனைப்படைந்துள்ளன.

இக்கட்டத்தில், புனைகதை என்னும் வடிவத்தின் இயல்புகள் பற்றி நினைவூட்டிக்கொள்ளல் அவசியமாகின்றது.

எழுத்தாளர் தான் பார்த்துக் "கதையை" ஒருங்கமைத்துக்கொள்ளும் முறைமையில், புனைகதையானது நிஜவாழ்க்கையில் ஒரு மாதிரியாக அமைகின்றது.

இந்த "மாதிரிய" அமைப்புக்கு எழுத்தாளரின் அநுபவம் முக்கியமாகின்றது.

கதையைச் சொல்லுவதற்குத் தீர்மானித்துக்கொண்ட நோக்கு முறைமை இந்த மாதிரியத்தின் தன்மையைத் தீர்மானிக்கும்.

மேற்கூறிய எழுத்தாளர்கள் தீர்மானிக்கும் நிஜவாழ்க்கையின் மாதிரியங்களையும், அவர்கள் "கதைகூற" எடுத்துக்கொள்ளும் கோணத்தையும், அதற்குப் பயன்படுத்தப்படும் மொழியையும் நோக்கும் பொழுது, இந்த எழுத்தாளர்கள், முந்திய எழுத்தாளர்களிலிருந்து வேறுபட்டவர்கள் என்பது தெரியவரும்.

இக்கட்டத்தில் புனைகதை வடிவம் பற்றிய சில வரலாற்றுண்மைகளை மீட்டுக்கொள்ளல் அவசியம்.

புனைகதையின் வருகையுடனும் ஏற்புடனும் யதார்த்தபாணி எழுத்து தவிர்க்கமுடியாத ஒன்று ஆகின்றது.

இந்த யதார்த்த முறைமை வந்தபொழுது, எழுத்தாளன் விவரிக்கின்றவனாக மாத்திரமில்லாமல் (காவியங்கள்) பிரதானமாக அவதானிப்பாளனாகவே அமைந்துவிடுகின்றான். அந்த அவதானிப்பின் மூலம், தனது நோக்குக்கு ஏற்ப

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


சிலவற்றை முதன்மைப்படுத்திக் "கதையை" ஒழுங்குபடுத்திக் கொள்கிறான்.

அவதானிப்பவனாக இருப்பதனால் இவனிடத்து ஒரு புறநிலை நோக்கு அவசியமாக வேண்டப்படும். (புறநிலை நோக்கு என்பதிலும் பார்க்க "விடயநோக்கு" என்பதே பொருந்தும். அதாவது எடுக்கும் பொருளை தனக்கு அப்பாலான ஒரு விடயமாக/பொருளாக (Object)ப் பார்த்தல்) அவ்வாறு அவன் நோக்குவது தனது வாழ்க்கையாகக் கூட இருக்கலாம். ஆனால் அதனையும் அவன் "அவதானிக்கின்றான்".

இந்தப் புறநிலை அவதானிப்புக்கான மன நிலையை, நோக்கு திறனை அவனது கருத்துநிலை தருகிறது.

அந்த நிலையில் அவன் அப்பொருளை "எடுத்துக்கூறுகின்ற முறைமை" அல்லது கதை சொல்லுகின்ற முறைமை அவதானிப்பவரின் தன்மையிலேயே அமையும்.

பெரும்பாலான புனைகதைகளை எழுதும் பொழுது பெரும்பாலான புனைகதை ஆசிரியர்கள் இம்முறையிலேயே எழுதுகின்றனர்.

இப்படி எழுதும் பொழுது யதார்த்தமும் சில மரபுகளை மேற்கொண்டு விடுகிறது.

இந்தப் புதிய எழுத்தாளர்களோ தாம் எழுதும் வாழ்க்கையை, அவதானிப்பாளராக இல்லாமல் அதாவது தூரப்படுத்தி வைத்துப் பார்த்து மற்றவர்களுக்குச் சொல்பவர்களாக இல்லாமல், தாம் சொல்லுகின்ற விடயத்தினுள் தாமும் நிற்பவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

இவர்கள் தாம் சித்தரிக்கும் வாழ்க்கையை வெளியே நின்றுகொண்டு பார்க்காமல், அதற்குள்ளேயே நின்றுகொண்டு, தமது அநுபவங்களினூடாகப் பார்க்கிறார்கள்.

இதன் காரணமாக இவர்களின் "கதை சொல்லும் முறைமை" மாறியுள்ளது. இவர்கள் கதைகளில் யதார்த்தம் புதியவடிவத்தை எடுக்கின்றது.

**கல்கண்டு**

இந்தச் சொல்லைப் பிரித்தால் இரண்டு சொற்கள் வரும். 'கல் + கண்டு'. இந்தச் சொற்களை முன் பின்னாக மாற்றிப் போட, 'கண்டு + கல்' என்று வரும். கற்கவேண்டியதைக் கண்டு கற்பாயாக!

\- காஞ்சிப் பெரியவா -

இது ஒரு ஆள் நிலைப்பட்ட மொழியைக் கொண்டுள்ளது. (ஜெயமோகனின் "நாகம்" இதற்கு நல்ல உதாரணம்)

இவர்கள் இவ்வாறு உள் நின்று பேசுவதால் மொழியில் மாற்றம் உண்டாகி விடுகின்றது. முழுமையான வாக்கியங்கள் என்பது முழுமையான சிந்திப்பின் வெளிப்பாடு. சிந்திப்பில் முறிவுகள், தொடர்பின்மைகள் இருப்பின், அது வாக்கிய அமைப்பிலும் தெரியவரும்.

இந்த எழுத்தாளரின் மொழியமைதியைப் பார்க்கும்பொழுது, இவர்கள் அந்தக் கதையின் உள்ளிருந்துகொண்டு அதனை எடுத்துக் கூறுவது தெரியவரும். ("கோசலை" நல்ல உதாரணம்)

இத்தகைய ஒரு நிலையில் மனப்பதிவுகளைச் சுட்டுகின்ற சொற்களின் அமைவு முறைமையே தெரிய நிற்கும்.

இத்தகைய மாற்றம் ஓவியத்திலும் ஏற்பட்டது.

இதன் காரணமாக தமிழ்ப் புனைகதையின் மொழிநடை மாறத் தொடங்கியுள்ளது. இந்த மாற்றத்தை முன்னர் நாம், மௌனி, லா. ச. ரா. ஆகியோர்களிடத்துக் கண்டுள்ளோமெனினும், அது இப்பொழுதே ஒரு குறிப்பிட்ட இலக்கிய நோக்குடன் இணைந்துவருகின்றது.

கி. ராஜநாராயணன் பயன்படுத்தியுள்ள நாட்டார் முறைமைக் கதைசொல் மரபும் இவர்களுக்குப் பெரிதும் உதவியுள்ளது.

இந்த மொழி, படிமங்களை நம்பி நிற்கின்ற ஒன்றாகும். "கோசலை" என்பது ஒரு நல்ல படிமம். போராளி ராமனாக நிற்கிறான் என்பது அவன் தாயைக் கோசலை என்பதன் மூலம் முனைப்புடன் தெரியவருகிறது. ஜெயமோகனின் "திசைகளின் நடுவே" என்னும் சிறுகதையிலும் இந்தப் படிமப் பொலிவைக் காணலாம்.

மேலும் இந்த எழுத்து முறைமை காரணமாக எழுதப்பட்டிருப்பதற்கு இரு நிலைப்பட்ட கருத்துக்கள் உண்டாகின்றன. வெளிப்படையாக சொல்லப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு கருத்து. அதை வாசிக்கும் பொழுது, அதன் உள்ளார்த்தமாக இருக்கும் ஒரு "தொனி"ப் பொருள் என இரு நிலையில் அர்த்தம் ஏற்படுகின்றது.

இந்த எழுத்து முறைமையின் ஒரு முக்கிய அம்சம் இது சனரஞ்சகச் சஞ்சிகைகளிற் காணப்பட்டமையாகும்.

இது ஒரு முக்கியமான விடயம். ஏனெனில் நமக்குச் சஞ்சிகைகள் மூலமாகவே புனைகதை வடிவமே வந்தது. புனைகதை இத் தளத்திலேயே வளர்ந்தது.

ஆனால் இன்றோ காத்திரமான புனைகதை சனரஞ்சகச் சஞ்சிகைகளிலிருந்து விலகிவிட்டதென்றே கூறவேண்டும்.

சனரஞ்சக சஞ்சிகைகளில் வரும் பொழுது வாசகமட்டத் தேவைகளுக்காகத் தன்னை இயைபுபடுத்திக்கொள்ள வேண்டிய ஒரு தேவையிருந்தது. இப்பொழுது அந்த "விட்டுக்கொடுப்பு" அவசியமில்லை. அத்தகைய நெகிழ்ச்சி வாசிப்புக்கான புனைகதைகள் தனியாகவே பிரசுரிக்கப்படுகின்றன.

இந்த நிலையில் புனைகதை அதன் செம்மையுடன் பொலியத் தொடங்குகின்றது.

மேனாடுகளில் இரண்டாவது உலகயுத்தத்தின் பின்னரும், பின்னர் 1967 இன் பின்னரும் ஏற்பட்ட மாற்றங்கள் இப்பொழுது தமிழினுள்ளும் வந்துவிட்டன.

இந்த மாற்றங்கள் சர்வதேசப் புகழ்படைக்கத்தக்க நாவல்களை வெளிக்கொணரவேண்டும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# கும்பிட்டு வாழமாட்டோம்

சோ. பத்மநாதன்

## 1

வெள்ளைக் கோக்குகள் காலைப் பொழுதிலே
வீதி ஓரமாய் மெல்ல நடந்தன!
கள்ள மற்ற சிரிப்பில் அச் சூழலே
கலகலத்தது; கையை அசைத்துத்தம்
பிள்ளைகள் நடைபயிலும் அழகிலே
பெற்றவர்தம் கவலை மறந்தனர்
“பள்ளி செல்லுகின் றார்கள்தம் பாடங்கள்
படிப்பர், நாளை அவர்கள் உடையது.”

புத்த கப்பைமுதுகில் சுமந்தவர்,
போத்தல் தோளில் அசைய நடந்தவர்,
சித்தி ரத்துக் குரியதாள், தூரிகை,
தீட்டும் வண்ணக் கலவை, சிமிழுடன்
கொத்துப் பூக்கள்செண் டாகப் பிடித்தபூங்
கொத்துக்கள் வாய் பிளந்தசெம் மாதுளை
முத்தை ஏந்தி பால்மணம் மாறிலா
முறுவலர், அடிபெயர்த்துமுன் போயினர்!

ஊழிக் காற்றுஅத் திசையினை நோக்கியே
ஓர் நொடிக்குள் நெருங்கிய தாமெனப்
பேரிரைச்சல் - வான் முகடிரண் டாகியே
பிய்ந்து கீழே வீழ்ந்தது மாதிரி!
சூழல் யாவும் புகையும் கரியுமாய்ச்
சுக்கு நூறுபட, நெடும் ஆலொன்று
வேரோடும்தரை சாய்ந்தது! பாதகர்
வீசு குண்டுஇத் தனையும் புரிந்தது!

வெள்ளைச் சீருடை செந்நிற மாயது
வீதி எங்கும் குருதி மணத்தது
பள்ளிப் பைஒரு பற்றையில் தொங்க, ஓர்
பாத ரட்சை தனித்துத் தவித்தது
‘தள்ளிச் சற்றுக் கிடந்தது மானிடத்
தலை’ என்றே யொரு செய்தி பறந்தது
பிள்ளைப் பிஞ்சு நடந்தஅம் மண்ணிலே
பெரிய தோர்குழி வாயைப் பிளந்தது!

## 2

பத்து வருஷம் பறந்தோடி விட்டாலும்
பெற்ற வயிற்றின் பிரலாபம் ஓய்ந்திடுமா?
குஞ்சு சிறகு முளைத்துப் பறந்ததுவோ!
கோழி அதைப்போட்டுக் கொத்தித் துரத்தியதோ!
எங்கோ தொலைவில் இருந்தே அவன் எழுதும்
வானஞ்சல்கூட வழிமாறும் என்கின்ற
‘ஞானம்’ தளர்ந்த உடலை நலிவுறுத்தும்!
பெற்ற மனத்தின் ஏக்கம் உணராதோர்
கற்பழித்த பின்னர் அனுப்பும் கடிதங்கள்
வந்தாலும் வராதொழிந்தாலும் ஒன்றென்றே
நொந்த ஒருதாய் கொழும்பு நகர்நோக்கிப்
போகப் புறப்பட்டாள்.
போய் ஒருகால் போனில்
‘நான் சாகமுன்னர் உன்’ரை சடங்குக்கு
ஒரு முடிவு சொல்! என்று கேட்கத் துணிந்தது!

www.tamileelamarchive.com

வெண்ணிலவு வீச, விரிகடலின் அலைஎற்ற
தண்ணீர் கிழித்துத் தவழும் படகுகளோ
ஒன்றன்பின் ஒன்றாய் கிளாலி இருந்து நல்லூர்
சென்றுவரும் பாதை; திசை சரியாய்த் தெரியாது!
பாதிவழி கடந்த மகிழ்ச்சி நிலைக்கவில்லை
நேவி வள்ளங்கள் நிலையாய் ஒளிபாய்ச்சி
வந்து மறித்து வயதா னவர்என்றோ,
குஞ்சு குழந்தைஎன்றோ பாராமல் குத்திவெட்டி,
சுட்டுப் படகோடு எரித்து வெறியாடி
எட்டுப் பிணங்கள் அறுவடை செய்தேகினராம்!

'கோல்' எடுத்துப் பேச, கொழும்புசென்ற பொன்னம்மா
நீலக் கடலில் நினைவாகிப் போய்விட்ட
கொடுமையினால் நெஞ்சு குமைகிறான் அன்புமகன்!

## 3

ஓடுகிற ஊர்திகளை நிறுத்தி உள்ளே
இருக்கின்ற தமிழரைஒவ் வொருவ ராக
தேடி, அவர் களுக்குள்ளே புலியைக் கண்டு
சிலிர்த்து உணவு விடுதிகளைத் தடவி, மற்றும்
வீடுகளில் வந்தவிருந் தினரை அள்ளிக்
கொண்டுபோய் விடுவிக்க லஞ்சம் கோரும்
கேடுகெட்ட அரசுக்குக் கொடியேன்? ஆல
வட்டமேன்? குடையேன்? செங்கோல்தான் ஏன், ஏன்?

"வடக்கில் ஒரு வரிப்புலியை ஆளவிட்டோம்!
மலையகத்தைக் கிழப்புலிக்குத் தாரைவார்த்தோம்!
கிழக்கு எமது கைக்குள் என்றோம்; ஆனால் காடு
கிடுகிடுக்கும் உறுமல்களைக் கேட்டு நொந்தோம்!
இடைக்கிடையே எல்லைகளைத் தாக்கிஎம்மை
ஈடாட வைக்கிறார் என்றே ஓடி
கடற்பரப்பில் நின்றாலும் கண்ணிவைக்கக்
கலங்குகின்றோம்!" எனப்புலம்பும் கயவர்முன்னே -

கும்பிட்டா நிற்பான்இத் தமிழன்? தங்கக்
கூட்டுக்குள் அடைபட்டா கிடப்பான்? அல்ல!
நம்பிக்கை இழந்தவனாய் நாட்டைவிட்டு
நாலு திசையும் திரிந்து தொழும்பு செய்து
கும்பிக்கு வழிதேடும் கூட்ட மாக
குனிந்ததலை நிமிராது கூனிக்கூனி
வெம்பிப்போய் நடைப்பிணமாய் வீழ்வா னோடா?
விடுதலையை வேட்டெழுந்து வாழ்வா னோடா?

செம்பாட்டுக் கைகால்கள் சிதறிப் போக
சிறிசுகளை ஷெல்ஏவிக் கொன்று தீர்த்தும்
அம்பிட்ட பேரைநடுக் கடலில், ஆண் பெண்
மூப்பு, இளமை பாராது சுட்டுக் கொன்றும்
கும்பிட்ட கைகளையும் வாளால் வெட்டிக்
குவிக்கின்ற கொடியரையும் மனிதர் என்று
நம்பிப்போய் அவர்க்கேவல் செய்து, பிச்சை
நச்சுகிற கூட்டமாய் வாழ மாட்டோம்!

"சிங்களர்தம் தாயகம்இந் நாடு; வந்த
செந்தமிழர்க் கிடமில்லை; பௌத்த மார்க்கம்
எங்களது தனிஉடமை; மாநா யக்கர்
திருவுள்ளக் குறிப்பறிந்து நடந்து கொள்வோம்!
சங்கடங்கள் ஏற்பட்டால் வழிகாண்டற்குத்
தம்மபதம் துணையாகும்! ஐயமிலை
எங்கெழிலென் ஞாயிறெமக்கு!" என்று பேசும்
இவரைப்போய்க் கும்பிட்டா வாழ்வதையா?

மாவில்லை, மருந்தில்லை, சீனிஇல்லை,
மண்ணெண்ணெய் இல்லை, காய்கறிகள் எல்லாம்
தேவர்தம் உலகுவரை உயர்ந்தபோதும்
செயலற்றுத் தமிழர்குலம் இருந்ததில்லை!
கோயில்கள் விழாக்கள் கலைநிகழ்ச்சிக் கேதும்
குறைவில்லை! எமதுதலை குனிந்ததில்லை!
சேவல்தன் சிறகடித்துக் கூவக் கேட்டோம்;
"திருநாடு மீளும்!" அதுவொன்றே வேட்டோம்!

### யார் அந்தக் கவிஞர்?

*'ஓடையிலே என் சாம்பர்
ஓடும்போதும்
ஒண் தமிழே சலசலத்து
ஓடவேண்டும்
பாடையிலே படுத்தூரைச்
சுற்றும் போதும்
பைந்தமிழில் அழும் ஓசை
கேட்க வேண்டும்!'*

அந்தக் காலத்தில் அரசியல் மேடைகளில் பேசிய சொற்பொழிவாளர்கள் அடிக்கடி இப்பாடல் வரிகளைப் படித்து மக்களை உசார்ப்படுத்தினார்கள்.

இந்தப் பாடலை எழுதியவர் நாமக்கல் கவிஞரென்றும், 'பாரதி', என்றும் 'பாரதிதாசன்', என்றும் 'கண்ணதாசன்' என்றும் மனம் போன போக்காகச் சொல்லி வந்தார்கள்.

ஆனால் இந்தப் பாடலை எழுதியவர் எங்கள் யாழ்ப்பாணத்துக் கவிஞரே! அவரது கவிதைத் தொகுதியில் இந்தப் பாடல்கள் இருக்கின்றன.

அவர் பெயர்; பண்டிதர் க. சச்சிதானந்தன். நூல்; ஆனந்தத் தேன். மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கவிஞர் சச்சிதானந்தன் இப்போது இணுவிலில் வசித்து வருகிறார்.

நன்றி: 'அறிவுக் களஞ்சியம்'

தமிழீழ ஆவணக் காப்பகம்
www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பனைவள உற்பத்திப் பணியாளர்களுக்கு மேலதிக பயிற்சி

பனைவள உற்பத்திப் பொருட்கள் பண்டைக் காலந்தொட்டு நம்நாட்டில் பாவிக்கப்பட்டு வருகின்றன. கைப்பணிப் பொருட்களாகவும், உணவுப் பொருட்களாகவும் இவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

பனஞ்சாற்றில் இருந்து கள், பதனீர் போன்றவை பெறப்பட்டன.

பதனீரைக் காய்ச்சி பனை வெல்லம், கல்லாக்காரம் போன்றவை பெறப்பட்டன.

பனம்பழச் சாற்றிலிருந்து பனாட்டு, பணியாரம் போன்ற உணவுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

பனை விதையை பாத்திபோட்டு கிழங்கு எடுத்து ஒடியல், புழுக்கொடியல் போன்ற உணவுகள் பெறப்பட்டன.

பனையில் இருந்து பெறக்கூடிய சுவைநீரை நுண்ணுயிர்கள் தாக்கிப் புளிப்படையச் செய்யாவணணம் சிறிது நேரம் பாதுகாப்பதற்காக சுண்ணாம்பு பயன்படுத்தப்பட்டது.

இப்படி சுண்ணாம்பு கலக்கப்பட்ட பனஞ்சாறான சுவைநீர் பதநீர் எனப்பட்டது. பதனீர் நீண்ட நேரம் பழுதடையா நிலையில் இருக்கமாட்டாது. எனவே உடனடியாக அதைச் சூடேற்றிக் காய்ச்சி பனையோலைக் குட்டானிலிட்டு பனங்கட்டியாக்கப்பட்டது.

பதனீரைக் காய்ச்சிப் பெறப்பட்ட பாணியிலிருந்து கல்லாக்காரம் எனப்படும் பனங்கற்கண்டு செய்யப்பட்டது.

பதனீரைக் காய்ச்சி பதனிடும் செயற்பாடு பனந்தோப்புக்குள்ளேயே நடைபெற்று வந்தது.

அளவுக்கதிகமாக பதனீர் காய்ச்சப்பட்டால் வெல்லம் கருகிவிடும். குறைவாகக் காய்ச்சப்பட்டால் கெட்டியாகாது. பதனீரில் சுண்ணாம்பு அதிகமானால் வெல்லத்தில் இனிப்பைவிடக் காரம் மேலோங்கி நிற்கும். சுண்ணாம்பு குறைவாகக் கலக்கப்பட்டால் பதனீர் புளித்துவிடும்.

சுண்ணாம்புச் செறிவைக் கணிக்க, வெப்பத்தை அளவீடு செய்ய ஏந்தவித கருவிகளும் அக்காலத்தில் இருக்கவில்லை.

தொன்றுதொட்டு வந்த அனுபவத்தின் மூலமே இவை தீர்மானிக்கப்பட்டு பதம் கண்டுகொள்ளப்பட்டது. இச் செயற்பாட்டில் சிலர் கைதேர்ந்த நிபுணர்களாக இருந்தார்கள்.

தரமான பனைவெல்லம், கல்லாக்காரம் போன்றவற்றை உருவாக்குவதற்கு தரமான பதனீர் உற்பத்தி, பதம்-பருவம் கண்டுபிடித்தல் போன்றவை முக்கிய தொழிற்கலைகளாக இருக்கின்றன.

ஆண்கள் பதனீர் உற்பத்தி செய்து கொடுக்க அவரவர் வீட்டுப் பெண்களால் பனந்தோப்புக்குள்ளேயே சிறிய பாத்திரங்களிலிட்டு உடனடியாகக் காய்ச்சிக் குட்டானில் ஊற்றிக் கட்டியாக்கப்பட்டு வந்த இவ்வுற்பத்தி தற்போது நிறுவன ரீதியாக மாற்றம் பெற்றுள்ளது.

உற்பத்தியாளர்களிடமிருந்து பதனீர் பெருந்தொகையாக சேகரிக்கப்பட்டு, உற்பத்தி நிலையங்களுக்கு எடுத்துச்சென்று பெரிய கொள்கலன்களிலிட்டு பாரிய அடுப்புக்களில் ஏற்றிக் காய்ச்சி, சுண்ணாம்புக் காரம் அளவீடு செய்யப்பட்டு, தீங்கற்ற இரசாயனப் பொருட்பாவனை மூலம் மேலதிக காரம் பகுக்கப்பட்டு, பாணியாகக் காய்ச்சி அச்சுக்களில் ஊற்றி கட்டியாக்கப்படுகிறது.

நெடுங்காலமாக தனிநபர்களால் குடிசைத் தொழிலாக மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்த இவ்வுற்பத்தி தற்போது பனை, தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கங்கள், பனை அபிவிருத்திச் சபை போன்ற துறைசார் நிறுவனங்களால் செய்யப்படுகிறது.

இத் தொழில் நிறுவன ரீதியாக மாற்றம் அடைந்ததைத் தொடர்ந்து உள்ளூரில் கிடைக்கக்கூடிய தொழில்நுட்ப, விஞ்ஞான முறைகளைப் பிரயோகித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் பயனாக பனஞ்சீனி, பழச்சாற்றிலிருந்து ஜாம், கோடியல் போன்ற பொருட்கள், போத்தலில் அடைத்து பதப்படுத்திய கள், மதுசாரம் (சாராயம்) போன்ற இன்னும் பல பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உற்பத்தி நிலையங்களில் கடமை புரியும் பணியாளர்களின் தொழில் சார் திறமை, அனுபவம், தொழில்நுட்பம் போன்ற வளங்களுக்கு அமைவாக இந்த உற்பத்திப் பொருடகளின் தரம் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

தேர்ச்சியாளர்களால் உற்பத்தி மேற்கொள்ளப்படும்போது அதிகரித்த தரமான உற்பத்தி, குறைவான சேதாரம் போன்ற அனுகூலங்களும் உண்டு.

தேர்ச்சி பெற்ற பணியாளர்களைக் கொண்ட உற்பத்தி நிலையங்கள் அதிக நன்மை பெறும் வாய்ப்பு உண்டு.

சிலருக்கு குறிப்பிட்ட சில துறைகளில் மட்டுமே தேர்ச்சி காணப்படுகின்றது.

தற்போது இருக்கின்ற உற்பத்திப் பணியாளர்களை பல் துறைசார்ந்த தேர்ச்சியாளர்களாக்குவதன் மூலம் உற்பத்தி நிலையங்களும், அதனூடாக அங்கத்தவர்களும் அதிக நன்மை பெறமுடியும்.

இதனைக் கருத்திற்கொண்ட

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் உற்பத்திப் பணியாளர்களுக்கு மேலதிக பயிற்சி வழங்கும் திட்டம் ஒன்றைத் தீட்டிச் செயற்படுத்தினார்கள்.

பனை வள உற்பத்திப் பொருட்களுக்கான தரக்கட்டுப்பாட்டுப் பயிற்சிகள் துறைசார் நிபுணர்களால் வழங்கப்பட்டன.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றும் உற்பத்திப் பணியாளர்கள் பயிற்சியாளர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

ஏழுநாட்களாக நடாத்தப்பட்ட இப்பயிற்சி நெறியில் பின்வரும் தலைப்புக்களில் விரிவுரைகள் நடாத்தப்பட்டன.

1. பதனீர் உற்பத்திப் பொருட்களின் தரக்கட்டுப்பாடு.
2. சந்தைப்படுத்தலும், யுக்திகளும்.
3. பனஞ்சீனி உற்பத்தியும் தரக் கட்டுப்பாட்டு நியமங்களும்.
4. தரக்கட்டுப்பாடும், ஆய்வுக்கூடச் செயல்முறையும்.
5. உற்பத்திச் செலவீன மதிப்பீட்டு முறைகள்.
6. பனை வெல்ல, பனங்கல்லாக்கார உற்பத்திகளும், தரக்கட்டுப்பாட்டு நியமங்களும்.
7. வடித்தலுக்குரிய கள், பாணியின் தரக்கட்டுப்பாடும் அனுகூலங்களும்.
8. உற்பத்தி நிலையங்களில் சுகாதார முறை பேணப்படுத்தல்.
9. கணக்கியல் துறை
10. சிறுகைத்தொழில் முயற்சிகளும், வங்கிகளின் பங்களிப்பும்.
11. பனம்பழ உற்பத்திகளின் தரக் கட்டுப்பாடும், தரக்கட்டுப்பாட்டு முறைகளும்.
12. பனை அபிவிருத்தியின் கண்ணோட்டம்.
13. கூட்டுறவில் மக்களின் பங்கு.

விரிவுரைகளோடு இரண்டு நாள் செய்முறைப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

*ஒஷ்விற்ஜ், ட்றெப்லின்கா இரண்டும் ஹிட்லரின் இனக்கொலை முகாம்களில் பிரசித்தி பெற்றவை. லட்சக்கணக்கில் மனிதர்களைக் கொல்வதை, அவர்கள் உடைமைகளை ஒழுங்காகச் சேகரிப்பதை, அவர்கள் உடல்களை பாரிய உலோக உலைமுகங்களில் எரிப்பதை ஒரு கலையாகச் செய்த கொடுமை இக் கவிதையில் சித்தரிக்கப்படுகிறது.*

# யாருக்கு நினைவிருக்கிறது?

உழாத தறையை
வருடும் காற்றை
புல்லை வளரத் தூண்டும்
வெயிலை,
யாருக்கு நினைவிருக்கிறது?

ஒவ்வொரு வசந்தத்திலும்
குளிர்ந்த கண்ணீர் பொசியும்
வெண்பனியை,
மறந்துபோன எட்டுலட்சம் பேரின்
மரணங்களை,
யாருக்கு நினைவிருக்கிறது?
ஏற்பாடுகள் செய்வதில்
வல்லவர்கள் ஜேர்மனியர்கள்
இறக்கம்,
புறப்பாடு,
இடையில் நாற்பத்தைந்து நிமிடம்
மட்டுமே
தங்கப்பல் மீட்கப்பட,
மயிர் சுளையப்பட,
உடைகள் தரம்பிரிக்கப்பட,
நீண்ட அகழிகளில்
உடல்கள் புதைக்கப்பட
நாற்பத்தைந்து நிமிடங்கள் மட்டுமே!
அகழிகளைத் தோண்டும்
நீண்ட உருக்குக் கரங்களை,
ஆழப்போய்
நிணம் சேரும் பிணங்களை
வாரிவரும்
முள் இடுக்கிகள்,
உருக்குலைந்த உடல்களை
அங்காந்த
உருக்கு வாய்களுள் போட,
அவை,
வான்நோக்கி எழுந்து,
தயங்கி,
நடுங்கிய பின்
தமது சுமையை
கீழே எரியும்
ஜுவாலையுள் வீச
யாருக்கு நினைவிருக்கிறது?

மிரண்ட கண்களையுடைய
பையன்கள்,
குழந்தையைத் தாலாட்டும் தாய்,
பிரார்த்தனை செய்வதற்கு
நடுங்கும் கைகளால்
தன் மேலங்கியைத் தேடும்
நிர்வாணமான கிழவன்,
மெல்லிடையும்
நிமிர்ந்த முலைகளுமாய்
காதலுக்குத் தயாரான
அவ்வழகிய கன்னி,
யாருக்கு நினைவிருக்கிறது?

அகழிகளை,
சாம்பல் கொண்டு தூருங்கள்
உழவு சால்களை
மட்டந்தட்டி
புல்லை,
மரங்களை,
பூக்களை
நடுங்கள்.
வெண்மையான
நடைபாதை அமையுங்கள்!
வாங்குகள் போடுங்கள்–
பொதுப் பூங்கா!
பூக்கள் மலரும்.
சுவடுகள் இரா.
சுவடே இராது
சாவு மட்டுமல்ல,
சர்வ சங்காரம்.
சூன்யம்.
ஈற்றில்–
பாதாளம்!

*- ஆன் றணசிங்கா -*
*தமிழாக்கம்: கவிஞர் சோ. ப*

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# 'சுதந்திர தாகம்'

இசை வடிவம்

வெளியீடு – தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் – நோர்வே

இந்த இசைத்தட்டு எழுப்புகின்ற ராகம் இனிது. பாடல் புதிது.
புலம் பெயர்வாழ்வின் சோகம் தெறிக்கிறது.
தாயை, தாய்த் தேசத்தை நினைந்து
உருகிப் பாடுகின்ற பாடல் நெஞ்சுள் சிலிர்க்கிறது.
ஈரமண்ணில் குழந்தை பாதம் பட ஓடித் திரிவது போல
ஒரு சுவட்டின் உச்சரிப்பு ஒழித்திருக்கிறது.
தென்றலில் சுமந்து வருகின்ற இதம் இருந்த போதும்
அந்தப் பாடல்களுக்குள் நெருப்பும் இருக்கிறது.

www.tamileelamarchive.com